R. R. No. 39/68 A80 (B)

வெளியீடு—2—2—1968]
Issued—2—2—1968]

MADRAS RECORD OFFICE
1935
20 MAR 1968
EGMORE, MADRAS 8

தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

274

திங்கட்கிழமை, 1967 ஜூலை 3
Monday, 3rd July 1967

தொகுதி III—எண் 5
Volume III—No. 5

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50
Price

V211, 31 N67
N67. 3.5

N211.31 N67
N67-3.5

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	வினாக்கள்—விடைகள்	413–424
2.	ஒத்திவைப்புத் தீர்மானம்.	
	தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மறு சீரமைப்பும், துயர் தீர்க்கும் நடவடிக்கைகளும்	424–425
3.	அறிவிப்பு—	
	மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் (Senate) தேர்தல்	425
4.	ஒழுங்குப் பிரச்சினைகள்.—	
	(அ) சட்டப் பேரவை நடவடிக்கைகள் குறிப்பு நகல் நூலகத்தில் வைக்கப்படாமை	426–427
	(இ) பேரவை நிகழ்ச்சிகள் தொடங்குமுன் கட்சித் தலைவர்களுடன் பேரவைத் தலைவர் கலந்து பேசுதல்	
5.	1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்புத் தொடர்ச்சி—	
	கோரிக்கை எண் I—நிலவரித்துறை	427–489
	கோரிக்கை எண் IV—முத்திரைத்தாள்கள் நிர்வாகம்	
	கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு	
	கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு	
6.	பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்	489–490

64971

தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 ஜூலை 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாலை நேரக் கல்லூரிகள்.

*** 137 வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

மாலை நேரக் கல்லூரிகளை அதிகரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சியிலே படித்த பெண்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் திருச்சியில் பெண்களுக்கு மாலை நேரக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருச்சியிலே பெரும்பாலாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகள் அரசாங்கத்தின் சார்பிலேதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தனியார்கள் ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களேயானால், அப்படிப்பட்ட கோரிக்கை வருமானால் அது கவனிக்கப்படும்.

திரு. கே. விநயகம் : இப்பொழுது கல்லூரிகளிலே சேருவதற்கு மாணவர்கள் ஏராளமாக இருப்பதினாலே, அவர்கள் எல்லாம் இடம் கிடைக்காமல் த த் த ளி த் து க் கொண்டிருப்பதினால், மாலை நேரக் கல்லூரிகளில் அல்லது ஷிஃப்ட் சிஸ்டத்தில் அவர்களுக்கெல்லாம் இடம் தேடிக் கொடுப்பதற்கு, குறிப்பாக, க்வீன் மேரீஸ் கல்லூரி, பிரசிடென்சி கல்லூரி, கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் கல்லூரி போன்ற கல்லூரிகளில் அரசாங்கம் ஏற்பாடு செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பு படித்துவிட்டு வேலையில் இருப்பவர்களுக்கு, மீண்டும் படிப்பதற்கு மாலை நேரக் கல்லூரிகளில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஷிஃப்ட் சிஸ்டத்தின் மூலம் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது. அவைகளை ஏற்படுத்துவதற்கான உரிமை பல்கலைக்கழகத்திற்குத்தான் இருக்கிறது. அடுத்த ஆண்டு இதைக் கொண்டுவரலாம் என்று துணைவேந்தர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்போது இட நெருக்கடி ஏற்படாமல் இருப்பதற்காக இரண்டு வகுப்புகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கலைக் கல்லூரியில் இரண்டு வகுப்புகளில், ஒரு வகுப்பில் 85 பேர்களும், இன்னொரு வகுப்பில் 90 பேர்களும் படிப்பதற்கு இடம் தரப்பட்டிருக்கிறது. இதுபோன்று வேறு பல கல்லூரிகளில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷிஃப்ட் சிஸ்டத்திற்கு பேராசிரியர்கள், விரிவுரை ஆசிரியர்கள், இடவசதிகள் போன்றவை தேவைப்படுகின்றன. ஷிஃப்ட் சிஸ்டம் சென்னை கலைக் கல்லூரியிலும், மேரி அரசிக் கல்லூரியிலும் வைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

திரு. முனு ஆதி : மாலைக் கல்லூரிகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் குறைவாக இருப்பது காரணமா? அல்லது நிதிநிலைமை குறைவாக இருப்பது காரணமா? அதிகமான மனுக்கள் வந்திருந்தும் இடநெருக்கடியை நீக்காமல் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த மாலை நேரக் கல்லூரிகளில் சென்னையில் அரசினர் கலைக்கல்லூரி, மேரி அரசிக் கல்லூரி, கோயம்பத்தூர் கலைக் கல்லூரி, சேலம் கலைக் கல்லூரி, தஞ்சை சரபோஜி கல்லூரி, மதுரை மீனாட்சி பெண்கள் கல்லூரி இவற்றில் மாலை நேர வகுப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இடங்களை விரிவுபடுத்துவதற்கு இடவசதிகள் பெருக்கப்படுகின்றன. இது சம்பந்தமாகத் தனியார் கல்லூரிகள் முன்வருமானால் அதுகுறித்து அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சிபார்சு செய்யும்.

Dr. H. V. HANDE : In these evening classes and also in the colleges that have the shift system, the lecturers are not properly paid for the extra work that they are doing and so, a number of colleges are not keen on these evening classes or the shift system. Under these circumstances, will the Government examine the necessity for increasing the pay of the lecturers or for giving some extra amount as bonus commensurate with the extra work that they are doing ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாலை நேரக் கல்லூரிகளுக்கும், ஷிப்ட் சிஸ்ட் முறைக்கும், பேராசிரியர்களும், விரிவுரை ஆசிரியர்களும் தனியாக வேண்டும். அப்படி நியமிக்கும்படி அரசாங்கம் துணைவேந்தருக்குத் தெரிவித்திருக்கிறது. இடவசதியும் தேவைப்படுகிறது. இதற்கும் பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது, இப்படி ஏற்படுத்துவதற்குமுன் பல்கலைக் கழகம் பரிசீலிக்கும் என்றும், இந்த ஆண்டு இட நெருக்கடியைச் சமாளிக்க வகுப்புகள் அதிகப்படுத்த வேண்டுமென்றும் துணைவேந்தர் கூறியிருக்கிறார்.

திரு. மு. ச. சிவசாமி : கல்லூரிகளில் இந்த ஆண்டில்தான் இட நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதா? அல்லது, முந்தைய ஆண்டும் இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நெருக்கடி என்பது சில கல்லூரிகளைப் பொறுத்தது. நாம்பரத்திலே ஐ.ஐ.வி.இ.டி. என்ற கல்லூரியில் இன்னும் 200 இடங்கள் காலியாக இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, இன்னும் நிறைவு செய்யவேண்டிய இடங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப் பொதுமக்களுக்கு வானொலி மூலமாக அறிவிப்பதற்கு யோசனை இருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சியிலே ஈ.வே.ரா. பெரியார் கல்லூரி, தேசியக் கல்லூரி போன்றவைகளில் அதிக வகுப்புகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திலே அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு அதிக செக்ஷன்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருச்சியில் பெரியார் கல்லூரியில் வகுப்புகள் அதிகப்படுத்துவதற்கும், இடவசதிகள் ஏற்படுத்துவதற்கும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. பிஷப் ஹீபர் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் இடவசதி இல்லையென்றும் பல்கலைக் கழகக் கமிஷன் பார்த்துவிட்டு வந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பல்கலைக் கழகத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது,

திரு. சு. துரைசாமி : கோவை அரசினர் கல்லூரியில் மாணவர்கள் சேருவதற்கு அதிகம் வருவதனால் அங்கே மேலும் ஒரு வகுப்பை ஆரம்பிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த நிலைமை பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களும், சர்க்கார் சிப்பந்திகளாகப் பணியாற்றுகிறவர்களும் மாலை நேரக் கல்லூரிகளில் படிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா ? அல்லது சிபார்சு செய்யப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாலை நேரக் கல்லூரிகளே அவர்கள் படிப்பதற்காகத்தான் இருக்கின்றன. அரசாங்கப் பணிமனைகளில் பணியாற்றுகிறவர்களுக்கும் மற்ற பணிமனைகளில் பணியாற்றுகிறவர்களுக்கும் வாய்ப்புகள் தரப்படுகின்றன.

திரு. ஆர். கருணைப்பயா : எந்தெந்த கல்லூரியிலே மாணவர்களுக்கு இடம் இருக்கிறது என்பதை வானொலி மூலம் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி எப்போது அறிவிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரங்கள் திரட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இடம் எவ்வளவு மிச்சம் என்று இன்னும் தெரியவில்லை. மருத்துவக் கல்லூரியில் தேர்வு முடிவடைந்ததற்குப் பிறகுதான் நிலைமை தெரியும். ஏனென்றால் அங்கே இடம் கிடைக்காதவர்கள் கலைக் கல்லூரியில் வந்து சேர்வார்கள். இதைப்பற்றி செய்தித்தாள்கள் மூலமாகவும், வானொலி மூலமாகவும் அறிவிக்கப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதில் கலைக் கல்லூரியில்தான் மாலை நேர வகுப்புகள் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். தொழில் கல்லூரியிலே மாலை நேர வகுப்பு ஆம்பிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தொழில் கல்லூரியிலே ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இல்லை.

திரு. என். வரதராசன் : திண்டுக்கல்லில் பெண்கள் கல்லூரி சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அங்கே பி.ஏ. வகுப்பு ஆரம்பிக்காததால் அங்கே சேர்ந்து படிக்க முடியாமல், வெளி ஊர்களுக்குச் சென்று படிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த பி.ஏ. வகுப்பை ஆரம்பிக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரம் இல்லை. பி.ஏ. வகுப்பு ஆரம்பிக்காமல் இருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தஞ்சை சரபோஜி மாலை நேரக் கல்லூரியில் பயிலுவதற்கு, அங்கே இருப்பவர்கள் கல்லூரிக்குச் செல்ல நீண்டநெடும் தொலைவு நடக்கவேண்டியிருப்பதால் படிக்க முடியவில்லை என்பதுபற்றி அரசாங்கத்திற்கு குறிப்பு ஏதாவது அனுப்பப்பட்டிருக்கிறதா ? இதைப் பற்றி விவரம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : என்னிடத்தில் விவரம் இல்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரையில் பெண்களுக்காக இருக்கும் பாலிடெக்னிக்கில் இடவசதி இல்லாத காரணத்தால் பலர் படிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை விஸ்தரிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கே இடநெருக்கடி இருக்கிறது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், பல பாலிடெக்னிக்குகளில் இடம் காலியாக இருக்கிறது என்ற நிலைமைதான் இருக்கிறது. இதைப்பற்றித் தகவல் வந்தால் கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, many secondary grade teachers working in elementary schools wish to better their prospects by joining Evening Colleges and so, will the Government give any financial help to them to better qualify themselves ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரியில் சேருகிறவர்களுக்கு என்னென்ன தகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister for Education to state whether any step has so far been taken to increase the number of seats in Science classes in colleges ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில முக்கியமான கல்லூரிகளிலே அதிகமான வகுப்புகளைக் கொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை கலைக் கல்லூரியில் ஒரு வகுப்பு 85 மாணவர்களுக்கும், ஒரு வகுப்பு 90 மாணவர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதே நிலையில் வேறு சில கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, கல்லூரிகளில் இட வசதியைப் பொறுத்த மட்டில் கட்டிட வசதி இல்லை என்பது பரவலான ஒன்றாக இருக்கிறது. சினிமாக் கொட்டகைகள் பகல் நேரத்தில் காலியாக இருக்கின்றன. கட்டிட வசதி இல்லை என்பதைத் தவிர்க்க, சினிமாக் கொட்டகைகள் அத்தனையிலும் பள்ளிகளை ஆரம்பிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளுக்கு, பள்ளிகளுக்கு இருக்கிற சூழ்நிலை வேறு, சினிமாக் கொட்டகைகளுக்கு இருக்கிற சூழ்நிலை வேறு. இரண்டையும் ஒன்றுபடுத்துவதால், இதனால் அது கெடுமா, அல்லது அதனால் இது கெடுமா என்ற நிலையை ஏற்படுத்தக் கூடாது.

திரு. பி. ஜயராஜ் : தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், தனிப்பட்டவர்கள் நடத்துகிற கல்லூரியில் அவர்களே நடத்தவேண்டுமென்று சொல்லுகிற காரணத்தினால்—கீழ்த் தஞ்சையில் சர்க்கார் கல்லூரிகள் இல்லை—தனிப்பட்டவர்கள் நடத்துகிற கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி நடத்த வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவு இடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி உத்தரவிடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. மாலை நேரக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் முன்வந்தால், பல்கலைக் கழகத்திற்குச் சிபார்சு செய்ய அரசாங்கம் முன்வரும்.

திரு. க. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கலைக் கல்லூரியில் சேருவதற்கு 150-க்கு மேற்பட்ட பெண்கள் சேர வேண்டுமென்று விண்ணப்பம் போட்டும் இது வரையில் அரசாங்கம் அனுமதி வழங்காமல் இருக்கிறது. இந்த ஆண்டு அரசாங்கம் அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரியலூர் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளுவது பற்றிப் பல்கலைக் கழகம் அனுமதி அளிக்க முன்வரவில்லை. அங்கே பெண்கள்

படிக்கத் தனி அறை வசதிகள் வேறு வசதிகளெல்லாம் இல்லை. அதெல்லாம் ஏற்படுத்திய பிறகு கவனிக்கவேண்டும். பல்கலைக் கழகம் பி.ஏ., பி.எஸ்.ஸி., டிகிரி வகுப்புகளுக்கும், போஸ்ட்-கிராஜுவேட் வகுப்புகளுக்கும் பெண்களைச் சேர்த்துக் கொள்ள முன் வருகிறது. ஆனால், புகுமுக வகுப்பில் பெண்கள் வகுப்பில் பெண்களும், ஆண்கள் வகுப்பில் ஆண்களும் சேரவேண்டும் என்று பல்கலைக் கழகம் வற்புறுத்தி வருகிறது.

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் சமீபமாக ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, கரூர் வட்டத்தில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் படித்து எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த மாணவர்களுக்கு இடம் போதாத நிலையில் எல்லா மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளும் வண்ணம் மாலை நேர வகுப்புகளாவது ஆரம்பிக்கப்படுமா ? இதற்கு நகர சபையும், கல்லூரிக் கமிட்டியும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கும் அனுப்பி, எனக்கும் அனுப்பியிருக்கிறது. அது இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே கூறியபடி, இந்த ஆண்டு இட நெருக்கடியைத் தீர்க்க மேலும் சில வகுப்புகளைத் தொடங்க பல்கலைக்கழகம் சம்மதித்திருக்கிறது. சிலபல கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகம் சம்மதித்திருக்கிறது. சில இடங்களில் ஷி·ப்ட் முறையைத் தொடங்கலாம் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்குத் தெரிவித்து—இதற்கு முன்னால் இதற்கு அனுமதிக்காத அவர்—இப்போது அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். அடுத்த ஆண்டு, முன்கூட்டியே ஆசிரியர்கள், பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டு. ஷிப்ட் முறையை ஏற்படுத்தி நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்று இருக்கிறது. இந்த ஆண்டு நெருக்கடியைச் சமாளிக்கலாம் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு கல்லூரி என்ற அடிப்படையில் கல்லூரிகளைத் திறக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வட்டத்திற்கு ஒரு கல்லூரி என்பது அல்ல. எங்கெங்கே உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து அதிகமான மாணவர்கள் வருகிறார்களோ, கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்றால், வெகு தொலைவிற்குச் செல்லவேண்டிய நிலைமை வருகிறதோ, அத்தகைய மாணவர்களை ஈர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலை வருகிறதோ அங்கு ஏற்படுத்தலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவிலே சர்க்கார் தரப்பில் ஒரு காலேஜை ஏற்படுத்துவதுபற்றி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்றைய மாவட்டங்களை விட திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகமான அளவுக்குக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு அவை செம்மையாக நடத்தப்பட்டு வருகின்றன. எங்கு யாரும் கல்லூரியை ஆரம்பிக்க முன்வராமல் இருந்து தேவை இருக்கிறதோ அதைப்பற்றி சர்க்கார் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது சேலம் ஜில்லாவில் ஒரே ஒரு அரசினர் கல்லூரிதான் இருக்கிறது. அங்கே வேறு ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்ற முயற்சி இருக்கிறது. எங்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற தேவை இருக்கிறதோ அதைப் பார்த்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி மாலை நேரக் கல்லூரிகளைப் பற்றியது. ஆகையால், உறுப்பினர்கள் மாலை நேரக் கல்லூரிகளைப் பற்றி மட்டும் துணைவினாக்கள் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, ஆல மரத்தடியில் பள்ளிகளை நடத்த வேண்டுமென்று காலஞ்சென்ற நேரு அவர்கள் கூறி வந்தாலும், இன்றைய தினம் மாணவர்கள் அதிகமாக இருந்தாலும் வைஸ் சான்ஸலர் அவர்கள் புதுக் கல்லூரிகள் ஆரம்பிக்க அல்லது அப்—கிரேட் செய்ய......

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மாலை நேரக் கல்லூரிகளைப் பற்றிக் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : ஸார், மாலை நேரக் கல்லூரிகளைப் பொறுத்த மட்டில், சட்டக் கல்லூரியில் அது மாதிரி அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மற்றும் வெளியே உத்தியோகம் செய்கிறவர்கள் பி.ஏ. பாஸ் செய்துவிட்டு பி.எல். பாஸ் செய்ய சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆனாலும்கூட, எல்லா மனுக்களையும் ஏற்றுக்கொண்டு இடந் தராமல், பொறுக்குக் கமிட்டி என்று வைத்துப் பெரும்பாலோரையும் தள்ளிவிடுகிறார்கள். சட்டக் கல்லூரியில் 600 மாணவர்கள் ஒரு நேரத்தில் படிக்கலாம். மாலை நேரக் கல்லூரியிலே 600 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில் மாலை நேரக் கல்லூரி இருந்து வருகிறது. அதிலே எவ்வளவு பேர்களைச் சேர்த்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது என்று தெரியவில்லை. கனம் உறுப்பினர் கூறுகிற படி அதிகமாக எந்த அளவுக்குச் சேர்த்துக்கொள்ள முடியுமோ அதை ஆராய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

Dr. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister to the hon. Member, Thiru Martin, I wish to put a supplementary question about Evening Colleges and the shift system. Will the Government re-examine the whole issue especially in view of my speech made in the month of March with regard to the advance action that I wanted the Government to take, to prevent the crisis that is going on in the City and see that enough number of seats are provided for all those people who are desperately in need of seats as early as possible and if necessary to have a discussion with the Vice-Chancellor in regard to this matter ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரிகள் முதலிலே சொன்ன மாதிரி பணிபுரிகிறவர்கள் மேலும் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாலை நேரக் கல்லூரிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற இடத்தில் ஷிஃப்ட் ஸிஸ்டம் எந்த நிலையில் அமையும் என்று தெரியவில்லை. நான் முதலிலேயே குறிப்பிட்டபடி மேலும் சில வகுப்புகளைத் துவக்க அனுமதி வழங்க பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். சிலபல கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியும் இருக்கிறார்கள். சிலபல கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் வசதி இருக்கிற சிலபல கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்க ஏற்பாடு செய்யலாம். இப்போது ஐ.ஐ.வி.இ.டி. கல்லூரி என்று தாம்பரத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. அதில் 200 இடங்கள் காலியாக இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இடம் வேண்டும் என்று கூறுகிறவர்களை நானே அங்கு அனுப்பிக் கொண்டிருக்கிறேன். எல்லாம் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

கோயில் தேர் செய்யப் பயிற்சி நிலையம்

*138 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில் ரதங்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) கோயில் தேர் செய்வதற்கான அரசாங்கப்பயிற்சி நிலையம் ஒன்று நாகர்கோயிலில் 6—5—1965 முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) மரபு முறைகளையொட்டி கோயில் தேர்களைச் செய்வதிலும் அவற்றைப் பழுது பார்ப்பதிலும் பயிற்சியளிப்பதன் மூலமாகத் தென்னிந்தியாவின் தொன்மை மிக்க இக் கலையைக் கட்டிக் காக்கும் நோக்கத்துடன் இப்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பதின்மர் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு ரூ. 60 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளி ஒன்றைச் சிதம்பரத்தில் ஆரம்பிப்பதற்குச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே நாகர் கோவிலில் இருக்கிற காரணத்தினால்—இப்போது அங்கே பதின்மர் பயிற்சி பெற்று வருகிறார்கள்—மேலும் பயிற்சி பெற விரும்புகிறவர்களையும் அங்கே சேர்ப்பதுதான் முறையே தவிர, இப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளியை ஊர்தோறும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு செ. பாலசுப்பிரமணியம் : இம்மாதிரி ரதங்களைச் செய்வது போன்ற காரியங்கள் சமூக நலன்களுக்குப் பிரயோசனமாக இல்லாத காரியங்களாக இருப்பதினால், இனிமேலாவது இம்மாதிரியான காரியங்களை நிறுத்துவதற்குச் சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நாட்டு சமூகம் இன்னும் அந்த முடிவுக்கு வரவில்லை. இப்பொழுது இருக்கிற சமூகத்தில் பெரும்பாலானவர்களின் ஆதரவு இதற்கு இருப்பதின் காரணமாக, இவையும் இருந்து வருகின்றன.

திரு. ந. தருமலிங்கம் : திருவாரூர் தேர் என்பது பழமொழி. அந்த அளவுக்குப் பழமொழியில் பெயர் சேர்த்துக்கொண்ட திருவாரூர் தேர் பல ஆண்டுகளாக ஓடுவதில்லை. அந்தத் தேர் ஒரு மூலையில் இப்பொழுது மூடிக்கிடக்கிறது. அதனால் கலையழகும், தமிழ்ப் பண்பும் காட்டிய அந்தத் தேர் அழிந்து விடும் நிலையில் உள்ளது. தமிழ்ப் பண்பும், கலையும் சிறக்கும் அளவுக்கு இம்மாதிரித் தேர்களை தொடர்ந்து காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தேரை ஓட்டுவதும், ஓட்டாமல் நிறுத்துவதும் கோவில் தர்மகர்த்தாக்களுடைய பணிகளாக அமைகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் அவர்களுக்குச் சிபார்சு செய்வார்களேயானால், அவர்கள் பார்த்து ஏதாகிலும் செய்வார்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தமிழ் நாட்டு மாண்புக்கேற்ற பழமையான நாகரிகப் பரம்பரையைக் காப்பதற்கு இத்தகைய ரதங்கள் மிகவும் அவசியமானவை. அதற்கான பயிற்சியை இன்னும் நல்ல முறையில் அதிக அளவுக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது 10 பேர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து ஒரு சிறிய அளவிலே தேர் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் ஆங்காங்கு தேர்களைப் பழுதுபார்ப்பதற்குப் பயிற்சி தேவைப்படுகிறது. அதன் காரணமாக அவர்கள் அந்தப் பயிற்சியும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுபோன்ற பயிற்சிப் பள்ளியைப் புதிய அரசாங்கம் தொடங்கியதா, அல்லது, பழைய அரசாங்கம் தொடங்கியதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே இருந்த அரசாங்கம்தான் இதைத் தொடங்கிற்று. 1965-ம் வருடம் மே மாதம் 6-ம் தேதியில் அந்தப் பள்ளி துவக்கப்பட்டது.

திரு. பி. ஐயராஜ் : தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் தேர்கள் இருக்கிற காரணத்தினால், சமீபத்தில் தேர்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு அதன் மூலம் ஏலதாரர்கள் அதிகமாகப் போட்டி போட்டுக் கொண்டு அவற்றை ஏலம் எடுப்பதற்கு முன்வருவதற்குக் காரணம், தேர் பொம்மைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மிகவும் தேவைப் படுகின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. விவரம் தரப்பட்டால் அது கவனிக்கப்படும்.

திரு. வி. டி. அண்ணாமலை : இப்பொழுது மரத் தேர் கட்டுவதற்கான பயிற்சிதான் அளிக்கப்பட்டு வருகிறது. வெள்ளித் தேர் செய்வதற்குப் பயிற்சி கொடுப்பதற்கும் சில ஆசிரியர்களை நியமிக்க இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது மரத்தேர் செய்வதற்குத்தான் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வெள்ளித் தேர் செய்கின்ற நிலைமைக்கு வரமாட்டார்கள். முதலில் மரத் தேர் செய்து முடித்த பிறகு, அதற்கு மேல் வெள்ளிப் பட்டையங்களை அமைப்பதற்கான முயற்சியில் வெள்ளித் தேர் செய்வதில் பயிற்சி பெற்றவர்கள் ஈடுபடுவார்கள். இதற்கு இருக்கிற பயிற்சி வேறு. அதற்கு இருக்கிற பயிற்சி வேறு. இதிலே தேறுபவர்கள் வேறு. அதிலே தேறுபவர்கள் வேறு.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : கேள்விகள் 139, 140, 141, 142 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன.

Sub-Treasury at Pallipet.

*143 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to establish a Sub-Treasury Office at Pallipet, Chingleput district ?

The Hon. Thiru C. N. ANNADURAI : No, Sir.

Thiru K. VINAYAKAM : Whereas there is an Independent Deputy Tahsildar's Office in Pallipet, in consonance with the establishment of that office will the Government re-examine the issue ? As the residents of Pallipet will have to go to the Treasury at Tiruttani to remit or withdraw money, on humanitarian consideration will the Government re-examine the issue ?

The Hon. Thiru C. N. ANNADURAI : The point made by the hon. Member does not arise, because already the work in the Tiruttani office is not sufficient as to warrant another office to be opened at Pallipet. I can very well understand the Member representing that constituency urging for such a thing. But from the financial point of view, it is not necessary.

திரு ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் ஒரு டெப்டி தாசில்தார்தான் இருக்கிறார். அங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமைக்கிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. ஆகவே, இதனுடைய தொடர்பாக வேறு கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. கனம் உறுப்பினர்கள் அதுபற்றி கேள்விகள் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Thiru K. VINAYAKAM : In view of the local importance of this question, will the Government take up for consideration the construction of office buildings at least for the independent Deputy Tahsildar ?

The Hon. Thiru C. N. ANNADURAI : Even without local importance the question assumes importance because of the importance of the hon. member. But financial considerations only refrain us from taking up that matter.

கல்லூரிக் கட்டடங்கள்.

*144 வினா—திரு மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அதிக அளவில் முதலீடு செலவுகளை, தவிர்க்கும் பொருட்டு இந்த வேலையைத் தற்போது எடுத்துக் கொள்ள உத்தேசம் இல்லை.

*145 வினா—திரு. மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டடங்கள் எப்பொழுது கட்டப்படும்?

(உ) அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலையை நடப்பு ஆண்டிலேயே துவக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

(உ) ரூ. 8.50 லட்சம்.

திரு. ரா. ரா. முனுசாமி : வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டதா? ஆமெனில், எப்பொழுது கட்டடம் கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விரிபாட்சிபுரத்தில் 37.32 எக்கர் நிலம் வாங்கப்பட்டு 26—12—1966-ல் முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடம் கட்டுவதற்கு எட்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கட்டடம் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ரூ. 8½ லட்சம் இப்பொழுது வசூல் ஆகியுள்ளதா அல்லது சர்க்கார் கட்டடத்திற்காக ஒதுக்கியுள்ளதா? அப்படியில்லையென்று சொன்னால் இப்பொழுது வரையில் அதற்கான பணம் எவ்வளவு உள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கம் கட்டடத்திற்காகப் பணம் ஒதுக்குவது என்ற முறையில் ரூ. 8½ லட்சம் கல்லூரி கட்டடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புதை சாக்கடைத் திட்டம்.

*** 146 வினா—திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கு, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி கோரினார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தைப் புலனாய்வு நடத்துவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இன்னும் புலனாய்வு வேலைகள் முடிவு பெறவில்லை. திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்குமாறு கேட்டுள்ளது. புலனாய்வு வேலைகள் முடிந்து வரைவு மதிப்பீடுகள் வந்ததும் நிதியுதவி அளிப்பது குறித்து அரசு பரிசிலனை செய்யும்.

திரு. ஆ. கு. சுப்பையா : திருச்சிராப்பள்ளி நகர சாக்கடை வடிகால் திட்டத்தை நிறைவேற்றியாகவேண்டும் என்று கடனாகவோ அல்லது மான்யமாகவோ உதவி கேட்டார்கள். அது பற்றிய பரிசீலனை இந்த ஆண்டே முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரவேற்பில் 3—4—1967 அன்று திருச்சி நகரமன்றம் அரசாங்கத்தினிடமிருந்து நிதி உதவி கேட்டிருக்கிறது. அதுபற்றி பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் மந்திரியிலும், மாநிலத்திலும், நகராட்சி மன்றங்களிலும் இருந்தும், இது போன்ற பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாததற்கு என்ன காரணம் என்று இந்த அரசினருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த அரசாங்க நடவடிக்கைகள் பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. இனிமேல் இதுபற்றிய விவரங்கள் தீவிரமாக கவனிக்கப்படும்.

திரு. எம். பூபதி : சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்க உதவும் கீழ் சாக்கடைத் திட்டத்தை 50 ஆயிரமும் அதற்கும் அதிகமான பேர்கள் ஜனத்தொகை கொண்ட நகராட்சி மன்றங்களுக்கு விஸ்தரிப்பதுபற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தை நகராட்சிமன்றங்களுக்கு விஸ்தரிக்க சர்க்கார் மிகவும் ஆவலோடு இருக்கிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத்தான் இது தற்பொழுது பரிசீலனை செய்ய முடியாத நிலையில் இருக்கிறது.

திரு. தோ. மு. நல்லசாமி : சார், இந்த திருச்சி கீழ் சாக்கடைத் திட்டத்திற்காக ஆராய்ச்சி நடந்து வருவதாகச் சொன்னார்கள், நிதி உதவி கோருகிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த நிதியை மானியமாகவோ அல்லது கடனாகவோ இந்த ஆண்டே கொடுக்க நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? மு.ப. 9-30

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படவில்லை.

*** 147 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய பொதுச்சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.

(அ) மதுரை நகரத்தில் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு மதுரை நகரவை ஆயுள் இன்ஷ்உரன்ஸ் கார்ப்பரேஷனிடம் கடன் கோரி விண்ணப்பம் செய்துள்ளதா?

(இ) அதை உத்திரவாதம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, மதுரை மாநகர் வார்டுகள் பிரிக்கப்பட்டு விஸ்தரிக்கப்படும்போது, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படாவிட்டால், தொத்து நோய்கள் வருகின்றன. ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை விஸ்த்தரிக்க சர்க்கார், மானியமோ கடனோ கொடுத்து அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : பரிசீலனை செய்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : புதை சார் சாக்கடைத் திட்டத்தை வற்புறுத்தி நம் மாநிலத்தில் எத்தனை நகர மன்றங்களிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறது? நாம் கொடுக்கப் போகும் மானியத் தொகை எவ்வளவு? அவர்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதி க்பாட்சா : மூலக் கேள்விக்கும் அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

திரு. மா. இராசாங்கம் ; சார், மதுரை நகர சபை கோரியிருக்கும் கடன் தொகையைக் கொடுக்க சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்று நினைக்கிறேன். அதற்கு என்ன நிபந்தனை என்று அறியலாமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சர்க்கார் கொடுப்பதில்லாமல், லைஃப் இன்ஷ்உரன்ஸ் கார்ப்பரேஷன் கடன் கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் உறுப்பினர் என்று கருதுகிறேன.

The Life Insurance Corporation of India have agreed to grant loans to Municipalities for their Water Supply and Drainage Schemes subject to the following conditions:—

(i) The Municipality to find from its own resources and/or by subvention or loan from the State Government at least 331/3 per cent of the cost of the Water-Supply and Drainage Scheme.

[1967 ஜூலை 3

(ii) The loan from the Corporation will not exceed 66 2/3 per cent of the cost of the scheme.

(iii) The loan will be guaranteed as to payment of interest and repayment of principal, by the State Government.

(iv) Interest will be charged at the rate of 6½ per cent per annum, payable half-yearly.

(v) The loan will be required to be repaid on the expiry of 25 years from the date of drawing the same.

(vi) The Municipality to set up a Sinking Fund by setting apart annually such sum as would enable the loan to be repaid at the end of 25 years. The amount to the credit of the Sinking Fund should be invested in Central Government Securities.

இந்த விதிகளின்படி L.I.C. கடன் கொடுக்க முன்வந்திருக்கிருர்கள்.

DR. H. V. HANDE : Sir, in view of the importance of the Drainage Scheme for the Madurai City because it is practically one-third of the Madras City, will the Hon. Chief Minister or the Health Minister come forward to give us some assurance in this House that this scheme will be taken up immediately or in the near future ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். சங்கரய்யா : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரம் மதுரை மாநகர். அந்த நகரின் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு, எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளின் அடிப்படையில் உதவி கோரி நகர சபை ஏற்பாடு செய்தால், அதை அரசாங்கம் சாதகமாகப் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மதுரை நகராட்சி கடன் கோர முன்வருமானல், அது அனுதாபத்தோடு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தை வார்டுகளில் முழு அளவில் செய்யாவிட்டாலும், பகுதி பகுதியாக, பாக்கெட் ஸ்கீம் என்ற முறையில் விஸ்தரிக்க, அப்படி அனுமதிக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து, பரிசிலனை செய்யப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : விளுக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்பு தீர்மானம்.

தீ விபத்திறல் பாதிக்கப்பட்டவர்களின் மறு சீரமைப்பும் துயர் தீர்க்கும் நடவடிக்கைகளும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : திரு. ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர விரும்புகிருர்கள். அவர் அறிவிப்பு கொடுத்திருக்கும் தீர்மானத்தைப் படிக்க அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறேன்.

1967 ஜூலை 3]

DR. H. V. HANDE ; Mr. Deputy Speaker, Sir, I do hereby give notice of the following adjournment motion;

" I wish to move for an adjournment of the business of the Assembly for discussing a definite matter of urgent public importance, namely, the rehabilitation and relief measures to be taken in respect of nearly 2,000 persons rendered homeless in a blaze of fire which destroyed nearly 135 huts in Teynampet and 50 huts in Royapuram on Saturday, the 1st July 1967".

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை அன்ருட சர்க்கார் அலுவலைச் சேர்ந்தது. மேலும், இந்தப் பிரச்சினையில் மாநகராட்சி தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிருர்கள். ஆகவே, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன் ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வெண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் தீ விபத்துக்களுக்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது சர்க்காரின் அன்ருட அலுவல்களில் ஒன்ருகும். ஆகவே இப்பொழுது இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்துப் பேசவேண்டும் என்பது அவசியம் இல்லை. மேலும் இது பற்றி, நிதி ஒதுக்கு மசோதா வரும்போது பேச வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் நிராகரிக்கிறேன்.

3. அறிவிப்பு

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) தேர்தல்.

மாண்புமிகு துணைத் பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. சா. கணேசன், (2) திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, (3) திரு. கே. டி. கோசல்ராம், ஆகிய மூவரும் இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவில், 1—6—1967-லிருந்து நிரப்பப்பட வேண்டிய மூன்று இடங்களுக்கு, தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி, பகுதிவாரி அடிப்படையில் (Proportional Representation) இத்தேர்வு நடைபெறுவது இல்லை. எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 6—7—1967 வியாழக்கிழமை மாலை 3-மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—7—1967, வெள்ளிக்கிழமை, காலை 11-மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—7—1967 சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்று இடங்களுக்கு, மேற்படுமாயின் 11—7—1967 செவ்வாய்க் கிழமை காலை 9-மணிக்கும் பிற்பகல் 1-மணிக்கும் இடையே சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) சட்டப் பேரவை நடவடிக்கைகள் குறிப்பு நகல் நூல்கத்தில் வைக்கப்படாமை.

(இ) பேரவை நிகழ்ச்சிகள் தொடங்குமுன் கட்சித் தலைவர்களுடன் பேரவைத் தலைவர் கலந்து பேசுதல்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்கும், இந்தச் சபையின் கவனத்திற்கும், சில விஷயங்களை, அவை பற்றிய என்னுடைய ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகிறேன். கடந்த இரண்டு நாட்களாக எப்போதும் இருந்து வந்த ஒரு மரபு மாற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சபையிலே நடக்கும் நடவடிக்கைகள், அன்றுடம் இந்த அவையின் லைப்ரெரியில் அங்கத்தினர்களுடைய சௌகரியத்திற்காக, எல்லா நடவடிக்கைகளையும் அறிந்துகொள்ளும் வகையில், இந்த நடவடிக்கைகளின் காப்பி ஒன்று லைப்ரெரியில் வைப்பது வழக்கம். இரண்டு நாட்களாக அப்படி வைக்கப்படவில்லை. அங்கத்தினர்கள் என்ன பேசினார்கள் என்று தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. அந்த வகையில் அங்கத்தினர்களுக்கு ஒரு உரிமை இருந்தது. மற்ற அங்கத்தினர்கள் என்ன பேசினார்கள் என்பதைப் பார்ப்பதற்கு இருந்த வசதியைக் குறைக்கக்கூடிய வகையில், அங்கத்தினர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி இரண்டு நாட்களாக இல்லாததன் காரணம் என்ன என்று தெரியவில்லை. கனம் சபாநாயகர் அப்படி இட்ட உத்தரவோ என்னவோ, யார் உத்தரவோ என்று தெரியாமல் இருப்பதால், அந்த லைப்ரெரி காப்பி வைப்பதை மீண்டும் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. அநேகமாக தினமும், சட்டசபை ஆரம்பிப்பதற்கு முன்னால், சில நிமிஷங்கள், எதிர்க்கட்சித் தலைவர்களோடு, லீடர் ஆப் தி ஹவுஸும், சபாநாயகரும் கலந்து பேசி அன்றுட நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பது வழக்கம். இப்பொழுது பார்க்கும்போது, பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூடுவதோடு சரி. அன்றுடம், என்ன வேலை செய்யப்போகிறோம், மாலை நேரத்தில் சபை கூடவேண்டுமா என்பதையெல்லாம் அன்றுடம் கவனிப்பதில்லை. சட்டசபை கூடுவதற்கு 10 நிமிஷங்களுக்கு முன்னால், அன்றுட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பது சிறந்ததாக இருக்கும்.

ஆகவே, இந்த இரண்டு விஷயங்களிலும் தாங்கள் தங்களுடைய ஆலோசனையைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சபை முதல்வர் ஏதாவது கூற வேண்டுமென்றால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே! முதல் கருத்து பற்றி என்ன நிலைமை இருக்கிறது என்று தெரியவில்லை. அது குறித்து ஏற்கெனவே என்ன மரபுகள் இருக்கின்றனவோ அந்த மரபுகளை ஆராய்ந்து பார்த்து இந்த நிலைமைகளுக்கு என்ன காரணம் என்பதுபற்றித் தக்க முடிவுகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது கருத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட தடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாமாக, சாதாரணமாகப் போய் ஏதாவது கேட்டுக்கொள்ளவேண்டுமென்ற விதி முறை இல்லை. தேவைப்படுகின்றபொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்களோ மற்றக் கட்சித் தலைவர்களோ, அவை முதல்வரோ பேரவைத் தலைவரிடம் சென்று பேசுவதும் உண்டு. வேண்டாமென்ற எந்தத் தடையும் இல்லை. அது மட்டுமல்லாமல், பேரவை ஒத்தி வைப்பது, மாலை நேரத்தில் பேரவைக் கூட்டம் நடத்துவதுஆகியவைகளை நாம் இங்கேயே கலந்து பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் தெரிவித்து அவர் முடிவு எடுக்கின்ற நிலைமைதான் இருந்து வருகிறது. இதற்குத் தடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே,

எதிர்க் கட்சித் தலைவரவர்களோ, மற்றக் கட்சித் தலைவர்களோ, அவை முதல்வரோ பேரவைத் தலைவரவர்களைச் சபை கூடுவதற்கு முன்னால் சந்தித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க இன்னமும் வாய்ப்பிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, அது பற்றிய நிலைமையொன்றும் விபரீதமாகப் போகவில்லை. எப்பொழுதும் இருக்கின்ற மரபு காப்பாற்றப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : இங்கே இந்தப் பேரவையில் பேசுகின்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்கள் நூல் நிலையத்தில் வைக்கப்படுகின்ற மரபு இப்பொழுது இல்லை என்ற கருத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். அது பற்றி என்ன நிலைமை என்பதை நான் ஆராய்ந்து நாளை அதற்கு முடிவு கூறுகின்றேன்.

அடுத்து, சபாநாயகரவர்கள் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை அன்றுடம் அழைத்துப் பேசுவது வழக்கம் என்று சொன்னார்கள். அன்றுடம் பேசுவது வழக்கமில்லை. வேண்டும்போது அழைத்துப் பேசுவது வழக்கமாக இருக்கிறது. பேசுவதற்கு வேண்டிய ஒரு நிலைமை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கோ மற்றக் கட்சித் தலைவர்களுக்கோ உண்டாகுமானால் அது பற்றி சபாநாயகரவர்கள் அழைத்துத்தான் பேச வேண்டுமென்று இல்லாமல் அவர்களேகூடச் சென்று அவர்களை நேரில் கலந்து பேசிக்கொள்ளலாம். ஆக, இதுபற்றிய குறிப்புகளை இந்தச் சபையில் கொண்டுவர வேண்டுமென்பது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எந்த முறையில் நடைபெற வேண்டுமென்ற மரபுகளை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்து, மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்ளுவோம். இப்பொழுது மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் நிலவரித் துறைக்கான மானியம் கோருவார்கள்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் I—நிலவரித்துறை.

கோரிக்கை எண் IV—முத்திரைத்தாளைகள் நிர்வகம்.

கோரிக்கை எண் XXXI—பஞ்சத்தனிப்பு.

கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்,

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,31,91,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் IV—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,47,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தனிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,36,15,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

[திரு. கே. எ. மதியழகன்[1937 ஜூலை 3]

மாண்புமிகு துணைப் போவைத் தலைவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XXXVII ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : அடுத்து, வெட்டுத் தீர்மானங்கள் மெம்பர்களின் சார்பிலே கொண்டு வரப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss about the general policy and the desirability of abolishing basic land tax on wet lands and the possibility of augmenting agricultural production, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 1,31,91,400 under Demand No. I —Land Revenue Department—be reduced by Rs. 100."

THIRU R. KARUPPIAH : Sir, to discuss about the enhancement of value of the properties, I move the cut motion standing in my name, namely :—

That the allotment of Rs. 24,47,500 under Demand IV—Stamps Administration—be reduced by Rs. 100.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட திண்டிவனம் வட்டத்திலுள்ள விவசாயிகளின் அரசாங்கக் கடன் தொகையை நீண்டகாலத் தவணையில் திருப்பித்தர வழிவகை செய்யாதது பற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,36,15,700-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : துணைத் தலைவரவர்களே, ரெவின்யூ போர்டு நிலை ஆணைகளை (standing orders of the Board of Revenue) திருத்தி அமைக்க வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் I :—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,91,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : துணைத் தலைவரவர்களே, மாதம் ரூ. 200 வருவாய்க்குட்பட்ட எல்லோருக்கும் ஸ்டாம்பு ஒட்டுவதிலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டியது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். IV—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 24,47,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : துணைத் தலைவரவர்களே, மழையாலும் புயலாலும் பாதிக்கக்கூடியவர்களுக்குப் போதுமான நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண். XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,36,15,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1967 ஜூலை 3]

திரு. கோ. பாரதி மோகன் : துணைத் தலைவரவர்களே, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு அளிக்கக்கூடாது என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 11,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவரவர்களே, மூன்று ஏக்கர் நஞ்சை நிலத்திற்கும், அதற்குக் குறைவாகவும் நிலமுள்ள சிறு நிலச் சொந்தக் காரர்களுக்கு நில வரியை ரத்து செய்ய வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,91,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவரவர்களே, கிராம எல்லைக் கரைகளை உயர்த்திக் கட்டும் வேலையைக் கிராம பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூற—

"கோரிக்கை எண் I.—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,91,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவரவர்களே, நன்செய் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்குத் தண்ணீர்த் தீர்வையில் சலுகை வழங்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் I.—" நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,91,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவரவர்களே, தேவையான ஸ்டாம்புகள் காலத்தோடு கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் IV.—முத்திரைத் தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 24,47,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. க. ர. நல்லவசிவம் : துணைத் தலைவரவர்களே, விவசாய விளை நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டத் தீர்வை பற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,91,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் போதுமான அளவு எல்லாக் காலங்களிலும் கிடைக்காதது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் IV—முத்திரைத் தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 24,47,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU R. KRISHNASAMY GOUNDER : Sir, to discuss the necessity for continuance of compounding system of Agricultural Income-tax, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 1,31,91,400 under Demand No. I—Land Revenue Department—be reduced by Rs. 100;"

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்; வெட்டுத் தீர்மானங்களும் சபையின்முன் விவாதிக்கப்படவிருக்கின்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "மானியக் கோரிக்கை—1 நிலவரித்துறை" என்பதன் கீழ், ரூ. 1,31,91,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென நான் கோரியுள்ளேன்.

வேளாண்மை வருமானவரி நிர்வாகம், நில அளவை, நிலவரி-ஏற்பாடு, நில ஆவண வேலைகள், முன்னாள் ஜமீன்தாரி எஸ்டேட்டுகளின் நிர்வாகம் ஆகியவற்றிற்காக, "மானியக் கோரிக்கை—I. நிலவரி" என்பதன் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிலவரி வசூல்—நிர்வாகச் செலவில் பெரும்பகுதி—"9. நிலவரி" என்னும் பெருந் தலைப்புக்குப் பற்றாக எழுதப்படுவதில்லை. இவ்வேலை வருவாய்த் துறையின் மாவட்டப் பணியாளர்களால் செய்யப்படுகிறது. இதற்காகும் செலவு "19. பொது நிர்வாகம்—மாவட்ட நிர்வாகம்" என்னும் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படுகிறது. இது 9-வது மானியக் கோரிக்கையில் சேர்ந்துள்ளது. நிலவரி நிர்வாகம் குறித்துச் செய்யப்படும் செலவு மட்டுமே இந்தத் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் நிர்வாகத்திற்கான "செலவு" என்பதன் கீழ், இது குறித்து நியமிக்கப்பட்ட பணியாளர், நிலம் பட்டா செய்து தருதல், இழப்பீடு, ஜமீன் ஒழிப்பு நிதிக்கு மாற்றப்பட்ட தொகை ஆகியவற்றிற்காக வகை செய்யப்பட்டுள்ளது.

கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை இந்த மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோருகிற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த விவாதத்தில் கனம் உறுப்பினர்கள் எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை வழங்கிய பிறகு நான் விரிவாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுவதையொட்டி, இப்பொழுது அதிகமாகப் பேசாமல் இந்த அரசாங்கத்தின் சில முக்கியமான கொள்கைகளை மட்டும் நான் கோடிட்டுக் காட்டுகிறேன். நிலவரித் துறையிலும் மற்றைய துறைகளிலும் இந்த அரசு கொண்டிருக்கிற முற்போக்கான கொள்கையை மன்ற உறுப்பினர்கள் தெரிந்துக்கொள்வது இந்த விவாதத்திற்குப் பயன்படும். மேலும் இந்த விவாதத்தைச் சுவையுள்ளதாக்கவும், பயனுள்ளதாக்கவும், நாட்டு நலத்திற்கு உரியதாகவும் இருக்கும் என்று கருதி, இந்த மாமன்றத்தின் மேலான கவனத்திற்குச் சில முக்கியமான விவரங்களைச் சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

முக்கியமாக, நிலவரித் துறை வெகு நாட்களாக நம்மை அலைக்கழித்து வருகிற ஒரு துறையாகும். புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் இந்த அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிலவரி நீக்கத்தினுடைய முதல் கட்டமாகத் தமிழ்நாட்டிலுள்ள புஞ்சை நிலங்களுக்கு வரி நீக்கம் செய்து, ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வருவதை இந்த மாமன்றமும் தமிழ்நாடும் அறியும்.

பொதுவாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. பலர் வெட்டுத் தீர்மானங்களும் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் வரியில்லாமல், புஞ்சை நிலங்களுக்குச் செய்திருக்கிறார்களே என்ற வகையில் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கருத்து வரவேற்கத்தக்க ஒரு கருத்துத்தான். இருந்தாலும், இந்த அரசு நிலவரி ரத்து விஷயத்தில் ஏன் இந்த அளவில் முடிவெடுத்திருகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். இதிலே மிக முக்கியமான அடிப்படை அம்சம் ஒன்றை மிகப் பெருமையோடும் பூரிப்போடும் இந்த மாமன்றத்திற்கு நான் அர்ப்பணித்துக் கொள்ளுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள மொத்த நிலங்களில் ஐந்தில்

நான்கு பகுதி நிலங்களுக்கு அடிப்படைத் தீர்வையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மூலம் நீக்கி இருக்கிறார். அதாவது, புன்செய் நிலத்திற்கு அடிப்படை நில வரியை நீக்கி இருக்கிறார். இந்த வகையில் ஒரு கோடி 21 லட்சம் ஏக்கர் புன்செய் நிலம் இந்த அடிப்படை நிலவரியிலிருந்து நீக்கம் பெற்றிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் நாற்பது லட்சம் ஏக்கர் இருக்கின்றன. இன்றைக்கு முதல் கட்டமாகத்தான் தமிழ்நாட்டில் உள்ள 1 கோடியே 21 லட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். வரி நீக்கப்படுவதற்கு பாக்கியுள்ள நிலம், 40 லட்சம் ஏக்கர் நன்செய் நிலம் தான். அதாவது, ஐந்தில் ஒரு பங்கு நிலம் தான் பாக்கி இருக்கிறது. அதைப் பற்றியும் கூட, இதற்காக நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரி அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அந்த அறிக்கையில், இப்பொழுது இருக்கிற நிலவரி முறை, நீர்த் தீர்வையோடு இணைந்திருக்கிற காரணத்தினால், அந்த நிலத் தீர்வையைத் தரம் பிரிப்பதில் பாரபட்சங்கள் நிறைந்துவிடும் என்று அந்த விசேஷ அதிகாரி அறிக்கையில் தெரிவித்திருப்பதால், அதிலுள்ள பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்காகவே, நன்செய் நிலத்திற்கான வரியை எடுக்க முடியவில்லையே தவிர, இந்த அரசாங்கம் நன்செய் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை என்று யாரும் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி யாராவது கருதினால், அது உண்மைக்குப் புறம்பானது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அந்த விசேஷ அதிகாரி தம்முடைய அறிக்கையில், நிலத் தீர்வை பல இடங்களில் இணைந்திருக்கிறது, இந்த "பேஸிக் டாக்"ஸை நாம் எடுத்து விடுவோமானால், அது பல தவறான பாரபட்சங்களுக்கும், வேறு காரியங்களுக்கும் கொண்டு போய் விடும் என்று சொல்லிய காரணத்தினாலேதான், நன்செய் நிலங்களுக்கு நில வரியை நீக்கும்படியான ஒரு வாய்ப்பு ஏற்பட முடியவில்லை. இன்றைய தினம் ஒரு கோடியே 21 லட்சம் ஏக்கர் புன்செய் நிலம் நன்மை பெறுவது மட்டுமல்ல, ஏறக்குறைய ஐம்பது லட்சம் விவசாய மக்கள், புன்செய் நிலத்திற்கு நில வரியை நீக்கியதன் மூலம் நன்மை பெறுகிறார்கள். அதனுடைய தொடர்பான அடுத்த கட்டமாக, அந்த அதிகாரியின் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் சிபார்சின் அடிப்படையில், அதனுடைய தனிக் குழுவும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து இதனை அமுல் படுத்துவதற்கு வழி வகை காணும். அவைகளுக்குப் பிறகு இந்த மாமன்றத்தினுடைய கருத்துக்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தம்முடைய நிதி நிலை அறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான், இது வர முடியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த விவாதத்திற்கு இது மிக முக்கியமான கருப்பொருளாக இருக்கும் காரணத்தால், இந்த நிலைமையில் நன்செய் நிலங்களுக்கான வரியை நீக்குவதற்கு முயற்சிகள் என்ன, சங்கடங்கள் என்ன, இடைஞ்சல்கள், இடர்ப்பாடுகள் என்ன என்பதை இதற்காக நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரி, ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. கெய்வார் அவர்கள், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் இங்கே தெரிவிப்பேனானால், நம்முடைய கனம் உறுப்பினர்களுக்கு மேலும் பயன்படும் என்ற வகையிலே சில விவரங்களை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (திரு. கே. விநாயகம் : பிறகு சொல்லிக்கொள்ளலாமே !) இதை நான் பிறகு சொல்லவேண்டும் என்று கனம் உறுப்பினர் அவர்கள் விரும்புவதால், விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கம்பவுண்டிங் என்பதை 12½ ஏக்கர் என்பதிலிருந்து ஐந்து ஏக்கருக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இந்த மாமன்றத்திலுள்ள பலதரப்பட்டவர்களுடைய ஏகோபித்த கருத்துக்கிணங்க வாக்கு அளித்திருக்கிறார்கள்.

அதே மாதிரியாக, தரிசு நிலங்கள் சம்பந்தமாக லாண்டு யூடிலைஸேஷன் கண்ட்ரோல் ஆர்டர் இருக்கிறது. அதன் மூலம் யார் தங்களுடைய நிலங்களை தரிசாகப் போட்டுவைத்து உணவுத் தானியங்கள் எதையும் விளைவிக்காமல் இருக்கிறார்களோ அவர்களுடைய அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு, பகிரங்க ஏலத்தின் மூலம் ஐந்து வருஷங்களுக்கு இன்னொருவருக்குக் குத்தகைக்கு விடலாம் என்கிற அதிகாரத்தை லாண்டு யூடிலைசேஷன் கண்ட்ரோல் ஆர்டர் மூலம் இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது. அதற்கான மிகத் தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். யார் நிலத்தைத் தரிசாகப் போட்டிருந்தாலும், அதை அரசாங்கம் அனுமதிக்க முடியாது. உணவுப் பொருள் உற்பத்தி செய்யாமல் ஒரு அங்குலம் நிலத்தைக் கூடத் தரிசாகப் போட்டிருக்க அனுமதிக்க முடியாது என்ற வகையில் மிகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சில இடங்களில் பஞ்சம் ஏற்பட்டதன் விளைவாகவும், கடந்த வருஷத்தில் ஏற்பட்ட புயலின் விளைவாகவும் சில நிலைமைகளைச் சமாளிக்கவேண்டிய பொறுப்பை இந்த அரசாங்கம் பெருமளவு ஏற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த வருஷம் நவம்பர் மாதம் ஏற்பட்ட புயலின் விளைவாக, சென்னை நகரம், தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில் ஏற்பட்ட சில காரியங்களைக் குறித்தும் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த அரசாங்கம்—விவசாயிகள், உழவர்கள் ஆகியவர்களுடைய நலனைப் பின்னணியில் கொண்ட அரசாங்கம்—உற்பத்தியாளர்கள், கன்ஸ்யூமர்ஸ் இவர்களுடைய நலன்களைக் கவனிக்கவேண்டும் என்ற அடிப்படையிலே அமைந்திருக்கும் இந்த அரசாங்கம்—முதன் முதலில் தன்னுடைய நடவடிக்கைகளைத் துவங்குகின்ற சமயத்தில், புன்செய் நிலத்திற்கான வரியை ரத்து செய்யவேண்டும் என்ற முறையில் நமது அன்பு மிக்க முதலமைச்சர் அவர்கள் தம்முடைய திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சிறந்த திட்டத்தை இந்த மாமன்றமும் தமிழகமும் பெருத்த அளவில் வரவேற்றிருக்கிறது. அதற்கு ஆதரவு கொடுக்கும் வகையில், இந்த அரசாங்கம் செய்ய முற்படுகிற எல்லாக் காரியங்களுக்கும் விவசாயிகள், உழவர்கள் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இன்று போல் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய முன்னுரையை முடிக்கின்றேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர்
மு.ப. 10-00 அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக இந்த நிலவரித் துறை மானியக் கோரிக்கை மீதும், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் மானியக் கோரிக்கை மீதும்; பஞ்சத் தணிப்பு மானியக் கோரிக்கை மீதும் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்தி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். இன்றைய தினம் நிலவரித் துறை மிக மிக முக்கியமான இந்த நாட்டினுடைய பெருவாரியான மக்களைத் தழுவியிருக்கின்ற ஒரு துறையே என்றாலும் கூட, இன்று சர்க்கார் நிலவரித் துறைக்குக் காட்ட வேண்டிய அளவு முக்கியத்துவம் காட்டவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பட்ஜெட்டிலே எந்த ஒரு துறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்றால், அது நிலவரித் துறையாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலவரித் துறையைப் பொறுத்தவரையிலும், நம்முடைய அமைச்சர் அவர்கள் புன்செய் நிலங்களுக்கு நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்ததைப் பற்றிப் பேசினார்கள். அவர்கள் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்ததை மட்டும் குறிப்பிட்டு எவ்வளவுதான் பேசினாலும் கூட, அந்த வரி விலக்கை நன்செய் நிலங்களுக்கும் தராத ஒரு நிலையைக் கண்டு விவசாய மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட ஒரு கொடுமையாக அதைக் கருதுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். பல ஏக்கர்கள், அதாவது 100 ஏக்கருக்கும் மேலாக புன்செய் நிலம் வைத்திருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கு வரி விலக்கு அளித்துவிட்டு

வேறு எந்த நிலமும், வேறு எந்தச் சொத்தும் இல்லாமல், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் நன்செய் நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரி விதித்திருப்பதனால், அந்த விவசாய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு தந்ததோடு மட்டுமல்லாமல், நன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வையும் அதிகரிக்கலாம் என்ற ஒரு சூசகமான அறிவிப்பும் இன்றையதினம் இருக்கிறது. இதுபற்றி நம்முடைய உணவு அமைச்சர் என்னதான் கூறினாலும் கூட அவர்களுடைய பட்ஜெட், அவர் சார்ந்திருக்கும் கட்சியினுடைய கடந்தகால கொள்கைக்கு எவ்வளவு முரண்பாடாக அமைந்திருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த மாமன்றத்திலே அவர்கள் பேசிய பேச்சுக்களை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த 1965-ம் ஆண்டு, நவம்பர் மாதம் இந்த மாமன்றத்திலே பேசப்பட்ட பேச்சிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

" **மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** அவர்களே, நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னாலே முன்மொழிந்திருக்கிற இந்த நிலவரி, நிலத்தீர்வை உபரி வரி மசோதாவை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். அவர்கள் எவ்வளவுதான் காரணங்கள் சொன்னாலும், என்னதான் சமாதானங்கள், விளக்கங்கள் கூறினாலும், இது தேவையற்ற ஒன்று, நியாயமற்ற ஒன்று, பொருந்தாத ஒன்று, தாங்க முடியாத ஒன்று என்பதுதான் இந்த நாட்டில் இருக்கக்கூடிய பல கோடி ஏழை விவசாய மக்களுடைய கருத்தாகும். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தவரை தாங்குபவர்கள் மீதுதான் வரிகள் விதிக்கப்படவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டதாகும். நிலவரியைப் பொறுத்தவரை அதனை முழுதும் நீக்க வேண்டும். நிலவரியே இருக்கக் கூடாது. அப்போதுதான் உணவு உற்பத்தி பெருகும். ஏழை விவசாயிகள் வாழ்வில் அபிவிருத்தி ஏற்படும்."

இந்தப் பேருரை வேறு யாராலும் ஆற்றப்படவில்லை. மதிப்பிற்குரிய நிலவரித் துறை அமைச்சர் அவர்கள் இந்த உரையை ஆற்றியிருக்கிறார்கள்.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய உரையைப் படித்ததற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த அரசாங்கம் 1965-ம் வருடம், நிலவரி, நீர்வரி, மற்ற வரிகளின் மீது நெருக்கடி நேரத்தில் 25 சதவீதம் உபரியாக வரிபோட மசோதா கொண்டு வந்தது. அந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய கருத்தைத்தான் கனம் உறுப்பினர் இந்த மன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். நானும், என் கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர்த்ததால்தான் இந்த வரியைக்கூட வசூல் செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிலவரி, நீர்த் தீர்வை வரிகள் முதலியவற்றை கடந்த அரசாங்கம் கொண்டு வந்தபோது, நெருக்கடி நேரத்திலே நிலவரி மீது 25 சதவீதம் உபரி வரியாகக் கொண்டுவருகிறார்கள் என்று கூறினோம். அந்த வரி தள்ளி வைக்கப்பட்டது. இந்த வரியைப் பற்றியும், இதற்கான மசோதாவும் இந்த மன்றத் தொடரிலே வருகிறது. இந்த வரி கிடையாது என்ற விஷயமும், மசோதாவும் இந்தத் தொடரிலே நான் கொண்டுவந்து முன்மொழியும்படியான வாய்ப்பு இருக்கிறது. கனம் உறுப்பினர் சொல்வதற்கு, நிலவரி அதிகமாக இருக்கக்கூடாது என்கிறேன். இந்த 25 சதவீதம் அதிகப்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் செய்துவருகின்ற முயற்சியாகவே இதைக் கருதுகிறேன் என்று கனம் உறுப்பினர் அவர்கட்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு க. இராமமூர்த்தி : நம்முடைய அமைச்சர் அவர்கள் கடந்தகால பட்ஜெட்டுக்கான விளக்கத்தைச் சொன்னார்கள். அந்தப் பேச்சு எந்தச் சூழ் நிலையில் பேசப்பட்டாலும், அவர் சார்ந்திருக்கின்ற கட்சியின் கொள்கைகளைத் தெளிவாக்குகின்ற காரணத்தால் அந்தப் பேச்சைப் படிக்க நேர்ந்தது.

அதோடு, இன்னொரு தீர்மானம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த மாமன்றத்திலே கொணரப்பட்டிருக்கிறது. அதையும் நான் படித்துவிட விரும்புகிறேன். 1966-ம் ஆண்டு, நவம்பர் 8-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களால் அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

"நாட்டின் முதுகெலும்பு எனப் போற்றப்படும் விவசாயிகள் உழு தொழிலை ஊக்கத்தோடு மேற்கொள்ளவும், அவர்களின் வரிச் சுமை குறைந்து வருவாய் பெருகவும் வழி செய்யும் வகையில் நிலவரியையும் அந் நிலவரியை அடிப்படையாகக் கொண்டு வசூலிக்கப் படும் பல்வேறு உபரி வரிகளையும் கைவிடுமாறு இம் மாநில அரசுக்கு இம்மன்றம் பரிந்துரை செய்கிறது."

என்பதுதான் அந்தத் தீர்மானம். அந்தத் தீர்மானம் நம்முடைய துணைச் சபாநாயகர் அவர்களால் முன்மொழிந்து கொண்டுவரப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம், இந்த நிலவரியையும், மற்ற ஏனைய வரிகளையும் நீக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்திருக்கிறது. இப்பொழுது, அவர்களே ஆளுகின்ற பொறுப்பை ஏற்றபிறகு—வாய்ப்பு ஏற்பட்ட பிறகு, இந்தக் கொள்கைகளை அவர்கள் நிறைவேற்ற முடியாத ஒரு நிலையிலே, இந்தப் பட்ஜெட்டைப்பற்றி யார் பேசினாரோ அவரே அந்தத் துறையை நிர்வகிக்கும் அமைச்சராக பொறுப்பேற்றிருந்தும் நிறை வேற்ற முடியாத பரிதாப நிலையே இருக்கிறது. அதோடு இந்த விவசாய வருமான வரியைப்பற்றி..............

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பரிதாப நிலையிலே இருக்கிறது என்றார்கள். கனம் உறுப்பினர் அதை விளக்கினால் நன்றாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : கடந்த காலத்தில் அவர்கள் சொல்லி வந்த கொள்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையையே பரிதாப நிலை என்று கூறினேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கடந்த காலத்தில் எதைச் சொல்லி வந்திருந்தாலும், நாங்கள் இந்த இடத்திலிருந்து விலகுவதற்கான நேரம் வருகின்றவரையில், நாங்கள் செய்கிறோமா, இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : அவர்கள் விலகுவதற்கு முன்புவரை பொறுத்திருந்து பார்க்கும்படி முதலமைச்சர் அவர்கள் கூறிய உறுதிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் கடந்த காலத்தில் வாதாடிய காரணத்தால்தான் அவர்களுடைய நிலையை தெளிவாக்க விரும்பினேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை......

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி வாதாடிய நேரத்தில், அப்போதிருந்த ஆளும் கட்சி எப்படி மறுத்தது என்பதைப் படித்தால் நன்றாக இருக்கும் கனம் உறுப்பினர் அவர்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கும் என்று தெரிகிறது. உறுப்பினர் காங்கிரசிலே இருந்தாரா அல்லது புதிதாகக் காங்கிரசில் அவர் இருப்பதால், அவர்களுக்கு..........

திரு. க. இராமமூர்த்தி : பரவாயில்லை. எந்தக் கட்சியில் இருந்தாலும் மற்றக் கட்சிகள் என்ன செய்துகொண்டிருந்தன என்பதைத் தெரிந்து வைத்திருந்தேன். அடுத்து, விவசாய வருமான வரியைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், வருமான வரிக்கு விலக்கு அளித்த அதே நேரத்தில் விவசாயிகளுக்கு, இண்டஸ்ட்ரீஸ்களுக்கு காட்டப்படுவதைப் போன்ற சலுகை ஒன்றும் ஏற்படவில்லை. அப்படிச் செய்திருந்தால் நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு நல்ல நிலைமை ஏற்படும், நல்ல தெளிவு ஏற்படும். அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழி ஏற்படும். 3,600 ரூபாய்க்கு வருமானம் வந்தால் விவசாயிகளுக்கு வரி விதிப்பு உண்டு என்ற நிலை கையாளப்படுமானால் (இண்டஸ்ட்ரீஸ்) தொழில் துறையிலே உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அளவுக்கு நிலவரி குறையும். விவசாயிகளின் முதலீடு, லாபநஷ்டம் இவைகளைக் கணக்கெடுத்துப் பார்த்து வருமான வரி விதிப்பது நல்லதாக இருக்கும். விவசாயத்தினால் வருகின்ற வருமானத்தை மட்டும் வைத்துக்கொண்டு, தொழிலாளருக்குத் தருகின்ற சலுகை தராமல் மறுப்பது அவர்களுக்குச் செய்கின்ற கொடிய ஒரு பாதகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் விலையைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்களும் சரி, அவர்களுடைய கட்சியும் சரி, நெல் விளைச்சலைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்குரிய விலையைக் கொடுக்கவில்லையென்பதை அவர்கள் மறுக்க முடியாது. ஒரு குவிண்டாலுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற பணத்திலே போனஸ் இரண்டு ரூபாய் அல்லது மூன்று ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார் விலையை உயர்த்தியிருக்கிற நேரத்திலே மத்திய சர்க்கார் அளவுக்கு மாநில சர்க்காரும் உயர்த்தி போனஸையும் அத்துடன் சேர்த்துக் கொடுக்கவேண்டுமே தவிர, மத்திய சர்க்கார் விலையை உயர்த்திவிட்டது, நாங்கள் தற்போது கொடுப்பது, கொடுக்கின்ற போனஸ் தொகையையும் சேர்த்துத்தான் ஈடுகட்டுகிறது என்ற அளவிலே விலையை ஏற்றவேண்டியதில்லை என்று அவர்கள் சொன்னால் அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி போனஸ் தரப்படுவது, விவசாயிகளுக்கு ஊக்கத்தினைத் தருவதற்கும் மேலும் மேலும் விளைச்சலை அவர்கள் அதிகப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தைக் கொடுப்பதற்கும் அவசியமாகும் என்ற அடிப்படையிலேதான் தரப்படுகிறது. விலையை உயர்த்தியிருக்கிற காரணத்தாலே போனஸை மறுப்பது நல்லதல்ல, விவசாயிகளுக்கு உகந்ததல்ல, நெல் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கும் அது பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்க நிலவரித் துறையைப் பொறுத்தவரைக்கும் நான்கு விதமான முறைகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(1) To take away the composition provisions in the Act.

(2) To delete the provision of standard acres.

(3) To withdraw the exemption limit of 12½ standard acres.

(4) To bring the provisions in Act on the lines of the Indian Income-Tax Act.

வருமான வரியை மற்றத் துறைகளிலே வசூலிக்கும்பொழுது எவ்வளவு தவறு இருக்கிறது என்று சொல்லப்படுகிறதோ அதேபோன்று தான் இந்த வரியைப் பொறுத்த அளவிலும் வரிவிதிப்பு முறையும் தவறாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கம்பவுண்டிங் விகிதத்தை குறைப்பது பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக நிலத்தைத் தரம்பிரிப்பது பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நன்செய் நிலத்தைப் பொறுத்தவரைக்கும் இப்பொழுது சொல்லப்பட்டு இருக்கின்ற முறை சரியானது அல்ல. வரியின்

அடியிலே; பாய்ச்சல் பகுதியிலே இருக்கக்கூடிய நிலத்தை முதல் மடை நிலம் என்றும், கடைசியிலே இருக்கின்ற நிலத்தை கடை மடை நிலம் என்றும் சொல்கிறோம். முதல் மடையில் இருக்கும் நிலம் ஏரியிலே தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் விளைந்துவிடும். ஏரியிலே தண்ணீர் இல்லாவிட்டாலும் ஏரியில் இருக்கிற ஈரத்தின் காரணமாக அந்த நிலம் விளைந்துவிடும். ஆனால் கடைக்கால் பகுதியில் இருக்கின்ற நிலத்தைப் பொறுத்தவரையில், ஏரி நிறைந்து தண்ணீர் சென்றால் தான் அங்கேயிருக்கின்ற நிலம் விளையும். இப்படி இரண்டு விதமாக நிலத்தின் தரத்தைப் பிரிக்காதிருப்பது விவசாயிகளுக்கு நன்மை செய்வதாகாது.

இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தின் காரணமாக நிலம் தேவையானவர்களுக்குக் கொடுக்கப்படுவது, இன்றைய தினம் வழக்குகள் மூலம் தடை போடப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. அப்படிப்பட்ட தடைகள் நீங்கவும் உரிய முறையில் நிலம் கொடுக்கப்படுவதற்கும் உணவு அமைச்சர் அவர்கள் விரைவில் முயலுவார்கள் என்று நம்புகிறேன்.

பஞ்சத் தணிப்புபற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்வதற்கு விரும்புகிறேன். கடந்த நவம்பரில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே, தென் ஆர்க்காடு மாவட்டத்திலே குறிப்பாக திண்டிவனம் வட்டமும், செஞ்சி வட்டமும்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டவையாகும். இரண்டு வட்டங்களிலும் புயலால் மிகவும் கடுமையாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நன்செய் நிலங்கள் எல்லாம் பாழாக்கப்பட்டு, புன்செய் நிலங்கள் மாதிரி, கரம்பு நிலங்கள் மாதிரி மாறக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஏரிகள் எல்லாம் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. முன்பெல்லாம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டதைப் போல் இனிமேலும் துரிதமாக அவற்றைச் செப்பனிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடூர் நீர்த்தேக்கத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அணைக்கட்டு உடைப்பின் காரணமாக நன்செய் நிலங்கள் அத்தனையும் கிணறு அளவுக்கு, 10, 15 கெஜ அளவுக்குப் பள்ளமாக ஆகிவிட்டன. எந்தவிதமான உபயோகத்திற்கும் பயனற்றதாகிவிட்டன. அவர்களுக்கு உதவி செய்வதோடு இந்த அரசாங்கம் அவர்களுடைய நிலங்களுக்கான நஷ்டயீடும் கொடுக்க வேண்டும். அப்படி நஷ்டயீட்டைத் தருவதற்கு முன்வருவார்கள் என்று நினைக்கிறேன். விழுப்புரத்தில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் மராமத்துத்துறை அமைச்சரும், விவசாய அமைச்சரும் இதற்கான உறுதி மொழியைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி பட்ஜெட்டிலோ, மானியக் கோரிக்கையிலோ விவரங்கள் காணோம். உணவு அமைச்சர் அவர்கள் இதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன். வீடூர் பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு ஏலத்தில் விடுவார்கள். அப்படிக் குத்தகைக்கு எடுத்து பயிரிடுகின்றவர்கள் அடுத்த வருடமும் அவர்கள் எடுத்துப் பயிரிடுவார்கள் என்ற நிலைமைதான் இருந்தது. முதல் ஆண்டு உரமிட்டு பயிர் செய்வதில் நல்லதைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், லாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை அடுத்த ஆண்டும் சேர்த்துப் பயிர்செய்வதன்மூலம் ஈடுசெய்துகொள்ளலாம் என்ற முறையில்தான் அது செய்யப்பட்டது. ஆனால், இன்றைக்கு அரசியல் காரணமாகவோ அல்லது என்ன காரணமாகவோ அந்த முறையில் கொடுக்கப்படுவதில்லை. உரிய காலத்திலே ஏலம் விடப்படாத காரணத்தினாலே ஹரிஜன மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களையெல்லாம் காலத்தில் ஏலம் விடாததன் காரணமாக யார் வேண்டுமானாலும் பயிர்செய்துகொள்ளலாம் என்ற அளவில், ' தடி எடுத்தவன் தண்டல்காரன் ' என்ற நிலைதான் அங்கு இருக்கிறது. ஆகவே உணவு அமைச்சர் அவர்கள் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநிலம் முழுதும் தீயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தத் தொகை வெள்ளைக்காரன் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது, அப்படியே இன்றைக்கும் இருக்கிறது. 30 ரூபாய் உதவி, துணிமணிகள் வாங்குவதற்கு 10 ரூபாய், ஆக மொத்தம் 40 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. 30 ரூபாய் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு வீட்டைக்கட்டக்கூடிய நிலைமை இருக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், 30 ரூபாயை அதிகப்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் 50 ரூபாய் கொடுத்தால் வீட்டைச் சரிசெய்துகொள்வதற்கு ஓரளவு சௌகரியமாக இருக்கும்.

அடுத்ததாக, முத்திரைத் தாள்கள் விநியோகத்தைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லிவிட்டு உரையை முடித்துக்கொள்கிறேன். முத்திரைத் தாள்கள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் கூடுமான வரையிலும் அரசாங்கமே அதை ஏற்றுக்கொண்டால் நல்லது. ஏனென்றால் பல பகுதிகளில் முத்திரைத் தாள்கள் சரியாகக் கிடைப்பதில்லை. சில பகுதிகளிலே வேண்டுமென்றே ஊரிலே இருக்கின்ற உட்பூசல் காரணமாக ஸ்டாம்ப் பேப்பர் இல்லையென்று சொல்லக்கூடிய முறையில் இருப்பதால் ஸ்டாம்ப் பேப்பர் வாங்குவதைத் தடைசெய்யக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே முத்திரைத் தாள்கள் விநியோகத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமானால், தபால் ஆபீஸ்களிலோ அல்லது பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களிலோ வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிகொண்டு என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : பேசுவதற்கு 24 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 5 நிமிடங்கள் என்று கொடுத்தாலும் கூட இரண்டு மணி நேரம் தேவைப்படுகிறது. அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர், அதற்குப் பிறகு அமைச்சர் பதிலளிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே மணி அடித்து உட்கார வைத்தார் என்ற பெயர் எனக்கு வராமல், உறுப்பினர் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்களுக்குள் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. முனு. ஆதி : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நிலவரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். கொடுத்திருக்கிற நேரம் ஐந்து நிமிடங்களாக இருப்பதால், எதைப் பேசுவது, எதை விடுவது என்று தெரியாமல் ஒட்டுமொத்தமாகப் பேசிவிட வேண்டிய நிலையில் இப்பொழுது நான் இருக்கிறேன். புன்செய் நிலத்திற்கு வரியை ரத்து செய்தது விவசாய மக்களுக்கெல்லாம் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதனை நான் மட்டுமல்ல இந்த மாமன்றமே நன்றாக உணர்ந்திருக்கிறது. எனக்கு முன்னால் பேசின எதிர்கட்சி நண்பர் அவர்கள், உடனடியாக நன்செய் நிலத்திற்கும் வரியை ரத்து செய்யலாமே என்று சொன்னார்கள். எங்களுடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், வந்து மூன்று மாதங்களாகவில்லை, அதற்குள் குறைகளைச் சொல்லுகிறவர்களைப் பார்த்து நான் ஒன்று சொல்லுகிறேன். இவர்கள் இருபதாண்டுகளாக ஆட்சியில் இருந்தார்களே, அப்பொழுது ஏன் இதைச் செய்யவில்லை என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. எங்களுடைய அறிஞர் அண்ணா அவர்கள் அழகான கதை சொல்லுவார்கள். பத்து தோசை சுடவேண்டுமானால், ஒரு தோசை சுட ஒரு நிமிடமாகும். ஆனால், முதல் தோசை சுட ஐந்து நிமிடம் ஆகும். அப்படித்தான் எல்லாமே என்று சொல்லுவார்கள். அதுதான் நினைவுக்கு வருகிறது. இருபதாண்டு காலம் ஆட்சி செய்த கட்சியினருக்கு எந்தெந்தத் தலைப்பிலே, எதை எதை சிக்கனப்படுத்தி, எந்த எந்த செலவினங்களைக் குறைத்து நில வரியை ரத்து செய்வதன்மூலம் ஏற்படும் இழப்பை ஈடுசெய்வது என்று

தெரிந்திருக்கவேண்டும். இருபதாண்டுக்காலம் ஆட்சியிலே இருந்து விட்டு அதைக் குறையுங்கள் இதை நக்குங்கள் என்று சொல்லுகிறார்கள் என்றால் விஷயம் தெரியாமல் சொல்லவில்லை. நில வரியை ரத்து செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றால், ஒன்றுமே தெரியாமல் சொல்லவில்லை. இந்த மூன்று மாதங்களில் இது கிடைக்கவில்லை, அது கிடைக்கவில்லை என்று அவர்கள் சொல்லுவது ஆச்சரியத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. நில வரியைப் புன்செய் நிலத்திற்கு ரத்து செய்த இந்த ஆட்சி வர வர நன்செய் நிலத்திற்கும் ரத்து செய்யும் என்ற நம்பிக்கை வேரூன்றிவிட்டிருக்கிறது என்பதை இந்த ஆட்சி அறிந்துகொள்ள வேண்டும்.

முன்னாலே ஆண்டவர்கள் எப்படியெல்லாம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை முறையாக அமல்படுத்தவில்லை என்பதைக் கடந்த கால நிகழ்ச்சிகளே சான்றுகள் கூறும். முப்பது ஸ்டாண்டேர்டு ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள், அதற்கு அதிகமாக இருக்கும் நிலத்தைச் சர்க்காரிடம் ஒப்படைத்து நிலம் இல்லாதவர்களுக்குத் தர வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதனால் பலன் கிடைத்ததா என்று பல முறை கடந்த மன்றத்தில் கேள்வி கேட்டபோது, "மிச்சப்பட்டதை எந்த ஊருக்கும் கொண்டுபோய்விடவில்லை" என்ற பதிலைப் பெற்றோமே தவிர, வேறொன்றுமில்லை. நிலச் சீர்திருத்தம் எந்த ஏழை விவசாயிக்கும் பலன் அளிக்கவில்லை என்பதைக் கடந்த மாமன்றத்தில் பேசியிருக்கிறோம். இப்பொழுதிருக்கும் நில வரித் துறை அமைச்சரும், இந்த அரசாங்கமும் அதைப் புனராலோசனை செய்து, இன்னும் அப்படியே அனுபவித்துக்கொண்டிருக்கிற நிலப் பிரபுக் களினுடைய நிலங்களைக் குறித்துப் பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் நியமித்து, அந்தக் கமிஷன் அளிக்கும் புள்ளி விவரங்களை வைத்து, மிச்சப்படும் நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்குத் தருவதற்கான ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுத்தால்கூட நன்றாக இருக்கும்.

நிலத்திலே பயிரிடுகிற விவசாயிகளுக்கு முதல் தேவையாக இருப்பது ரசாயன உரம் (பெர்ட்டிலைசர்ஸ்). அந்த உரங்கள் முறையாகக் கிடைக்கும் படியான ஏற்பாட்டை நாம் செய்து கொடுத்துவிட்டால் விவசாயம் முன்னேற்றம் அடையும். விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளையும், சலுகைகளையும் நாம் செய்து கொடுத்துவிட்டால், அவர்கள் வரியைப் பற்றிக்கூட அவ்வளவாகக் கவலைப்பட மாட்டார்கள். கடந்த இருபதாண்டு காலமாக, விவசாயத்திற்குத் தேவைப்படுகிற உரம் போன்ற சில சலுகைகளுக்கு வழி செய்யாத காரணத்தினால்தான் விவசாயம் அபிவிருத்தி அடையவில்லை என்று சொல்லலாம். இந்த மானியத்தில் நான் உரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இதையெல்லாம் விவசாய மானியத்தில் பேசலாமே என்று சிலர் கருதக் கூடும். என்றாலும், நில வரிக்கும் விவசாயத்திற்கும், தொடர்பு இருக்கிற காரணத்தால் அதை இப்பொழுது பேசிவிடுகிறேன். விவசாயத்திற்குத் தேவையான உரம் காலாகாலத்தில் கிடைக்க சென்ற காலங்களில் முக்கியத்துவம் தரப்படவில்லை என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தத் துறையில் இந்த அரசு சற்று கவனம் செலுத்த வேண்டும். அதையடுத்து, பம்ப் செட்டுகளுக்கு மின்சார தொடர்புகள் கொடுக்க வேண்டும் என்பது பற்றி மின்சாரம் சம்பந்தப்பட்ட விவாதத்தில் பேசலாம் என்றாலும், அதுவும் நிலவரி மானியத்திற்குத் தொடர்புடையதாக இருக்கிறது என்பதால் அதையும் இங்கே குறிப்பிடுகிறேன். மின்சாரத் தொடர்புகளை உடனடியாகத் தர ஏற்பாடு செய்தால் நிலத்திலே விவசாயம் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களைப் பற்றி ஒரு வார்த்தை. நாட்டிலுள்ள ஏழை மக்கள் விவசாயம் செய்துவருகின்ற புறம்போக்கு நிலங்களை அவரவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும். குடி மனையிலே இருப்பவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டும். இந்த இரண்டு திட்டங்களை நாடு பூராவும் மக்கள் எதிர்பார்க்கிறாகள். இந்த ஆட்சி வருவதற்கு முன்னால், புறம்போக்கு நிலங்களில் பத்து பதினைந்து ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்தவர்களுக்கு ஏக்கருக்கு 150 ரூபாய் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். பட்டா வழங்கப்பட்டிருந்தால், 15 ரூபாய்க்குமேல் ஆகாது. தரம்பாக இருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டு வருபவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பிரச்சினையை நமது அமைச்சர் அவர்கள் தீர்த்துவிட்டார்களானால், உண்மையிலேயே நிலவரித் துறையிலே இருக்கும் அமைச்சருக்கு நல்ல பாராட்டு கிடைக்கும்.

ஜமீந்தார்களுக்கு நஷ்டஈடு என்ற வகையில் 11 லட்ச ரூபாய் தர வேண்டியிருக்கிறது. என்னைக் கேட்டால், அந்தத் தொகையை அவர்களுக்குத் தரவே வேண்டாம் என்றுதான் சொல்லுவேன். இதுவரை கொடுத்ததே போதும். சேரணிப் படையின் மூலம் அபிவிருத்தி வேலைகளுக்கு அதைச் செலவிடலாம். இதுவரை அவர்கள் அனுபவித்து வந்ததே போதும். ஜமீந்தார்களுக்குத் தர வேண்டிய தொகையைத் தராமல் நிறுத்திவிடலாம் என்கிற என்னுடைய சொந்தக் கருத்தை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நில அடைமான பாங்குகள் செய்கின்ற தவறுகள் ஏராளம். ஆங்காங்கு இருக்கும் சொஸைட்டிகளில் யார் யார் டைரக்டர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய இஷ்டப்படிதான் கடன் தரப்படுகிறது. முறையாக மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு குறிப்பிட்ட பார்ட்டியைக் கூப்பிட்டு விசாரிக்காமல், கடன் கொடுப்பதிலே ஏதோ செய்கிறார்கள். பிரெசிடென்ட் ஏதோ சொல்லிவிட்டுப் போய் விடுகிறார். ஆனால், ஓராண்டு பொறுத்து நிலத்தை ஜப்தி செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். நில அடைமான பாங்குகளைப் பயன்படுத்துகிறவர்கள் கொஞ்சம் தயவு செய்து, அதை முறையாகக் கணக்கிட்டு, பரிசீலனை செய்து விசாரித்து, இடத்திற்குச் சென்று செய்தால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே, ஏழைகளைப் பாதிக்காத நிலையில் நில அடைமான பாங்குகளைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டு, இத்துடன் என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : கனம் துணைத்தலைவர் அவர்களே இப்பொழுது இந்த நிலவரி அமைப்பு மிகவும் சிக்கலான ஒரு விஷயமாக இருக்கிறது. வெகு நீண்ட காலத்திற்கு முன்பு நிலங்கள் எல்லாம் தரம் பிரிக்கப்பட்டு, இன்றைக்கும் அதே தரத்தை வைத்துத்தான் வரிகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை நாம் உணர்கிறோம். ஆகவே இப்பொழுதிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு நிலங்களின் தரம் பிரித்தலை மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, ஷி.எம்.பி. ஏரியாவில் தண்ணீர் பாய்ச்சலுக்கு வந்து 32 வருஷங்கள் ஆகின்றன. இந்த 32 வருஷ காலமாகத் தண்ணீர் பாய்ந்து நன்செய்யாக இப்பொழுது சாகுபடி செய்யப்படுகின்ற நிலங்கள் எல்லாம் இப்பொழுதும் செட்டில்மென்டிலே கூட புன்செய் என்று எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகையால், எந்தெந்த நிலங்கள் பல வருஷங்களாக நன்செய் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றனவோ, அந்த நிலங்களையெல்லாம் நன்செய் தரத்தில் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால், விவசாயிகள் வரியைக் கணக்கிட சௌகரியமாக இருக்கும். ஆகவே, நிலத்தின் தரம் பிரித்தலைக் குறித்து மறுபரிசீலனை செய்து நிலத்தின் தரத்தைப் பிரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புன்செய் நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருப்பதை நான் ஆதரிக்கின்றேன். நன்செய் நிலங்களைப் பொறுத்தும் வரி விலக்கு கொடுப்பது பற்றிப் பரிசீலனை செய்யப்படுமென்று முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் போது, இரண்டாம் போகம் சாகுபடி செய்கிறவர்களுககுத் தண்ணீர்த்

தீர்வையிலிருந்து விலக்களிப்பது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அது அவர்களுக்கு நன்செய் சாகுபடி செய்ய வேண்டுமென்ற ஊக்கத்தைக் கொடுப்பதாக இருக்கும். அதனால் பெரிய நஷ்டம் வந்துவிடும் என்று கருதுவதற்கில்லை. எனக்கு முழுக் கணக்கும் தெரியவில்லையென்றாலும், தோராயமாக ஐம்பது லட்சம் ரூபாய்தான் இந்த வகையில் அரசாங்கத்திற்கு வருமானம் குறையக் கூடும். ஆனால், பெரும்பாலான நன்செய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, கிராமங்களிலே விவசாயிகள் வரி செலுத்துவதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு என்ன வரி இருக்கிறது என்று தெளிவாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. இன்றைக்குக் கேட்டால் ஒரு கணக்கு, நாளைக்குக் கேட்டால் ஒரு கணக்கு, மறுநாள் கேட்டால் வேறொரு கணக்கு என்று இருக்கிறது. கிராமக் கணக்குகள் ஒரே விதமாக இருப்பதில்லை. இதெல்லாம் கணக்கு எழுதும் கிராம அதிகாரிகளுடைய குறையாக இருக்கக்கூடும் என்றாலும், இந்தக் குறையை எந்தக் காலத்தில்தான் நிவர்த்தி செய்யப் போகிறோம் என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. இதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். இந்த அரசுக்கு நான் ஒரு யோசனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருஷ ஆரம்பத்தில் ஒரு விவசாயியிடமிருந்து வரி வசூலிப்பதற்கு முன்னால், அந்த விவசாயிக்கு உள்ள நிலத்தின் அளவு, அதற்குரிய தீர்வை, செஸ் இப்படி எல்லாவற்றையும் பற்றி விவரங்களைக் குறித்து ஒரு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்த பிறகு அந்த வரி வசூல் செய்ய வேண்டும் என்ற முறையைப் புகுத்தினால் அவர்களுக்கு எந்த எந்த நிலத்திற்கு என்ன என்ன வரி, என்னென்ன நிலத்தில் சாகுபடி செய்திருக்கிறார்கள். சாகுபடி தன் பெயரில் எழுதப்பட்டிருக்கிறதா, வேறு பெயரில் எழுதப்பட்டிருக்கிறதா என்று எல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இல்லையெனில், ஒரு விவசாயி வரி கட்டிக்கொண்டே வருவான். பிறகு, விவகாரங்கள் ஏற்பட்டு, கோர்ட்டுக்குப் போகும்போது, கணக்கைப் பார்த்தால், வேறு யார் பெயரிலோ சாகுபடி செய்ததாகக் கணக்கு எழுதப்பட்டிருக்கும். இதெல்லாம் சாதாரணமாக நடைமுறையில் பார்த்துக்கொண்டு வருகிற விஷயமாகும். எல்லா விவரங்களும் இருக்கும்படியான டிமாண்ட் நோட்டீஸ் வருஷா வருஷம் கொடுக்கப்படுவது கிடையாது. இப்படியெல்லாம் இருக்கக்கூடிய கணக்கு நிலை ஆரம்பத்திலேயே சீர் செய்யப்படுவதற்கு இந்தப் புதிய அரசு நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்கள் அஸைன்மெண்ட் பற்றி ஒரு வார்த்தை. பல நிலங்கள் எத்தனை எத்தனையோ கை மாறி மாறி, என்னென்னவோ செய்யப்பட்டுவிட்டன. இருக்கும் நிலங்களை உடனடியாக நிலமில்லாதவர்களுக்கு அஸைன்மெண்ட் செய்து தரவேண்டும். அப்படி அஸைன்மெண்ட் செய்யும்போது, தொகை நிர்ணயம் செய்து வாங்கக் கூடாது. அப்படித் தொகை நிர்ணயம் செய்தால் யாரிடத்திலோ கடன் வாங்கி அஸைன்மெண்ட் பெற்று அந்த நிலத்தைத் திரும்பவும் விற்றுவிடுவதால், நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் போவது கிடையாது. இதற்கு என்று ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்து பார்த்தால், யார்யார் நிலம் அஸைன்மெண்ட் வாங்கினார்களோ அவர்களிடம் அந்த நிலம் இருக்காது. 90 சத வீத நிலம் கைமாறிப் போயிருக்கும் இந்த நிலைமைகளெல்லாம் கடன் வாங்கி அஸைன்மெண்ட் பெறுவதனால் ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றி, இனமாகவே நிலத்தை நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். முதலிலே சீர்திருத்தம் என்கிறபோது சிதறுண்டு கிடக்கும் நிலங்களை ஒன்று சேர்ப்பதுதான் மிக மிக முக்கியம். பல தடவை சென்ற சட்டசபைக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லியும்கூட, சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை. சிதறுண்டு கிடக்கும் நிலங்களை ஒன்று சேர்ப்பதுதான் அதிகமான பலனைத் தரும். சிதறுண்டும் கிடக்கும் நிலங்களைப் பரிவர்த்தனை மூலம் ஒன்று சேர்க்கிறபோது, கிரயம் வாங்குவதற்கு சமமான ஸ்டாம்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அது கூடாது

என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு பரிவர்த்தனைக்கு ஸ்டாம்புக் கட்டணத்தைக் குறைத்து அதற்குத் தக்க விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ள பிரதேசங்களில் அபிவிருத்தி வரி போடப்படுகிறது. அபிவிருத்தி வரி போடக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அந்தத் திட்டங்களின் மூலம் எந்த எந்த நிலங்கள் பயன் அடைய ஆரம்பித்துவிட்டனவோ அவைகளுக்குப் போடுவது பற்றி ஆட்சேபணை இல்லை. என்னுடைய பகுதியில் பட்டுவானச்சி வடிகால் திட்டத்தை நிறைவேற்றினார்கள். அதனால் பயன் கிடைக்கவில்லை. வெள்ளப் பெருக்கு இருக்கிறது. இருந்தும் அபிவிருத்தி வரி போடுகிறார்கள். உளவயல் வாய்க்கால் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் போட்டார்கள். அதனால் இன்னமும் கடைகோடியில் உள்ள பகுதிகளுக்கு சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இருந்தும் அபிவிருத்தி வரி போடப்படுகிறது. இந்த அரசு இதுபோல எந்த எந்த நீர்ப்பாசனத் திட்டத்தினால் இன்னமும் மக்களுக்கு எவ்வித பலனும் ஏற்படாதிருக்கிறதோ அந்த அந்தத் திட்டப் பகுதிகளில் அபிவிருத்தி வரி போடாதிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனம் ஒழிப்பிலே சர்க்கார் காம்பன்சேஷன் பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டார்கள். இருந்தும் கோர்ட்டில் இருந்து அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படாது பல வருஷங்களாக இருக்கிறது. அதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அடுத்து, சில இடங்களில் நிலத் தகராறு இருந்து வருகிறது. வாய்க்காலை அடைத்துவிட்டால் அப்பால் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பது கிடையாது. அந்த நிலம் தரிசாகக் கிடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நிலம் தரிசாகக் கிடக்காது, எல்லா நிலங்களுக்கும் தண்ணீர் பாய்கிற அளவில் தகராறு இல்லாமல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வெ. முனுசாமி :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை வழங்கலாம் என்று இருக்கிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர் விவாதத்தை தொடங்குகிறபோது பரிதாபப்படுகிறேன் என்று வருத்தத்தோடு தொடங்கியிருக்கிறார்கள். யார் யாரைப் பார்த்துப் பரிதாபப்படுவது......

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது மிகக் குறைந்த நேரம். எதிர்க்கட்சிக்காரர்கள் பேசினதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வெ. முனுசாமி : எதிர்க்கட்சியில் இருந்து பேசுபவர்கள் அரசு நல்ல காரியங்களைச் செய்கிறபோது பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கையை அவர்கள் இழக்கச் செய்துவிட்டார்கள். இன்றையதினம் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். அதிலே இருக்கிற இடர்ப்பாடுகளை ஒழுங்கு செய்ய வேண்டுமென்று நான் அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு நிலம் பற்றி வழக்கு ஏற்படுகிற நேரத்தில் அந்த நிலம் யாருக்குச் சொந்தமானது என்பதைத் தீர்மானிக்க வாய்தா கட்டிய தீர்வை கச்சாத்துக்கள் தேவைப்படுகின்றன. வரி கட்டுகிறபோதுதான் தீர்வை கச்சாத்துக்கள் கொடுக்கப்படுகின்றன. தீர்வையை எடுத்துவிடுகிறபோது, இப்படிப்பட்ட வழக்குகளில் நியாயமான முறையில் நேர்மையான முறையில் அவரவர்களுடைய நிலத்திற்குத் தக்க சான்று ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதை அரசு ஆராய வேண்டும்.

ஜமாபந்தி என்ற கேலிக்கூத்து பாரதக் கூத்து நடப்பதுபோல ஏப்ரல், மே திங்களில் நடைபெற்று வருகிறது. ஜமாபந்திக்கு ஒரு வார காலத்தில கிராம அதிகாரிகள் கரம்பு நிலத்தைக் கம்பு போட்ட நிலம் என்றும், கம்பு போட்ட நிலத்தை கரும்பு போட்ட நிலம் என்றும், கரும்பு போட்ட

நிலத்தைக் கரம்பு நிலம் என்றும் கணக்கு எழுதிக் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன் காரணமாகப் பயிரிடப்படாத கரம்பு நிலத்திற்கு வரி கட்டுகிறவர்களையும், கரும்பு போட்ட நிலத்திற்கு வரி விலக்குப் பெறுகிறவர்களையும் பார்க்கிறோம். இத்தகைய ஒரு துர்ப்பாக்கிய மான நிலைமை நாட்டில் இருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து தவருக நடந்துகொள்ளுகிற கிராம அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும், விவசாயிகளுக்குச் சரியான ஒரு பாதுகாப்பினை ஏற்படுத்தித் தரவும் இப்போதுள்ள நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஜமாபந்தி என்கிற நிலையையே எடுத்து விட்டு ஆடிட்டர்களைப் போட்டு ஆடிட் செய்கிற முறையை ஏற்படுத்தினுல் நன்ருக இருக்கும். ஜமாபந்தி என்கிற முறையில் பொதுமக்கள் அத்தனை பேரும் கலெக்டரிடம் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் இருப்பதாகக் கருதுகிருர்கள். குறைகள் களையப்படும் என்கிற நம்பிக்கை வளர்க்கப்பட்டிருக்கிறது. ஜமாபந்திகளில் எத்தனையோ மனுக் கள் இத்துணைக் காலமாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனல் யாருக்காவது இதுவரை அவர்கள் ஜமாபந்தியில் கொடுத்த மனுவின் பேரில் பரிகாரம் கிடைத்திருக்கிறதா என்ருல் இல்லை. ஆகவே இப்படிப் பட்ட முட்டுக்கட்டைகளைப் போக்குகின்ற வகையில் நாம் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்று இந்தப் புது அமைச்சரவை யைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நேரத்தில் பட்டா வழங்குவதில் கூட சிக்கல் இருக்கிறது. நிலமில்லாத ஏழை மக்களுக்கு நிலம் வழங்குகிறபோது சில கட்டுப் பாடுகளைக் கொண்டுவந்தாக வேண்டும். அவர்களைச் சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தியாக வேண்டும். குறிப்பாக நிலமில்லாத விவசாயிகளுக்கு தரிசு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கிறபோது அதைத் தனியாரிடமோ, வேறு யாரிடமோ அடமானம் வைக்கவோ, விற்கவோ கூடாது என்று கட்டுப்பாடு விதிக்க வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்தினுல்தான் விவ சாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படுகிற நிலம் சரியான முறையில் சாகுபடி செய்யப்படும்.

அடுத்து, புன்செய் நிலத்திற்கு வரியை ரத்து செய்கிற நேரத்தில் நாம் ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும். கிராம அதிகாரிகள், கர்ணம் போன்றவர்கள் அடங்கல் வைத்திருக்கிருர்கள். அதிலே ஒரு நிலம் பயிர் செய்யப்படுகிறதா, கரம்பாகக் கிடக்கிறதா, என்ன பயிர் செய்யப்பட்டிருக் கிறது என்று எழுதுகிறபோதே—அதன் அருகில் யார் யார் பயிரிட்டு வருகி ருர்கள் என்கிற பெயர் விவரங்களையும் எழுதினுல் மிக நன்ருக இருக் கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த விவரம் அந்த நிலத் தைப் பயிரிடுகிறவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் ஆதாரமாக இருக்கும். அதற்கடுத்து கிரயம் ரிஜிஸ்ட்ரேஷன் செய்த உடனே பட்டா மாற்றுகிற அளவுக்கு ஒரு ஒப்பந்தத்தை எழுதி, உடனடியாகக் கட்டாயமாகப் பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கடைசியாக, புயலினுல் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து வந்திருக்கிறவன் என்ற முறையில் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். செஞ்சிப் பகுதி புயலினுல் மிகவும் மோசமாகப் பாதிக் கப்பட்டது. அப்போது புயலினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 40 ரூபாய் என்ற அளவில் கொடுத்தார்கள். அது போதாது. அந்தப் புயலினுல் பாதிக்கப்பட்டு, மண் மேடிட்டுப்போன நன்செய் நிலங்கள் இன்ன மும் பயிரிட முடியாமல் இருக்கின்றன. ஆகவே இந்த அரசு அப்படிப்பட்ட வர்களுக்கு ஒரு திட்டம் தர வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள பகுதிக் கடன்களின் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது. தனிப்பட்டவர்களிடம் இருந்து கோரிக்கை வந்தால், கவனிக்க முடியும் என்று தெரிவித்தார்கள். தனிப்பட்டவர்கள் கோரிக்கை கொடுத்தும் கவனிக்கப்படவில்லை. ஆகவே, செஞ்சி, திண்டிவனம் போன்ற தென்னூர்க்காடு மாவட்டத்தில் அரசினர் கொடுத்திருக்கிற கடன்களின் பகுதி வசூலைக் காலம் தள்ளி வைக்க வேண்டுமென்ற என் கருத்தினைத் தெரி வித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஐயராஜ் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற மானியத்தின் மீது என் கட்சி கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். வருவாய்த்துறை இலாக்காவானது இன்று நேற்று அல்ல, நீண்ட நெடு நாளாக இருந்து வருகிற இலாக்கா. இந்த நாட்டில் இருக்கிற மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும், விவசாயிகள் நல்ல முறையில் செயல்படுவ தற்கும் இது முக்கியமான இலாக்காவாக இருக்கிறது. நிலத்தை எடுத்துக் கொண்டால் வரி விதிப்பு, வரியை ரத்து செய்வது என்பதெல்லாம் ரெவின்யூ இலாக்காவில் அடங்கியிருக்கிறது. சிறிய பாசனத் திட்டம் இந்த இலாகாவில் இணைக்கப்பட்டிருக்கிறது. சிறிய பாசனத் திட்டம் என்கிற போது சில பஞ்சாயத்துக்களில் இவை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு சில பஞ்சா யத்து யூனியன்கள் வாய்க்கால் மராமத்து செய்கிருர்கள். ஒரு சில பஞ்சாயத்து யூனியன்கள் செய்வதில்லை. கிராமங்களில் விவசாயம் செய் வதற்கு நீர்ப்பாசன வசதி நல்ல முறையில் இருந்தாக வேண்டும். அதுவும் குறிப்பாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் கண் காணித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதுவும் குறிப்பாக, தஞ்சை சாகுபடியாளர்கள் இரண்டு மூன்று ஆண்டு களாகவே வெள்ளத்தினுலும், புயலினுலும் பாதிக்கப்பட்டு வந்திருக் கிருர்கள். அதன் காரணமாக விவசாயிகள் சரியான முறையில் குத்த கையை ஏற்று நடத்த முடியவில்லை. மிராசுதார்கள் நெல்லை எப்படி வசூல் செய்ய வேண்டுமென்று விரும்புகிருர்களோ அதற்காக ரெவின்யூ கோர்ட்டுக்குப் பதிலாக முன்சீப் கோர்ட்டுக்குப் போகலாம் என்று திட்டம் இருக்கிறது. முன்சீப் கோர்ட்டில் ஆயிரக்கணக்கான மனுக்கள் விவசாயி கள் மீது இருக்கின்றன. அதன் காரணமாக விவசாயிகள் சாகுபடி செய்கின்ற நிலை வரும்போது ஜப்தி மூலமாகவோ, நடவடிக்கை மூல மாகவோ வெளியேற்றப்படுவார்களோ என்பதைப் பார்க்கும்போது விவ சாயிகள் அவதிக்குள்ளாகும் நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக, இந்த மானியத்திலேயே வராவிட்டாலும் குத்தகைதாரர்கள் என்ற முறை யில் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை திட்டவட்டமான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்படாமலே இருக்கிறது. மிராசுதார்களுக்கும் விவசாயி களுக்கும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. எவ்வாறு கூலி நிர்ண யம் செய்ய வேண்டுமென்பதற்காக விவசாயிகள் மாநாடு போட்டு அரசாங் கத்திற்கு மனு அனுப்பியிருக்கிருர்கள். விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்ருல் விவசாயத் தொழிலாளர்களின் வருமான நிலைக்கு சட்டத்தை இயற்ற வேண்டும். கூலி நிர்ணயம் செய்யப்படாத காரணத் தால் மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே தகராறு நடந்து கொண்டிருக்கிறது. மிராசுதார்கள் வெளியூரிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவதால் தகராறு முற்றுகிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக விவசாயக் கூலி நிர்ணயச் சட்டத்தை உருவாக்கி விவசாயக் காலங்களில் ஏற்படும் குழப்பத்தை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசாங்கத்திலே இருந்து பணியாற்றுகின்ற கிராமாதிகாரி கள் எப்படிப் பணியாற்றுகிருர்கள் என்பதைக் குறித்து ஆராய்வதற்காக ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் ஒரு கமிட்டி போட்டு இரண்டு வட்டங்களை ஒன்ருகச் சேர்த்துச் செயல்படுத்தலாமா, பஞ்சாயத்து மூலமாகச் செயல்படுத்தலாமா என்பதைக் குறித்து ஆராய்ந்து பார்த்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படாத நிலை இருக்கிறது. எதிர்த்தரப்பில் பேசும் போது கிராமதிகாரிகள் 'கரம்பை' என்று தவறுதலாக எழுதியன் காரண மாக விவசாயம் பாதிக்கப்பட்டது என்ருர்கள். விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் சூரிடத்தில் பேசும்போது கர்ணத்திடத்தில் அடங்கல், கிராம சேவக்குகள் மூலம் உரம் முதலியவைகளை விநியோகிக்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிருர்கள். அதற்குக்கூட காரணங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிருர்கள்.

மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி : வில்லேஜ் ஆபீசர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் பத்திரிகையில் தவறாக வந்ததை வைத்துப் புரிந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். புதுக்கோட்டையில் நடந்த மாநாட்டில் வில்லேஜ் ஆபீசர்களிடம் நானே நேரடியாக விளக்கினேன். நான் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு அவர்கள் தெளிவு பெற்றார்கள். நான் சொன்னது—கணக்குப் பிள்ளைகளிடத்தில், கிராம சேவக்குகள் சர்வே நம்பரைக் குறித்துத் தருவார்கள் ; அதனால் அவர்களுக்கு வேலை குறைகிறது ; கிராம சேவக்குகளும் பரிசீலனை செய்து விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாமல் துரிதமாக நம்பர்களைப் பெற வாய்ப்பு இருக்கிறது. பத்திரிகைகளில் கணக்குப்பிள்ளைகளை ஒழித்து விடுவதாகத் தவறாக வந்த செய்தியை வைத்துத்தான் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

திரு. பி. ஐயராஜ் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. பஞ்சாயத்து மூலம் வரி வசூல் செய்வது நிறுத்தப்பட்டு, கிராமதிகாரிகள் மூலம் வசூல் செய்யலாம் என்று செய்த பிறகு அவர்கள் அந்தந்த குவார்ட்டருக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறையில் வசூல் செய்வதன் காரணமாக பஞ்சாயத்துக்கு வருமானம் வருகிறது. ஏதோ ஒரு சில இடங்களில் முறை தவறுகள் இருந்தால் அதைச் சீர்திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். கிராமாதிகாரிகள் ஓய்வு நேர அதிகாரிகளா, முழு நேர அதிகாரிகளா என்று தெரிந்தால்தான் அவர்கள் நல்ல முறையில் வேலை செய்ய முடியும். அவர்கள் முழு நேர ஊழியர்கள் என்ற நிலையில் இருந்தால்தான் அவர்கள் ஊக்கமாக, உற்சாகமாக, துரிதமாக வேலைகளைச் செய்ய முடியும். அரசாங்கம் இதைப்பற்றி முடிவு செய்வதோடு விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயச் சட்டத்தையும் உடனடியாகக் கொண்டுவர முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நேரம் அதிகம் இல்லாமையால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டப்பகுதியில் இன்றையதினம் புன்செய் நிலங்களாக இருப்பவற்றை நன்செய்யாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நன்செய்யாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக அனுமதி பெறாமல் நன்செய்யாக்குவதாகக் கூறி தண்டத் தீர்வை வசூலிக்கிறார்கள். கரடுமுரடான நிலத்தை அவர்கள் செப்பனிட்டு புன்செய்யாக இருந்ததை நன்செய்யாக சமப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கும் நேரத்திலேயே அவ்வாறு தீர்வை வசூலிக்காமல் நன்செய்யாகப் பயிரிடுகின்ற நேரத்திலே அத்தகைய வரி வசூலித்தால் நியாயமாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்குத் தற்போது இந்த வரியிலிருந்து விலக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளியாறு அணைக்கட்டு போன்ற பகுதிகளில் விவசாயம் செய்யத்தக்க புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்தால் ஏதாவது பயிர்செய்ய முடியும். உணவு நெருக்கடியைச் சரிக்கட்ட முடியும்.

வால்பாறைப் பகுதியானது, தேயிலை, காப்பி, ஏலம் போன்றவை உற்பத்தியாகக் கூடிய இடமாகும். அந்தப் பகுதியிலிருந்து கோடிக் கணக்காக அந்நிய நாட்டுச் செலாவணி சம்பாதிக்க முடியும் ; சம்பாதித்துத் தருகிறது. அந்த நிலங்களுக்கு இன்றைய தினம் இருக்கின்ற வரி போதாது. அங்கு வரியை இன்னும் கூட அதிகப்படுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அங்குள்ளவர்கள் நிலவரி கட்டுவதில் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் உடனே மறு சர்வே செய்தால் அதிகமாக வரி கிடைக்கும் என்பதை

வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான உணவுப் பொருள் உற்பத்தி செய்யத் தக்க நிலங்கள் நிறைய இருக்கின்றன. அதையும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் உணவுப் பொருளை உற்பத்தி செய்ய வழி வகை ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கக்கூடிய நிலவரி, தண்ணீர்த் தீர்வை போன்றவை மாநில அரசாங்கம், பஞ்சாயத்து ஒருங்கிணைப்பு மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் போன்ற பல்வேறு அமைப்புக்களால் வரிகளாக விதிக்கப்பட அதிகாரம் இருக்கிறது. நன்செய் நிலமாக இருந்தாலும் சரி, புன்செய் நிலமாக இருந்தாலும் சரி ஒரே ஒரு வரி மட்டுந்தான் இருக்க வேண்டும் ; தண்ணீர்த் தீர்வை, நிலத் தீர்வை, செஸ், அடிஷனல் செஸ் என்று ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ வரிகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு இந்தக் கணக்குகள் எல்லாம் தெரியவே தெரியாது. அவர்கள் அதிகமாகக் கல்வியறிவு இல்லாதவர்கள். ஆகவே, இவற்றை ஒருமுகப்படுத்தி நன்செய்யாக இருந்தாலும், புன்செய்யாக இருந்தாலும் ஏக்கருக்கு இவ்வளவு வரி, 15 ரூபாயோ 20 ரூபாயோ என்று வைத்துவிட்டால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். பஞ்ச நிவாரணம் சம்பந்தமாக முன்பு இருந்த அரசாங்கத்தின் கண்ணோட்டம் என்னவென்றால், எங்கே மிகக் குறைந்த கூலிக்கு வேலைக்கு வருகிறார்களோ அதைத்தான் பஞ்சப் பிரதேசமாகக் கருதமுடியும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதே அடிப்படை இப்போதும் இருக்கிறது. அந்தப் பகுதி பஞ்சப் பிரதேசமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இன்றைக்கு யாரும் குறைந்த கூலி வாங்கிக் கொண்டு வேலை செய்யத் தயாராக இருப்பதில்லை. ஆகவே, அந்த அடிப்படையை மாற்ற வேண்டும். இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் இன்று கூட சில பகுதிகள் பஞ்சப் பகுதிகளாகத் தொடர்ந்து இருந்து கொண்டு வருகின்றன. நான் மத்திய அரசைப் பற்றிச் சொல்லவில்லை. அந்த இடங்களை நம் அரசாங்கம் தனியாக சர்வே செய்து அங்கு விசேஷ நடவடிக்கைகளை எடுத்து பஞ்ச நிலை தொடர்ந்து இருக்கக்கூடிய அந்நிலையைப் போக்க திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தண்ணீர் பாயக்கூடிய பகுதிகளில் தண்டத் தீர்வை என்று விதிக்கப்படுவது விவசாயிகளுக்குத் தலைவலியைக் கொடுக்கிறது. வாய்க்கால் கரையை வெட்டுவது, மதகை உடைப்பது போன்ற காரியங்களுக்கு இத்தீர்வை விதிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஒவ்வொரு திட்டத்தின் பேரிலும் சர்க்கார் பல உத்தரவுகளைப் போட்டிருக்கிறார்கள். பல்வேறு ராஜ்யங்களில், துங்கபத்திரா, தாமோதர்வாலி, பக்ரா-நங்கல் போன்றவைகளை எடுத்துக் கொண்டால் அங்கு ஆயிரக்கணக்கான நிலங்கள் பாசன வசதி பெறாமல் இன்னும் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டு விவசாயிகள் தண்ணீர் எங்கு கிடைக்கும், நிலம் எங்கிருக்கிறது என்று ஓடி ஓடி விவசாயம் செய்யக்கூடிய மக்கள். அவர்கள் விவசாயம் செய்வதில் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். தண்ணீர் கிடைக்கிறது என்று, அதைக் கொண்டு விவசாயம் செய்வதினால் தண்டத் தீர்வை போடுவது என்றால் சரியல்ல. இந்த தண்டத் தீர்வையைப் பொறுத்தவரையில் அதன் அடிப்படையையே புனர்ப்பரிசீலனை செய்ய வேண்டுமென்று, நான் கேட்டுக்கொள்கிறேன். கீழ்பவானிப் பகுதியில் நீர் கசிவு வந்து, அதைப் பயன்படுத்தினால் தண்டத்தீர்வை போடப்படுகிறது. 1959,1960,1961-ல் எந்தெந்தப் பகுதிகளில் நெல் வைக்கப்பட்டதோ அவை போக மற்ற இடங்களில் நீர் எடுத்தால், அப்படிச் செய்தால் தண்டத் தீர்வை போடப்படுகிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்வது என்னவெனில், இந்தத் தண்டத் தீர்வை நிலையைப் பற்றி நாம் நல்லமுறையில் பரிசீலனை செய்து இதை மாற்ற வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். புதுப் பாசனம் பெற்ற நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதிக்கப்படுகிறது. இந்த நிலங்களில் எல்லாம் தண்ணீர் கிடைத்த பிறகு அவை எந்தளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கின்றன என்பதை அரசு நல்ல முறையில் பரிசீலனை செய்யவேண்டும். பஞ்சாப் அரசாங்கம் இதுபற்றிப் பரிசீலனை செய்து அதற்குமேல்தான் அபிவிருத்தி வரி வசூலிக்கலாமா வேண்டாமா என்பதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் தண்ணீர் வந்து 12 ஆண்டுகளாகின்றன. ஒரு வருடம் தண்ணீர் இல்லாமல் போய்விட்டால், அவர்கள் பஞ்சத்தில் அடிபட்டுப் போய்விடுகிறார்கள். உண்மையில் அவை அபிவிருத்தி அடைந்திருந்தால், ஒரு வருடம் தாங்கிக் கொள்ளும் நிலை இருக்க வேண்டும். ஆனால் அது இல்லை. ஆகவே மறுபரிசீலனை செய்துதான் அபிவிருத்தி வரி விதிப்பதுபற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள நிலையில் தண்ணீர் பாய்ந்தவுடன் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்ற அடிப்படையில் அபிவிருத்தி வரி விதிக்கக்கூடாது. ஆகவே அதற்காக ஒரு கமிட்டி அல்லது சர்க்கார் அதிகாரிகளைக் கொண்ட பரிசீலனைக் குழு ஒன்று போட்டு அதைப் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்தாற்போல், கிராம அதிகாரிகள் பற்றி மதிப்பிற்குரிய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஒரு கிராம அதிகாரி, தவறு செய்தவர், லஞ்சம் வாங்கி அதன் மூலம் சொத்து சேர்த்திருக்கிறார் என்று கடந்த கால உணவு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். இரும்பு உருக்கு அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூட நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். பத்து ஆண்டுகளாக என்னென்ன முயற்சிகள் செய்ய முடியுமோ, அதைச் செய்தோம். இருந்தும் அந்தக் கணக்குப்பிள்ளை இன்று சௌக்கியமாக நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார். மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், நான், யார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்ட போதிலும் கூட அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரையில் இன்றுள்ள முறையை, பரம்பரை பாத்தியதை முறையை அடியோடு ஒழித்துவிட வேண்டும். கிராம அதிகாரிகளாக வருகிறவர்களுக்கு ஒரு கல்வித் தகுதி வைத்து, பத்தாவது வகுப்பு வரை படித்தவர்களுக்கு ஓரளவு பயிற்சி கொடுத்து அவர்களைக் கிராம அதிகாரிகளாக நியமித்து நல்ல சம்பளம் கொடுத்து அந்த முறையில் ஒரு புதிய நிலையை நம் புதிய அரசு தோற்றுவிக்கும் என நம்புகிறேன்.

கடைசியாக, நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது என்பதைப்பற்றி நான் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்போதுள்ள நில உச்சவரம்புச் சட்டம் உண்மையில் ஒரு சட்டம்தானா என்றால் சட்டம் இல்லை என்பது என் சொந்தக் கருத்து. நிலச்சுவாந்தார்கள் மீதுள்ள துவேஷத்தைக் குறைப்பதற்காக, அவர்கள் மீது மக்களுக்கு துவேஷம் இருக்கக்கூடாது என்பதற்காகச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடே தவிர, உண்மையில் நிலத்தை எடுத்து மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டதல்ல அது. அதுபற்றிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்தால், தெரியும். மொத்தத்தில் எடுக்கப்பட்ட நிலத்தின் எண்ணிக்கை 14,000 ஏக்கர். எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் நான்கு அல்லது ஐயாயிரம் ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய ராஜ்யத்தில் இவ்வளவு தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அச்சட்டம் பலஹீனமானதொரு சட்டம். ஆகவே அதை அடியோடு தூக்கியெறிந்துவிட்டு, புதியதொரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு விவசாயிக்குப் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் ஏக் காரணம் கொண்டும் இருக்கக்கூடாது. இந்த சர்க்கார் ஏழை மக்களின்மேல் நம்பிக்கை உள்ள சர்க்கார் என்று நினைக்கிறேன். ஏழை மக்களின் பலத்தால்தான் இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆகவே ஏழை எளிய பாட்டாளி மக்கள், முப்பது சதவிகிதமுள்ள இந்த மக்கள் வளம் பெற வேண்டுமென்றால், இந்த சர்க்கார் நீடித்து நிலைத்து யாருடைய தொந்தரவும் இல்லாமல் நீண்டகாலம் இருக்க வேண்டும் என்றால் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை;

ஒரு புதிய மாறுதலை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சட்டம்பற்றி இந்த அரசின் கருத்து என்ன என்பதை நான் அழுத்தந் திருத்தமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன். அச்சட்டத்தில் கரும்புத் தோட்டம், பழத் தோட்டம், மேய்ச்சல் நிலம் என்று இப்படிப் பல விதங்களில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆயக்கட்டில் சேர்த்திருக்கும் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் மாடுகள் மேய்க்க என்று ஒதுக்கி வைக்கப்பட்டு, பொட்டல் காடாக இருக்கின்றன. அங்கு தண்ணீர் பாய்ந்தால் பத்தாயிரம் கிடைக்கும், இல்லாவிடில் ஆயிரம் கூட கிடைக்காது. மேய்ச்சல் தரை அல்லது மேய்ச்சல் காடுகள் என்று வைத்து மாடுகளை வளர்த்து மாடு ஒன்றுக்கு 500, 1,000 ரூபாய் என்று விலை வைத்து விற்கிறார்கள். இவைபோன்றவற்றிற்கு வரி விலக்கு கூடாது. ஆகவே, இந்தச் சட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு புது சக்தி, புது உணர்ச்சியை ஊட்டும் புதியதொரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் நான் என் கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் நம் அரசாங்கத்தினால் பல்வேறு மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உணவு வருவாய்துறை அமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே நம்மிடையே சொல்கிறபோது இந்த மான்யத்தை ஆதரிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நிலத்திலிருந்து கிடைக்கிற வரியை மிகப் பெரிய வரியாகவும், ஆதார பூர்வமான வரியாகவும் கருதி வந்திருக்கிற இந்த நேரத்தில் புன்செய் நிலங்களுக்கு வரியை நீக்கியதன்பேரில் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான தொகையை இழக்கும் அளவிற்குக் கூட நம் அரசாங்கம் கருணை உள்ளத்தோடு இந்த வரி விலக்கு அளித்திருப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் உற்சாகமாக வரவேற்கிறார்கள். நமக்கெல்லாம் எப்போது நல்ல காலம் பிறக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்த மக்களுக்கு இந்த புன்செய்யின் மீதுள்ள வரிவிலக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நம் அரசு இன்றையதினம் நல்ல பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. புன்செய் நிலங்களுக்கு வரி இல்லை என்று அறிவித்தவுடன் நன்செய் நிலங்களுக்கு ஏன் வரிவிதிப்பு என்று கேட்கலாம். நம்மைப் பொறுத்தவரையில் இது ஆரம்பக் கட்டம் என்ற முறையில் இருக்கிற சங்கடங்கள், சிக்கல்கள் இவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து முதல்முதலாக இன்றையதினம் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். தமிழ்நாட்டைப் பற்றிச் சொல்லும்போது, நிலத்தைப் பற்றிச் சொல்லும்போது 'நிலம் எனும் நல்லாள்' என்று குறிப்பிடுகிறார்கள். நல்லாள்மேல் வரி போடுகிற வகையில் அவரவர் அவரவர்களுக்கு இருக்கிற, தனித்தன்மை, சக்தி இவற்றைப் பயன்படுத்தி வந்தார்கள். கடந்த காலத்தில் ஆண்டவர்கள் எல்லாம் இதில் எவ்வளவு அதிக வரி போட முடியுமோ, அந்த அளவிற்குப் போட்டு விட்டார்கள். இப்போது நம் அரசு நிலம் எனும் நல்லாளுக்கு, அந்தத் தாய்க்கு சுமை கூடாது என்று கருதி வரியை நீக்கியிருப்பதை நாடு வரவேற்கிறது. எதிர்கட்சிக்காரர்களில் மனசாட்சி உள்ளவர்கள் அதை நிச்சயமாக வரவேற்பார்கள். நீண்ட நாட்களாகவே நம் நாட்டில் இந்த வரிவிதிப்பு முறை என்பது ஒரு பிரச்சினையாக இருந்துவருகிறது என்ற கருத்தை நில வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டார்கள். நீண்ட. காலமாகவே பிரச்சினைக்குரியதாக, சிக்கலுக்குரியதாக விளங்கிய இநத வரி முறைக்கு மாற்றம் தேடிக்கொள்வது என்பது எவ்வளவு சிக்கலானது என்பதை மற்றவர்கள் உணர்ந்து கொண்டால் நாட்டிற்குப் பெரும் நன்மை ஏற்படக்கூடும். அதுமட்டுமல்ல நம் நாட்டைப் பொறுத்த வரையில் நிலவருவாய்த் துறை பற்றிப் பேசுகிற போது கணக்குப்பிள்ளை, பட்டாமணியம் இவர்களைப் பற்றிப் பேசுகிற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நிலவருவாய்த் துறை, தண்ணீர்ப் பிரச்சினை இவை பற்றி பேசுகிறபோது, இதனால் பாதிக்கிறபோது கணக்குப்பிள்ளைகளையும், பட்டாமணியத்தையும் இழுக்கிறார்கள். தங்கள் மூலம் நான் அரசினரைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—அரசியல்வாதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

வேறு அனைவருடைய வாயிலிருந்தும் விமர்சிக்கப்படுகிற நிலையில் உள்ள கணக்குப்பிள்ளைகளை இந்த அரசாங்கம் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மு.ப. 11-00 அவர்களிலே மிகப் பலர் குறைந்த வருவாய் உள்ளவர்களாக இருப்பதால், போதிய வருவாய் இல்லாத காரணத்தினால், அவர்கள் தங்களுடைய நிலையை வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தி யார் யாருக்கோ சாதகம் செய்வதில் ஈடுபட்டு, பழிச்சொல்லுக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு அதிக வருவாய் தரும் அளவுக்கு கிராமக் கணக்கர்களை நன்கு மதித்து, பாராட்டி நல்ல ஊதியம் தரும் நிலையை ஏற்படுத்தினால், அவர்கள் நாம் அனைவரும் வெறுக்கும் செயல்களைச் செய்யாமல் இருப்பார்கள் என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முத்திரைத் தாள்கள் நிர்வாகத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். முத்திரைத் தாள்கள் நம் நாட்டிலே, நம் மாநிலத்திலே கிடைப்பதில்லை என்பதை யாவரும் அறிவார்கள். எங்காவது முத்திரைத் தாள் கிடைக்கிறது என்றால், பாற்கடலில் கடைந்தெடுத்த அமிர்தம் மாதிரி நினைத்து, யார் யாரையோ தூது விட்டு, முத்திரைத் தாள்களை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. பா. தம்பி நாயக்கர் :** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நிலவரி மானியம் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நிலவரி ரத்து பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புன்செய்த் தீர்வை முழுவதையும் ரத்து செய்துவிட்டதாகவும், நன்செய்த் தீர்வை மட்டும் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், அதையும் ரத்து செய்யும் யோசனை ஆலோசனையில் இருப்பதாகவும் சொன்னார்கள்.

புன்செய், நன்செய் என்ற பாகுபாடு உள்ளதில், கணக்கில் உள்ளதற்கும் நடைமுறையில் உள்ளதற்கும் உள்ள வேறுபாடு அரசாங்கத்திற்குத் தெரியும் என்று நினைக்கிறேன். புன்செய்த் தீர்வையை ரத்து செய்துவிட்டதாக அறிவித்த முதலமைச்சர் அவர்கள், நன்செய்க்கும் புன்செய்க்கும் இடையே இன்னும் ஒரு வகையான நிலம் இருப்பதை அறிவார்கள் என்று நினைக்கிறேன். அதை மானவாரி என்று சொல்லுவார்கள். முதலமைச்சரின் சொந்த மாவட்டத்தில் கூட அத்தகைய நிலம் நிறைய உண்டு; இராமநாதபுரம் மாவட்டத்திலும் நிறைய உண்டு. இதற்குள்ள தீர்வை புன்செய்த் தீர்வையை விட சற்று அதிகமாகவும், நன்செய்த் தீர்வையைவிட சற்றுக் குறைவாகவும் இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இதை ஸ்பெஷல் ரேட் புன்செய் என்று சொல்லுவது உண்டு. இந்த வரி ரத்து செய்யப்பட்டதா? அல்லது வரி வசூல் செய்யப்படுமா? என்று தெரியவில்லை. இதன் விவரம் பட்ஜெட்டிலும் இல்லை. இதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மானவாரி பயிரிடும் விவசாயிகள் இந்த விவரம் புரியாமல் இருக்கிறார்கள்.

நன்செய், புன்செய் என்ற பாகுபாட்டில், நடைமுறைக்கும் கிராமக் கணக்குகளுக்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு. புன்செய் நிலங்களில் பம்ப்செட், கேணி ஆகியவைகளின் துணையால் மூன்று போக நன்செய்ப் பயிர் செய்வதுமுண்டு. கேணி வெட்ட, பம்ப்செட் வைக்க அரசாங்கமே லோன்களைக் கொடுத்து வருகிறது. இந்த மாதிரி மூன்று போகம் விவசாயம் செய்கிற புன்செய்க்கு வரி ரத்து செய்யப்பட்டதை வரவேற்கும் போது, ஒரு போகத்திற்காகத் தண்ணீரை எதிர்பார்த்து இருக்கும் நன்செய் விவசாயிக்கு வரி உண்டு என்று சொல்வது, விவசாயத்தின் தன்மையையும், ஊதியத்தையும் நன்கு மதிப்பிடாமல் செய்த காரியம் என்று நான் நினைக்கிறேன். இதை மதுரை மாவட்டத்தில் பெரியார் வாய்க்காலில் எப்போது தண்ணீர் வரும் என்று எதிர்பார்த்துக் கிடக்கும் விவசாயிகள் நன்கு அறிவார்கள்.

புன்செய்த் தீர்வை என்றால், புன்செய் நிலத்திற்கு உள்ள அடிப்படைத் தீர்வையை மட்டும் குறிக்கும். நன்செய்த் தீர்வை என்பதில், புன்செய்த் தீர்வை, தண்ணீர்த் தீர்வை, ஸெஸ் ஆகிய மூன்று அம்சங்களும் அடங்கியுள்ளன. புன்செயில் உள்ள அடிப்படைத் தீர்வையை மட்டும் நீக்கிவிட்டதால், புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயி நன்செய்ப் பயிர் பயிரிடத் தடையில்லை என்று நினைக்கிறேன். சர்க்கார்த் தண்ணீரை எடுத்தால் தண்டம் போடப்படுகிறது. இனி, புன்செய் நிலத்தில் தண்ணீர் எடுத்தால், அது நன்செய்யோடு சேர்க்கப்படுமா அல்லது புன்செய்த் தீர்வை நீங்கலாகத் தண்ணீர்த் தீர்வை மட்டும் வசூலிக்கப்படுமா என்ற விவரம் தெரியவில்லை.

பல மாவட்டங்களில் பாய்ச்சல் ஆதாரமற்ற நன்செய் என்ற ஒரு பிரிவு உள்ளது. அது நன்செய்யோடு சேருமா அல்லது புன்செய்யோடு சேருமா என்ற விவரமும் தெரியவில்லை. அடிப்படையான நியாயம் கிடைக்க வேண்டுமானால், அடிப்படைத் தீர்வைகளை நன்செய்க்கும் புன்செய்க்கும் ரத்து செய்திருக்க வேண்டும். தண்ணீர்த் தீர்வை, ஸெஸ் முதலியவற்றைப் படிப்படியாகப் பின்னால் எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தால், விவசாயிகள் மிகவும் பாராட்டியிருப்பார்கள்.

சில மாவட்டங்களில், குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில், கசக்கால் என்ற சர்க்கார் பாய்ச்சலாதாரம் பல ஆண்டுகளுக்கு முன்பே பயனற்றுப் போயும் கூட, இன்னும் அங்கு நன்செய்த் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இப்போது இந்த நிலவரி ரத்து மூலமாக அந்த விவசாயிகளுக்கு எந்த விதப் பயனும் இல்லை. புன்செய் என்று கணக்கில் இருப்பதெல்லாம் புன்செய்யும் அல்ல, நன்செய் என்று இருப்பதெல்லாம் நன்செய்யுமல்ல. இந்த நன்செய், புன்செய் என்ற பாகுபாடு செய்து அதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதை விட, பயிர் செய்யப்படும் பயிர்களைக் கொண்டு பிரச்சினையைத் தீர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

ஒரு ஏக்கர் நன்செய் வைத்திருக்கிற ஏழை, சிறிய விவசாயிக்கு வரி அதிகம், 100 ஏக்கர்கள் புன்செய் வைத்திருக்கின்ற பெரிய விவசாயிக்கு வரி இல்லை. மொத்தத்தில் நாட்டின் முக்கிய பிரச்சினையாக உணவுப் பிரச்சினை இருக்கும்போது, உணவு உற்பத்தி செய்யும் விவசாய நிலங்கள் அத்தனைக்கும் அத்தனை வரிகளையும் நீக்கியிருந்தால், விவசாயிகள் மிகவும் வரவேற்றிருப்பார்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை அதிகமாக்கி, ஏழை விவசாய மக்களின் தலையில் சுமத்தி, 12½ ஸ்டாண்டர்டு ஏக்கரை 5 ஏக்கர்களாகக் குறைத்து, விவசாய மக்களைக் கணக்குக் காட்ட வேண்டுமென்று சொல்லுவது விவசாயிகளுக்குத் தீமை செய்வதாகும். இதனால் உண்மையாக உழைக்கும் விவசாயிகள் பல கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகி, உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, நிலவரி வருவாய்த்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுச் சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

புன்செய் நிலங்களுக்கு வரியை நீக்கியதன் அவசியத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே கூறினார்கள். இருந்தாலும் இப்போது குறைந்த விலையிலேயே அரிசி கொள்முதல் செய்வது நன்செய் நிலங்களில் உற்பத்தி செய்யப்படுவதுதான். ஆதலால் அவசியம் அதையும் கவனிக்கவேண்டுமென்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இனி, கம்பவுண்டிங் முறையைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். கணக்குக் கொடுக்காமல் கம்பவுண்டிங் முறையிலே வைத்துக் கொள்ளலாம். அதற்கு ஏதோ 12½ ஏக்கரிலிருந்து குறைத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் "உடன்பட்டுச் செலுத்துவது பற்றி விதித்துறைகளை எடுக்க விடுவது" என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. . . . . . .

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது அச்சிட்டானதற்குப் பிறகு கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வாக்களித்தார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் கனம் முதலமைச்சர் அவர்களின் வாக்குறுதியோடு இணைத்துக் கருத்துக்களை வழங்கவேண்டுமேன்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : அடுத்தப்படியாக, இந்த "ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்பதை நீக்கிவிடுவதாகவும் புத்தகத்தில் இருக்கிறது. அப்படியானால் 12½ ஸ்டாண்டர்டு ஏக்கரைக் குறைக்கும் போது அது 5 ஸ்டாண்டர்டு ஏக்கரா அல்லது சாதாரண 5 ஏக்கரா என்று விளக்கம் கொடுப்பது அவசியம் என்று நினைக்கிறேன்.

இந்த நிலவரி நீக்கத்திலே ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காகத்தான் நிலவரி நீக்கத்தைச் செய்வது என்று முந்திய அரசும் சொன்னார்கள். இப்போதும் சொல்லப்படுகிறது. இதிலே ஒரு சிறிய கஷ்டம் இருப்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலவரி நீக்கத்தினாலே ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்காகச் சில விளை பொருள்கள் மீது வரி போடப்பட்டிருக்கிறது. எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை போன்றவைகள் பயிரிடக் கூடிய நிலங்களுக்கு ஏக்கருக்கு 1 ரூபாய் 1½ ரூபாய்க்கு மேல் வரி இல்லை. ஆனால் விளைகிற பொருள்களுக்கு வரி போடுவதன் மூலம், அந்த வரியைப்போல் 5-6 மடங்கு கொடுக்கவேண்டியிருக்கிறது. அதையும் நீக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை உற்பத்திக்குக் கொண்டுவரப்படாத நிலங்களைப் பிறருக்குக்கொடுப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—வரவேற்கத்தகுந்ததுதான். உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்துவதற்கான நோக்கங்கள், கருத்துக்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே மணம் செய்துகொண்ட ஒரு பெண் நிம்மதியாக வாழவேண்டுமானால் நல்ல பங்களாவோ, நல்ல உல்லாச வாழ்க்கைக்கு வாய்ப்போ வசதியோ, வைர நகைகளோ, சேலைகளோ இருந்தால் மட்டும் போதாது. அந்தப் பெண்ணுக்கு இன்பம் தரும் பகுதி அந்த ஆண் மகனுக்கு இல்லை என்றால் நிம்மதி இராது. உயர்ந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம் கொடுப்பது, நியாயவிலை கொடுப்பதே. அதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்தத் தரிசு நிலங்களை ஒதுக்குகிற முறையிலே; சாதாரண அடி மட்டத்தில் உள்ள ரெவின்யூ இலாகா அதிகாரிகளை, மணியக்காரர், கணக்குப்பிள்ளை ஆகியவர்களை முந்திய அரசு கட்டுப்படுத்த முடியவில்லை. அரசாங்கம் எந்தச் சட்டம் போட்டாலும் அவர்கள் தான் தோன்றித்தனமாகச் செய்து கொண்டுதான் வந்திருக்கிறார்கள். பெரும்பாலான வீண் நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொடுப்பதில் பல ஆண்டுகளாக அவர்களிடம் குடியானவர்கள் வருவார்கள். கிடைக்கிற வரையில் அவர்களிடமிருந்து பணத்தைப் பெறுவார்களே தவிர, அவர்கள் எந்தக் காரியமும் செய்துவிட மாட்டார்கள். ஆகையாலே, நில ஆர்ஜிதம் செய்வதில் அவர்கள் குடியானவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல், லஞ்சலாவண்ணியத்திற்கு வாய்ப்பு இல்லாமல், சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முந்தைய அரசு இந்த நிலவரி நீக்கத்தைப்பற்றி சொன்ன இடத்தில் அந்த நஷ்டத்தைச் சரிகட்டுவதற்கு தாங்கள் தானிய வியாபாரத்தை நடத்தப் போவதாகச் சொன்னார்கள். அதற்காக திரு கெய்வார் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டு, அவர்களுடைய அறிக்கையும் கொடுக்கப்பட்டதாக இந்தக் கொள்கை அறிக்கைக் குறிப்பிலே காணப்படுகிறது. அதன்படி அவர்கள் என்ன அபிப்பிராயம் கொடுத்தார்கள், அந்தத் துறையிலே இந்த ஆட்சியாளரின் கவனம் என்ன என்பதையும் முடிவிலே அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இந்த நிலச் சீர்திருத்தம் என்ற முறையில் பலரும் பேசினார்கள் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக கொள்கையும் பேசப்பட்டு வந்தது. குறிப்பாகச் சொல்லப்போனால், சென்ற ஆட்சியாளர்கள் ஏழை எளியவர்

V2,11,31 N67

N67.3.5

களுக்கு, விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் நோக்கத்தோடு இந்த நிலச் சீர்திருத்தக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? அவர்கள் அப்படிச் சொல்லி, பெரிய நிலப் பிரபுக்கள், நிலக்கிழார்களுக்கு ஊக்கம் கொடுக்க அவர்களுக்குப் பல முறைகளையும் சொல்லிகொடுத்து, இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நேரம், காலம், வாய்ப்பு, வசதிகள் செய்து கொடுத்துவிட்டார்கள். அதன் மூலம் நிலச் சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தும் அதனால் பயனில்லாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. ரத்னச் சுருக்கமாகச் சொன்னால் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு எவ்வளவு செலவு செய்தார்களோ, அந்தப் பணத்திற்கு நிலத்தை விலை கொடுத்து வாங்கினால், இப்பொழுது கிடைத்த நிலங்களைப் போல பன்மடங்கு அதிகமான அளவு நிலம் கிடைத்திருக்கும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இது வரைக்கும் அமல் நடத்தியது ஆட்சிக்கும், நாட்டுக்கும், எல்லோருக்கும் ஆபத்தாக முடிந்தது. அதனால் உண்மையிலேயே யாருக்கும் பலன் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்க குறிப்பைக் குறித்து இன்னும் பல விஷயங்கள் பேசவேண்டியிருந்தும், நேரக் குறைவினால், அதற்கு வாய்ப்பு குறைந்துவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சிறிது நேரம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

64971

* **திரு. பு. செ. முத்துச்செல்வன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த்துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். வருவாய்த் துறையிலே நிலவரி, தண்ணீர்த் தீர்வை, வேளாண்மை வருமான வரி போன்ற வருமான இனங்கள் இருக்கின்றன. இவற்றிலே நிலவரி, தண்ணீர்த் தீர்வை போன்ற வரி இனங்கள் அங்கே இருக்கிற கிராம அதிகாரிகளால் வசூலிக்கப்படும் நிலையும், மற்றபடி வேளாண்மை வருமானவரி இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல 58 வட்டங்களில் தாசில்தார் மூலமாகவும், மற்ற இடங்களில் விசேட அதிகாரிகள் மூலமாகவும் வசூலிக்கப்படுகின்ற முறை இருந்து வருகிறது. இந்த முறையை மாற்றி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை பாஸ் செய்தவர்களைக் கிராம அதிகாரிகளாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நியமித்து, அவர்கள் மூலம் வசூல் செய்தால், தாசில்தார் மூலம் வசூலிக்கப்படுகின்ற ஒரு நிலை மாறி வருமானவரி வசூலிக்கின்ற முறையில் ஏற்படுகிற செலவு மிச்சப்படும் என்கிற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கிராம அதிகாரிகள் தங்களுக்குக் குறைந்த சம்பளம் கிடைக்கிறது என்பதை வைத்துக்கொண்டு மாமூல் வாங்குகின்ற நிலைமையும் இருந்துவருகிறது. இதைக் கண்டிக்க வேண்டும் என்று மேலதிகாரிகளிடத்தில் ஜமாபந்தி காலங்களில் சொன்னாலும் "அவர்களுக்குக் குறைந்த வருமானம் கிடைக்கிறது, ஏதாவது கொடுத்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளுங்கள்" என்று தான் அவர்கள் சொல்லுகிறார்களே தவிர, அதை நிறுத்தவதற்கு முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருந்து வருகிறது. எனவே, இந்த தர்மசங்கடமான நிலைமையைப் போக்குவதற்கு அதிகப்படியான சம்பளம் கொடுத்து பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சை பாஸ் செய்த கிளார்க்காக இருக்கக்கூடியவர்களை கிராம அளவிலே கிராம அதிகாரிகளாக நியமித்து, அவர்கள் மூலம் இந்த வரி இனங்களை வசூலித்தால், லஞ்சத்தை ஒழிப்பதற்கு வகை ஏற்படும். அவர்கள் முறையாக நடந்துகொள்ளவில்லை என்றால், அவர்களை வேறு ஊருக்கு மாற்றிவிட வழிமுறைகள் இருக்கும். இப்பொழுதும் கர்ணம், கிராமக் கணக்குப்பிள்ளை இருவருக்கும் கொடுக்கின்ற சம்பளத் தொகையை சேர்த்தால்கூட, ஏறத்தாழ ரூ. 120, 130 ஆகும். மேலே ரூ. 20 போட்டு, ரூ. 150 அளவிலே சம்பளம் கொடுத்து கிளார்க்காக இருப்பவர்களை கிராமந்தோறும் கிராம அதிகாரிகளாக நியமித்தால், நமக்கு அதிகப்படியான செலவு ஒன்றும் வந்துவிடுவதற்கில்லை. அதனால் பொதுமக்களுக்கு நன்மை இருக்கும். இதுபோன்ற லஞ்சம் கொடுக்கும் முறை இருந்து வராமல் தடுப்பதற்கு வழிவகை பிறக்கும்.

அடுத்தப்படியாக, சிறிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுப்பதில் கூட இருக்கக்கூடிய பொறுப்பு ஒருவர் கையிலே இல்லை. இப்பொழுது வாய்க்காலிலே தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அந்த வாய்க்காலில் தண்ணீர் வரவழைப்பதற்கு தாசில்தாருக்கோ, அல்லது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கோ முழு அதிகாரம் இல்லை. இர்ரிகேஷன் அஸிஸ்டெண்ட் என்ஜினியரிடம் சென்று முறையிட்டு, அவர்கள் அதற்கான காரியங்களை நிறைவேற்றியதற்குப் பிறகு தான் பாசனத்திற்குத் தண்ணீர் வருவதற்கான ஒரு நிலைமை இருக்கிறது. அந்த முறை இல்லாமல், முன்பு இருந்ததுபோல, பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவதற்கு இருக்கக் கூடிய பொறுப்புகளை தாசில்தார், ஆர்.டி.ஒக்களிடம் ஒப்படைத்து, அவர்கள் அதை நிறைவேற்றக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருவர் கையிலே பொறுபபு இருக்கிற காரணத்தினால், கிடைக்கவேண்டிய காலத்தில் தண்ணீர் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எனது தொகுதியில் கூட, குணசீலம், கல்லூர், உமையாள்புரம் ஆகிய கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் நஞ்சை மறுபோக சாகுபடிக்கு நாற்றங்கால் விட்டு, நாற்றுக்களையும் நட்ட பிறகு, தண் ணீர் இல்லாத காரணததினால், விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் விவசாயிகள் அவர்கள் செலவு செய்த தொகையும் வீணாகி, கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவுத் துறையில் வாங்கிய கடனைக் கூட திருப்பிக் கொடுக்க முடியாத ஒரு அவல நிலையில் இருக்கிறார்கள். அதைப்பற்றி நாங்கள் அதிகாரிகளிடம் எவ்வளவோ சொல்லியும், அவர்கள் தங்களுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றித்தான் கூறுகிறார்களே தவிர, அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்று குறிப்பிடுகிறார்கள. அம்மாதிரி கடனாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதைத் தள்ளிப் போடவேண்டும் என்று கேட்கிறபொழுது கூட, கூட்டுறவுத் துறை ரிஜிஸ்டிரார் அவர்கள் அப்படித் தள்ளிப் போடுவதற்கு சட்டம் குறுக்கிடுகிறது என்று சொல்லி, அந்த முறை தான் இருந்துவருகிறது. இப்படித் தண்ணீர் காலாகாலத்தில் தரமுடியாத நிலைமையில் பல தொல்லைகள், சங்கடங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிலங்களையெல்லாம் தரவாரியாகப் பிரித்து, அதற்கேற்றவாறு தீர்வை விதிக்கின்ற நிலை ஏற்படவேண்டும். அடிப்படை வரியை ரத்து செய்துவிட்டாலும்கூட, தண்ணீர்த் தீர்வையை விதிக்கின்றபொழுது, உவர் நிலத்திற்குத் தண்ணீர்த் தீர்வை குறைவாகவும், வளமுள்ள நிலத்திற்கு— ரூ. 5,000 வருமானம் வரக்கூடிய நிலங்களும் இருக்கின்றன ரூ. 500, ரூ, 1,000 வருமானம் வரக்கூடிய நிலங்களும் இருக்கின்றன, அவைகளுக்கு தகுந்தவாறு தண்ணீர்த் தீர்வை மற்ற தீர்வைகளை விதிப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிலவரிக் கோரிக்கையின் மீது சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். புஞ்சை நிலத்திற்கு வரி வஜா செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஆனாலும்கூட, பேஸிக் டாக்ஸ் போடவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். காரணம், நில உரிமைக்கு அதுதான் அத்தாட்சியாக இருக்கும். வாட்டர் ஸெஸ் இருக்கிறது. அந்த ரசீது போதும் என்று சொல்லலாம். ஆனால் ரூபாய் ஒன்றுக்கு இவ்வளவு என்று தான் இருக்கிறதே தவிர, நிலவுரிமையைப் பற்றி அது ஆதாரமாக பேஸிக் டாக்ஸ் போட்டால் தான் யாருக்கு நிலம் சொந்தம் என்கிற ஒரு உறுதியான ரெகார்ட் கிடைக்கும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி, தனக்குப் பூமியில் உரிமை இருக்கிறது என்றால்தான் எந்த மனிதனுக்கும் திருப்தியும் தீர்மானமும் இருக்கும். ஆகவே, பேஸிக் டாக்ஸ் போடவேண்டியது பட்டாதாரர்களுடைய நன்மையைக் குறித்து நலமாக இருக்கும்.

இன்றைக்கு ஆக்ட் 8/63, அடிஷனல் அஸெஸ்மெண்டு அண்டு அடிஷனல் வாட்டர் ஸெஸ் ஆக்ட் அமுல் நடத்தப்படுகிறது. ஆனால் அதில் அதிகமான வருவாய் வர இடம் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் முறையில்

ரெவின்யூ அதிககாரிள் செக்ஷன் 7-ன் படி அமல் நடத்தாமல் ஒட்டு மொத்தமாக வரி போடுகிறார்கள். அது வேலியே பயிரை அழிக்கும் நிலையில் இருக்கிறது. சர்க்கார் திட்டம் போடுகிறார்கள். விதி போடுகிறார்கள். அவற்றை அந்தவகையில் அமல் நடத்தாமல், ரெவின்யூ அதிகாரிகள் ஒட்டுமொத்தமாக வரி போர்டும் காரணத்தால், சர்க்காருக்கு வருவாய் குறைகிறது. அதோடு நிலச் சொந்தக்காரர்களுக்கும் எந்த இடத்திற்கு அதிகமான தீர்வை என்று தெரியவில்லை. அதிகமாக டிமாண்ட் கொடுத்து உடனடியாக வசூல் செய்கிறார்கள். இதையெல்லாம், ரெகார்ட் பூர்வமாக நான் எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். சர்க்காருடைய சட்டம், சட்டத்தின்படி அதிகாரிகளால் அமல் நடத்தப்படாவிட்டால் மக்கள் என்ன செய்வார்கள் ?

அடுத்து, ஆக்ட் 26·48 என்கிற ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி, அநேக அஸெஸ்ட் வேஸ்டுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 300, 400 ஏக்கர் நிலம் வரை ஜமீன் அஸெஸ்ட் வேஸ்ட் ஆக இருக்கிறது. 1950-லிருந்து இது வேஸ்டாக இருந்துகொண்டு இருக்கிறது. அது யார் கையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. கர்ணத்தின் தயவில் தான் பயிரிடலாம். சென்ற சட்டசபையில் கூட இது பற்றி எடுத்துச் சொன்னேன். சட்டசபையில் சொல்லுவது பேச்சளவில் இருக்கிறதேயன்றி நடைமுறைக்கு வரவில்லை என்பது என்னுடைய அழுத்தமான அபிப்பிராயம். எதைச் சொன்னாலும் காரசாரமான பதிலும் இல்லை. காரசாரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவையெல்லாம் சர்க்காருடைய சொத்து. அப்படி அஸெஸ்ட் வேஸ்டாக பல நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அவை சர்க்கார் சொத்து. அவை சரியான முறையில் அமல் நடத்தப் படாமல் இருப்பதால், இன்றைக்கு அவை யார் கையில் இருக்கிறது என்றே தெரியவில்லை. யார் அனுபவிக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. கர்ணம், கிராம முன்சீப் இவர்களுக்குத்தான் தெரியும். ஒவ்வொரு இடத்திலும் இப்படி இருக்கும் நிலங்கள் பற்றி தக்க நடவடிக்கைகள் எடுத்தால், சில இடங்களில் விவசாயம் செய்பவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்கலாம். அந்த வகையிலும் சர்க்காருக்குத் தொகைகள் வரும். அல்லது நிலம் இல்லாத ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கலாம். அதன் மூலமாக நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கிடைக்கும். ஆகவே, இந்த வகையில்" உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, சர்வே டிஸ்ட்ரிக்ட் யூனிட் என்று செயல் படப்போவதாக தெரிகிறது. அதை நான் வரவேற்கிறேன். எங்கெல்லாம் எங்க்ரோச்மெண்ட்ஸ் இருக்கிறதோ, சர்க்கார் இடங்களில் கால்வாய், புறம்போக்கு போன்ற இடங்களில் இருக்கும் எங்க்ரோச்மெண்டுகள் அகற்றப்பட்டு செயல்படுத்தினால் அதனால் சர்க்காருக்கு வருவாய் பெருகும்.

அதுபோக, கோர்ட்ஃ பீ ஸ்டாம்பு சம்பந்தப்பட்ட வரையில், சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் செய்வதைப் போலச் செய்யலாம் என்று சொல்லுகிறேன். கோர்ட் சம்மந்தப்பட்ட வரையில், எல்லா ஸ்டாம்புகளையும் கோர்ட்டிலேயே பணம் வசூல் செய்யப்படும் அளவுக்கு செய்தால், நன்மை ஏற்படும். எந்த ஸ்டாம்பானாலும் இன்றைக்கு நாலு அணா ஸ்டாம்பிற்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்த ஸ்டாம்பானாலும் ரொக்கம் செலுத்தி ரசீது இணைத்தால் போதும் என்று இருந்தால் நன்மை ஏற்படும்.

அதுபோக, இனாம் ஆக்ட் இருக்கிறது. அதன் காரணமாக மடங்களுக்கு வருவாய் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் நல்ல காரியங்கள் செய்யப் படாமல் இருக்கின்றன. அங்கேயெல்லாம் நிலத்திலிருந்து வெளியேற்றங்கள் இருக்கின்றன என்றும், கோர்ட்டில் ரிட் பெண்டிங்காக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக கோவில் காரியங்கள் மடம் சம்பந்தப்பட்ட காரியங்கள் தடைப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றையும் கவனிக்க வேண்டும். ஒரு ஸ்பெஷல் ஆபீசராவது போட்டு, நிலைமைகளை ஆராய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

[1967, ஜூலை 3

*திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியத்தின் மீது என்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கம் இந்த ஆண்டு புஞ்சை நிலங்களுக்கு வரி ரத்து செய்ததை வரவேற்கிறேன். புஞ்சை நிலங்களை வைத்திருக்கும் பெரிய நிலப்பிரபுக்களும் இருக்கிறார்கள். அதைப் போல, நஞ்சை நிலம் வைத்திருக்கும் பெரிய நிலப்பிரபுக்களும் இருக்கிறார்கள். சிறுசிறு நிலச் சொந்தக்காரர்களும் இருக்கிறார்கள். ஆக, இந்த இரண்டு தரத்தார்களுக்கும் வரி ரத்துச் செய்தால் சரியாக இருக்காது. அவர்களின் தராதரத்தை அடிப்படையாகக்கொண்டு, வரியை ரத்துச் செய்தால் தான் நலமாக இருக்கு ்ம். இன்றைக்கு இருக்கும் நிலைமை, புஞ்சை நிலக்காரர்கள் சர்க்காருக்குத் தேவையானவர்கள். அவர்களுக்கு ரி விலக்கு என்று செய்வதாக இருப்பது நியாயம் ஆகாது. இரண்டுவித நிலங்களிலும் நஞ்சை புஞ்சையிலும் அதிகமான ஆதாயம் பெறும். பெரிய நிலப்பிரபுகளுக்கு வரிவிலக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மற்றும் சிறு நிலக்காரர்களுக்கு மட்டும்தான் இந்த வரி ரத்துச் செய்யப்பட வேண்டும். அதுதான் நியாயமாக இருக்க முடியும். அந்த வகையில் வரி ரத்து இருக்கவேண்டும் என்கிற என்னுடைய அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நில விநியோகம் சம்பந்தப்பட்டவரையில், லட்சக்கணக்கான ஏக்கர்கள் தரிசாக இருக்கின்றன. இந்த நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். இதிலும் பல லட்சக்கணக்கான தரிசுகளைப் பெரிய நிலப்பிரபுக்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அந்தத் தரிசு நிலங்களைச் சாதாரண ஏழைகள் வைத்திருந்தால், வேண்டாவெறுப்பாக, ரெவின்யூ அதிகாரிகள் அதிகமானத் தண்டத்தீர்வை போட்டு நிர்ப்பந்தம் செய்கிறார்கள். ஆனால் அதிக நிலம் வைத்திருப்பவர்களிடம் தண்டத்தீர்வை வசூல் செய்வதே கிடையாது. ஏழைகளாக இருந்தால் அவர்களை நில வெளியேற்றம் செய்கிறார்கள். தண்டத்தீர்வையும் போடுகிறார்கள். பெரியவர்களிடம் போவதே இல்லை. இதுதான் சாதாரணமாகக் கையாளப்படும் முறையாக இருக்கிறது. வெள்ளைக்காரன் காலம் தொட்டு, காங்கிரஸ் சர்க்கார் வரையில், நடந்து வந்த பழைய முறையையே ரெவின்யூ அதிகாரிகள் கையாண்டு வருகிறார்கள். அந்த நிலங்களை ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுத்தால், நிலம் இல்லாத ஏழைகள் நல்ல முறையில் விவசாயம் செய்யமுடியும். ஆகவே, அந்த விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். தரிசு நிலங்களைக் கணக்கு எடுக்கும் போது, மாவட்டவாரியாக, நிலப் பிரபுக்கள் எவ்வளவு ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று கணக்கிட்டு, உடனடியாக அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்ற வேண்டும். அதில் தயவு தாட்சண்யம் காட்ட வேண்டிய அவசியமே இல்லை. யார் தயவிற்கும் சர்க்கார் பயப்படத் தேவையில்லை. அவர்களெல்லாம் சமூக விரோத சக்திகள் என்பதைச் சர்க்கார் உணர வேண்டும்.

மூன்றாவதாக, பஞ்சத் தணிப்புக்காக அமைச்சர் குறைந்த தொகையைக் கோரியிருக்கிறார்கள். நம் ராச்சியத்தில், வெள்ளம், புயல், தீ விபத்து இப்படிப்பட்ட விபத்தான நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்க உதவி பெறுகிறார்கள். ஆனால், வீடு இழந்தவர்களுக்கு உதவி கொடுக்கும் வகையில் ரூ.30-ம், துணி சாமான்கள் இவற்றை இழந்ததற்கு ரூ. 10ம் ஆக ரூ. 40 கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை எந்தக் காலத்திலோ நிர்ணயிக்கப்பட்டது. இன்றைய நிலையில் அது மிகக் குறைந்த தொகையாக இருப்பதை யாவரும் அறிவார்கள். இந்தத் தொகை அந்த மக்களுக்கு இரண்டு நாள் செலவுக்குக்கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, இந்தத் தொகையை 40லிருந்து குறைந்தது 100 ரூபாய் என்றாவது அவசியம் உயர்த்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் வீடு இழந்தவர்கள் ஒரு குச்சாவது போடமுடியும். இல்லையென்றால்

1967 ஜூலை, 3] [திரு. ஆ. கு. சுப்பையா]

இழந்த வீடுகளைக் கட்டிக் கொள்ளவோ, அல்லது புதுப்பிக்கவோ, தேவையான சாதனங்களை வாங்கிக் கொள்வதோ வசதியாக இருக்கமுடியும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். விவசாயம் இல்லாத காலத்தில் அவதிப்படும் மக்களுக்கும் பஞ்ச நிவாரண வேலை கொடுக்க வேண்டும். இன்றைக்கு எடுத்துக் கொண்டால் தஞ்சையில் ஆறுமாத காலத்திற்கு விவசாயத் தொழிலாளிகளுக்கு எந்த விதமான வேலையும் கிடையாது. ஆகவே, அந்த விவசாயத தொழிலாளர்கள் வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரியான காலங்களில் குளங்கள், ஓடைகள் எல்லைக்கரைகளை உயர்த்திக்கட்டுதல் ஆகியவைகளினால் அந்த மு.ப. 11-30
மக்களை உபயோகப்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும்; அந்த கஷ்டத்தைப் போக்க முடியும் என்ற முறையிலே அதையும் கவனத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நில உச்சவரம்புச் சட்டம். நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றையத்தினம் அமைச்சரவர்களும் நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்வதன் மூலம் விவசாயிகளுக்கு ஒரு திருப்தி ஏற்படும். இந்தச் சட்டம் பரவலாக ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிவீர்கள். அதுமட்டுமல்லாமல், உயர்நீதி மன்றங்களுக்குச் சென்று ஸ்டே ஆர்டர், ரிட் வாங்குவது அந்தச் சட்டத்தை அமல்படுத்த முடியாத நிலைமையைக் கொண்டுவருகிறது. காங்கிரஸ் அரசு 83 ஆயிரம் ஏக்கரா நிலம் உபரியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். சட்டத்தைக் கொண்டுவந்தபொழுது அவ்வாறுதான் சொல்லி ஏமாற்றினார்கள். 17,000 ஏக்கர் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் சொல்லப்படுகிறது. இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. தயவு செய்து சட்டத்தை மாற்றிப் புதிய சட்டத்தைக் கொண்டுவந்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் அந்தச் சட்டத்தை திருத்துவதின் மூலமாகக் குடும்பத்திற்கு 15 ஏக்கர்கள் வீதம் வரம்பு கட்ட வேண்டுமென்ற என் யோசனையைத் தெரிவிக்கிறேன். முன்னால் சட்டம் செய்தவர்கள் ஒரு நபருக்கு 30 ஏக்கர்கள், ஒரு குடும்பத்திற்கு 60 ஏக்கர்கள் என்று கொண்டு வந்ததின் விளைவாக உபரியாக நிலம் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. உபரியாக நிலம் இருக்கிறதா என்பதைத் தேட வேண்டிய நிலைமை இருக்கிறது. அவ்வாறில்லாமல் 5 பேர்கள் உள்ள குடும்பம் 15 ஏக்கர்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாதென்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் கிடைக்கும் உபரி நிலங்களையெல்லாம் நிலமில்லாத விவசாயிகளுக்கு விநியோகம்செய்து அவர்களை உற்சாகப்படுத்தி விவசாயத்திலே ஈடுபடுத்துவதின் மூலமாக நிலப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்ற யோசனையைக் கூறி, நம்முடைய புதிய அரசு அதற்கு ஆவன செய்து நல்ல பெயரையும் எடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

குத்தகை வாரச் சட்டம் இன்று அமலில் இருக்கிறது. அந்தச் சட்டம் இருந்து கொண்டிருக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் அதிகாரிகளே அதற்கு விரோதமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். தஸ்தாவேஜுகள் இல்லை என்பதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அந்தச் சட்டத்தையும் நல்ல முறையிலே அமல்படுத்துவதற்கு, அம்மாதிரிச் சாகுபடிச் செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் நிர்ப்பந்தம் செய்து வெளியேற்றப்படும் பொழுது, போலீசார் தலையிடாமல் இருப்பது நல்லது. அவ்வாறு போலீசார் தலையிடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டம் காலாவதியாகப் போகிறது. சட்டத்தை நீட்டிக்கவும், குடியிருக்கும் அந்த மக்களுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக ஆக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. மு. ச. சிவசாமி : துணைத் தலைவரவர்களே, ரெவின்யூ மான்யத்தின் மீது அடிப்படையிலுள்ள சில கருத்துக்களைப்பற்றிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய நிலையில் தமிழகத்தில் உணவுப் பற்ருக்குறை அதிகமாக இருக்கிறது என்பது நாடறிந்த விஷயம். இந்தச் சந்தர்ப்பத்தில் தூத்துக்குடி தொகுதி முள்ளக்காடு கிராமத்தில் 250 எக்கக்ர்ள் நஞ்சை நில ந்தில், கடலிலே போய் வீணுகக்கூடிய கழிவு நீரை உபயோகப்படுத்தி நெல் பயிரிட்டால் அதற்கு 20 பங்கு தண்டத்தீர்வை முந்திய சர்க்கார் விதித்து வந்ததன் காரணமாக அந்த நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் இன்றைய அரசு, கடலிலே வீணுகப் போகும் கழிவுத் தண்ணீரை உபயோகப்படுத்தி நெல் விளைவிக்க முன்வரும் முள்ளக்காடு விவசாயிகளுக்கு உடனடியாக அந்த 20 பங்கு தண்டத்தீர்வையை ரத்து செய்தால் 250 எக்கர்களில் நல்ல நெல் விளைவிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதை நம்முடைய அரசாங்கம் உடனடியாகக் கவனித்து அந்தத் தண்டத் தீர்வையை ரத்துச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் தூத்துக்குடி நகரத்தில் வீடில்லாத ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகிருர்கள். அதில் பலர் 20, 25 ஆண்டுகளாகக் குடியிருந்து வந்தும்கூட அவர்களுக்கு எந்தவிதமான பட்டாவும் வழங்கப்படவில்லை. அவர்கள் பல ஆண்டுகளாகப் பட்டா வேண்டுமென்று ரெவின்யூ இலாகாவிற்கு மனுச் செய்தாலும் கூட, அஸைன்மெண்ட் பிரிவுகளில் தாலூக்கா ஆபீஸ்களில் எந்தவிதமான கிளார்க்குகளும் இல்லாத காரணத்தால், பட்டா வழங்காமல் பல ஆயிரக்கணக்கான மனுக்கள் அங்கே காலதாமதமாகிக்கொண்டு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட குறைகளை நம்முடைய அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

இதேபோல் தூத்துக்குடி தாலூக்கா கோரம்பள்ளம் கிராமத்தில் உள்ளவர்கள் அங்குள்ள நிலத்தை ஒருபோகமாக இருந்ததை மாற்றி, 2 போகமாக ஆக்கினுர்கள். உணவுப் பற்ருக்குறையைப் போக்க ஒருபோகமாக இருந்ததை இரண்டு போகமாக ஆக்கிப் பயிர் செய்வதற்கு முன்வந்த காரணத்திற்காக இப்பொழுது தண்டத்தீர்வை போடுகிருர்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முதன்மையாக உள்ள நம்முடைய அரசாங்கம், ஒருபோக நஞ்சை நிலத்தை இரண்டு போகமாக்கி அதிக நெல் விளைவிக்க வந்தால், ஊக்குவிக்க வேண்டுமே தவிர, அவர்கள் அதிக நெல் விளைவித்த குற்றத்திற்காக தண்டத்தீர்வை விதிப்பதை ரத்து செய்ய—முந்திய அரசாங்கம் தவறினுலும்—நம்முடைய அரசாங்கம் உடனடியாக ரத்துச் செய்வதற்கு முன் வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி செல்லும் பஸ் மார்க்கத்திலே உள்ள 33 மைல் தூரத்தைப் பார்த்தோமேயானுல் இரு பக்கங்களிலும் எந்தவிதமான விவசாயமும் இல்லாமல் சர்க்காருக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் வீணுகக் கிடக்கின்றன. அதே நேரத்தில் நிலமில்லாத ஏழை மக்கள் பல லட்சக்கணக்கானவர்கள் இருக்கிருர்கள். மொத்தத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்கும் முறையில் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கின்ற வகையில், வீணுகப் பல ஆண்டுகளாகப் பயிர் செய்யப்படாமல் இருக்கும் தரிசு நிலங்களை அவர்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்து பயிரிடச் செய்தால் நலமாக இருக்கும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ஆர். கருப்பையா : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் விவாதத்திற்குள்ள மான்யங்களின்மீது நானும் என் கட்சிக்காரர்கள் கொண்டுவந்த வெட்டுப் பிரேரேணையை ஆதரித்துப் பேச முன் வந்துள்ளேன்.

இந்த அரசு புஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கியது குறித்து நான் மானமாரப் பாராட்டுகிறேன். அதோடு நஞ்சை நிலத்திற்கும் இந்த வரியை நீக்கியிருந்தால் விவசாயப் பெருங்குடி மக்களிலே ஏழைகளுக்குப் பெரு வசதியாக இல்லாவிட்டாலும் சிறு வசதியாகவாவது இருக்கும் என்று கூறிக் கொள்ளுகிறேன். 20 எக்கரா புஞ்சை நிலத்துக்கு வரியில்லை. 2 எக்கரா நஞ்சை நிலத்திற்கு இருக்கிறது என்ருல் அது எந்த விதத்தில் நியாயம் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே 5 எக்கர்களுக்கு உட்பட்டுள்ள அனைவருக்குமே வரியில்லாத நிலையைக் கொண்டுவந்தால் தான் அது விவசாயிகளாலும், மக்களாலும் பாராட்ட முடியும்.

நெல் கொள்முதல் விலையை ரூ. 48 என்று மாநில அரசு நிர்ணயித்திருக்கிறது. மத்திய அரசு 51 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறது. இந்த 3 ரூபாயை மாநில அரசு போனஸ் என்ற முறையில் விவசாயிகளுக்குக் கொடுத்து ஊக்குவிக்க முன் வந்துள்ளது. இந்த விலையை 51 ரூபாய் என்று நிர்ணயித்து, மேற்கொண்டு கொடுத்து வருகிற 3 ரூபாயை போனசாகக் கொடுப்பது நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். போனஸ் மூன்று ரூபாய் என்று கொடுப்பது கூடப் போதாது. அதை ஐந்து ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி, பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் அமலுக்கு வரவேண்டும். விவசாயிகள் எவ்வளவுதான் நல்ல முறையில் பாடுபட்டாலும், சில சமயங்களில் பயிர்கள் பூச்சிகளினுல் பாதிக்கப்பட்டு விடுகின்றன. பருவ மழை தவறுகிற நேரத்தில் இத்தகைய தொல்லை விவசாயிகளுக்கு வருகிறது. பருவ மழைக் கோளாறினுலோ, பூச்சித் தொந்தரவினுலோ எப்படி விவசாயிகளுடைய பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டாலும், அவர்களுடைய நஷ்டத்தைத் தவிர்க்கும் வகையில், பயிர்ப் பாதுகாப்பு முறை அமலுக்கு வந்தால், விவசாயிகள் ஊக்கத்தோடு பயிரிட முன்வருவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் நல்ல முறையில் பயிர் செய்வதற்கு கிணற்றுப் பாசனப் பகுதியில் மின்சாரம் அவசியம் தேவைப்படுகிறது. குறிப்பாக, என்னுடைய அரியலூர்ப் பகுதியில் மின்சாரம் நல்ல முறையில் வழங்கப்படுவதில்லை. காரணம், மின்சாரம் விஸ்தரிக்கும் பொறுப்பு திருச்சியில் உள்ள சௌத் மெட்ராஸ் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் என்னும் தனியார் நிறுவனத்தின் கையில் இருக்கிறது. அவர்கள் எந்த ஒரு பகுதிக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க முன்வருவதில்லை. விவசாயிகள் தங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று மனுப் போட்டால், மின்சாரம் கனெக்ஷன் கொடுக்காமல், இரண்டு, மூன்று ஆண்டுகள் தள்ளிப் போடுகிருர்கள். இதையெல்லாம் தவிர்க்கும் வகையில், அந்தத் தனியார் ஸ்தாபனத்தையும் அரசாங்கம் தன்னுடைய தேசியமயத் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து, அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் கிடைக்க வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முத்திரைத் தாள் மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன். சிறு விவசாயிகள்தான் நிலத்தை வாங்குவதும் நிலத்தை விற்பதுமாக இருக்கிருர்கள். பெரும் விவசாயிகள் ஒரளவிற்கு நிலத்தை விற்பதும் இல்லை, அதிகமாக வாங்குவதும் இல்லை. ஆகவே, முத்திரைத் தாள்கள் சிறு விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். முத்திரைத் தாள்களைத் தபாலாபீஸ்களின்மூலம் விற்க ஏற்பாடு செய்யலாம். தனிப்பட்டவர்கள் அதற்காக அனுமதி பெற்றுக்கொண்டு பத்திரங்களை விற்கிருர்கள். அவர்கள், நூறு ரூபாய் பெறுமானமுள்ள பத்திரங்களை, ரூ. 105, ரூ. 110 என்று கூடுதல் விலைக்கு விற்க முற்படுகிருர்கள். விவசாயிகள் அதிகப் பொருள் கொடுத்து வாங்குகிருர்கள். எனவே, அதை மாற்றி தபால் நிலையங்களிலோ அல்லது ரிஜிஸ்திரார் ஆபீசிலோ இந்தத் தாள்கள் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இந்த முறையில் ஏற்பாடுகள் செய்தால், பத்திரத் தாள்கள் எளிதில் கிடைக்க வாய்ப்பாக இருக்கும்.

பத்திரத்தாள் விற்பனையின்மூலம் கிடைக்கும் வருவாயைப் பஞ்சாயத்திற்குக் கொடுக்க வேண்டும். இப்பொழுது ரெவின்யூ டிபார்டுமெண்டில் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்துக்குக் கொடுக்கும் செஸ்ஸை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருவது நல்லது.

அரசாங்க இலாக்காக்களுக்கு எழுதியனுப்பப்படும் மனுக்களில் ஸ்டாம்ப் ஒட்டியனுப்ப வேண்டும் என்ற முறை இருக்கிறது. விவசாயிகள் மனுக்களில் ஸ்டாம்பு ஒட்டி அனுப்பவேண்டுமென்றால், அதன்மூலம் செலவு ஏற்படுகிறது. ஆகவே, ஸ்டாம்ப் ஒட்டாமலேயே மனு அனுப்பலாம் என்ற விதியை அரசாங்கம் மேற்கொண்டால்தான் நலமாக இருக்கும்.

பத்திரத்தின்மூலம் பஞ்சாயத்து பெறும் செஸ்ஸை உயர்த்தினால் பஞ்சாயத்திற்கு அதிக வருமானம் வரும். ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனையோ வேலைகளைப் பஞ்சாயத்து துவக்கி நிறைவேற்றுவதற்கு முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டைச் செய்தால், அதுபோன்ற வேலைகளை அவர்கள் செய்ய முடியும்.

மேலும், பத்திரங்கள் கிடைக்காத நிலைமையை அரசாங்கம் உணர்ந்து, எளிதில் பத்திரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

***திரு. கோ. பாரதி மோகன் :** மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, மீண்டும் ஒரு முறை இந்த விஷயத்தை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தப் பிரச்சினை மொத்தமாகவே இந்த விஷயங்களில் விடுபட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தப் பிரச்சினை உடனடியாகக் கவனிக்கப்படவேண்டும் என்று இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசும்போது மீண்டும் வற்புறுத்துகிறேன். 1956-ம் வருஷத்திற்குப் பிறகு செய்திருக்கக்கூடிய எல்லாவிதமான நியாயமற்ற பாகப் பிரிவினைகளையும் உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். அடுத்து, விவசாயிகள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சகல விதமான சட்டங்களையும் ஒரே சட்டமாக ஆக்கவேண்டும். உச்ச வரம்புச் சட்டத்திலே விதிக்கப்பட்டிருக்கக்கூடிய எல்லா விதமான விதி விலக்குகளையும் உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். உபரியாக இருக்கும் நிலங்களை விவசாயத் தொழிலாளர்களுக்குச் சாகுபடிக்காக வழங்க வேண்டும். குடியிருப்பு மனைக்கட்டை, மனைகள் இல்லாத விவசாயத் தொழிலாளிகளுக்கு வழங்க வேண்டும் கூட்டுப்பட்டா முறையை ரத்து செய்ய வேண்டும். கோவில்கள், மடங்கள் இவற்றிற்கு கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகளை ரத்து செய்ய வேண்டும். சொஸைட்டிக் கடன்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் ஜமீன்தார்களுக்கு அளிக்கப்படக்கூடிய நஷ்ட ஈடுகளையெல்லாம் ரத்துச் செய்ய வேண்டும். பஞ்சம்பற்றி இருக்கக்கூடிய, முன்னால் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய கமிஷனுடைய அறிக்கையைப் புனராலோசனை செய்து மீண்டும் ஒரு புதிய அறிக்கை தயார் செய்ய வேண்டும். சர்க்கரை ஆலையினுடைய கழிவு நீர் டன் ஒன்று ரூ. 6·50-க்கு விற்கப்பட்டு, அந்தக் கழிவு நீர் எல்லாம் ப்ளாக் மார்க்கெட்டிலே 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அது ஏகபோக முதலாளிகளுக்கும், கொள்ளை லாபக்காரர்களுக்கும் வழங்கப்படுகிறது. சிறு தொழில்காரர்களுக்கு அந்தக் கழிவு நீரை வழங்க வேண்டும் என்று சர்க்காருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த விஷயத்தைப்பற்றிப் பேசும்போது, ஒரு விஷயத்தைச் சர்க்காருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகத்தான் இருந்து, விவசாயச் சட்டங்களையெல்லாம் பிரகடனம் செய்தது. ஆனால், அந்தச் சட்டங்கள் அமலாகும்போது, பெரு நிலச்சுவான்தார்கள் பூராவும் பாதுகாக்கப்படுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய சாதாரணச் சாகுபடியாளர்கள், வாரக் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அந்தச் சட்டத்திலே உள்ள ஓட்டைகளின் காரணமாக

சாதாரணச் சாகுபடியாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். கோர்ட்டில் வழக்குகள் வரும்போது, சாகுபடியாளர்களுக்குச் சாதகமான தஸ்தாவேஜுகள் இல்லாததால் வழக்குகளெல்லாம் தோல்வி அடைந்தன. ஆகவே, அந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய பலவீனங்களையெல்லாம் திருத்தி, ஒரே சட்டமாகக் கொண்டுவரவேண்டும். இன்றைய தினம் அந்தச் சட்டத்தில் இருக்கும் பலவீனங்கள் காரணமாக, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய சாகுபடியாளர்களை, நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களாக்கிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள், சாதாரண அரிசன மக்கள், வசிக்கக் கூடிய குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். போலீஸ் உதவியோடுகூட, அங்கே மனைக்கட்டை இடித்துத் தள்ளி விவசாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்குப் போதுமான அளவிற்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் வழங்கப்படும் கடன்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளும் இந்த நேரத்தில், வடபாதிமங்கலம் போன்ற பெரிய நிலப்பிரபுக்கள் மட்டுமல்லாமல், அன்றாடம் வேலை செய்யக்கூடிய இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர், பத்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யும் சிறு நிலச் சொந்தக்காரர்களும் விவசாயிகளும், தனக்கென்று நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களும், அங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய நல உரிமையைப் பாதுகாக்காவிட்டால் உற்பத்தி சரியான முறையில் இருக்க முடியாது என்பதையும் இந்த நேரத்தில் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தனக்கென்று நிலமில்லாத சாகுபடிதாரர்கள் தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் கடன்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குத்தகை பாக்கியை ஒத்திவைக்கவேண்டும் என்று பல முறை கூறியும், இன்னும் நம் அரசு முயற்சி எடுக்கவில்லை. கூட்டுறவு பாங்கிகள் மூலம் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிக்கும் நடவடிக்கையாக, அவர்கள் ஜப்தி செய்யும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடன் பாக்கிகளைக் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டும், இன்னும் கவனிக்கப்படவில்லை. இந்த இரண்டு விஷயங்களும், விவசாயிகளைப் பொறுத்தவரையில், தேக்கமாக இருக்கிறது. அதனால், சாகுபடியை அபிவிருத்தி செய்வதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதையும் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

கோயில், மடங்கள் இவற்றிற்குச் சொந்தமாக இருக்கும் நிலங்களின் குத்தகைதாரர்களைப் பொறுத்த வரையில் குத்தகை பாக்கிகளை வஜா செய்ய வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன். ஜமீன்தார்களுக்கு நஷ்டாடு கொடுக்கப்பட்டு வருகிறது. இனிமேல் அவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுக்கக் கூடாது. தனிப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கு இருக்கக்கூடிய நிலங்கள்கூட ஜமீன்தார்களுடைய கணக்கில் இருக்கின்றன. அவர்களுடைய அனுபவத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள்கூட ஜமீன்தார்களுடைய கணக்கில் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் உடனடியாகக் கணக்கெடுத்து, நிலத்தை அளந்து பார்த்து அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட நிலங்களையெல்லாம் நிலமில்லாதவர்களுக்கு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** திரு டி. எஸ். ஆதிமூலம் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், ஸார், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரோடெக்ஷன் ஆக்ட் என்று ஒன்று இருக்கிறது. ஏழை சிறு நிலச்சுவான்தார்களுக்கு உதவி செய்வதற்காகவும், பயிர் செய்பவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட சட்டம் அது. ஆனால், அந்தச் சட்டத்தின்கீழ் பல அநீதிகள் விளைந்திருக்கின்றன. பொதுவாக, நாட்டிலே இப்பொழுது மழை மிகக் குறைவு. நம் தேசம் பூராவும் மழை குறைவு என்றாலும், முக்கியமாகத் தமிழ்நாட்டில் மழை குறைவு. இதற்குக் காரணம், சட்டங்

கள் செய்வதன்மூலம் பல அநீதிகள் இழைக்கப்பட்டு இருக்கின்றன, சென்ற கால அரசாங்கத்தின்மூலம். அதனால்தான் மழையெல்லாம் இப்படி அருந்தலாகி, எங்கு பார்த்தாலும் கஷ்டம்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : நான்கு நாட்களாக, மெர்க்காரா பகுதியிலும், உதகமண்டலப் பகுதியிலும் நிரம்ப மழை பெய்து கொண்டிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இப்பொழுதுள்ள அரசாங்கத்திலே பெய்து கொண்டிருக்கிறது. அது சந்தோஷம். (சிரிப்பு) எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தின்கீழ் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சட்டம் செய்கிற காலத்தில், ஒரு எக்கருக்குக் குறைந்து நிலம் வைத்திருப்பவர்களாவது, அவர்கள் இஷ்டப்பட்ட நேரம், தங்களுடைய அந்த நிலங்களைப் பயிரிட்டுக் கொள்ளலாம், தேவைப்பட்ட நேரத்தில் திரும்ப எடுத்துக்கொள்ளலாம் என்ற ஷரத்து இருந்தால், சிறிய நிலவுடைமையாளர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கமாட்டார்கள். இதை என் சொல்லுகிறேன் என்றால், ஒருவர் தன் ஊரில் வசதியாகப் பிழைக்க முடியவில்லை என்று சொல்லி, தன் கையிலிருக்கும் ஐம்பது செண்ட் நிலத்தை யாருக்கோ குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, சென்னைக்கும் பம்பாய்க்கும் சென்றுவிட்டு, அங்கேயும் பிழைப்புக் கிடைக்கவில்லை என்று திரும்பிவந்து, பழையபடி சொந்த நிலத்திலேயே பாடுபட்டு நாம் அதில் உழைத்து ஒரு அரை வயிற்றுக் கஞ்சியாவது குடும்பத்திற்குத் தேடிக்கொள்ளலாம் என்று நினைத்தால் இப்பொழுதுள்ள சட்டத்தில் அதற்கு இடம் இல்லை.

ஆகவே, காங்கிரஸானது, ஜனநாயக சோஷலிசம், ஆவடி சோஷலிஸத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வந்து கடைசியில் சிறு நிலச்சுவான்தார்கள் தலையில் கை வைத்தது. ஆகவே, அதையும் யோசனை செய்து விலக்கு அளிக்க வேண்டும். எல்லாவற்றையும் பேசுவதற்கு நேரம் இல்லை.

அதோடு, இரண்டு வருஷத்திற்கு முன் "மாரடோரியம் ஆக்ட்" என்று புதிதாக ஒரு சட்டம் வந்தது. பயிர் செய்பவர்கள் குத்தகை பாக்கி கொடுக்கவேண்டியிருந்தால், அதைக் கேட்கவே கூடாது என்பது அந்தச் சட்டம். இந்தச் சட்டத்தின்மூலம் அநேக பெரிய நிலச்சுவான்தார்களுக்கு ஒரு அளவுக்கு மேல் பழைய பாக்கியைக் கொடுக்கக்கூடாது. அதற்காக அவர்கள் ஃபேர் ரெண்ட் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். சிறு நிலச்சுவான் தார்களுக்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். 50 செண்ட் நிலம் வைத்திருப்பவர்கள் குத்தகை பாக்கியைக் கொடுக்க முடியவில்லை. தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான குடும்பங்களான சிறு நில உடமையாளர்கள் பட்டினியால் வாடி வேதனைப்படுகின்றனர். கோவில் நிலங்களிலும் சிலபேர் பயிர் வைக்கின்றார்கள். இந்த அரசாங்கம் முக்கியமாக விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு, ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். நம் சிந்தனை பூராவும் சிறு நில உடமையாளர்கள் விஷயத்திலும், ஏழை மக்களிடத்திலும் செலுத்தப்பட வேண்டும். சிறு நில உடைமையாளர்கள் ஏழைகள்தான். அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தை அன்றைய தினம் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் கவனிக்கவில்லை. அந்த அநீதியால்தான் அவர்களைப் புயல் அடித்துக்கொண்டு போய்விட்டது. இதை உணர்ந்து, "கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்" இந்த சர்க்கார் கொண்டு வந்து, சிறு நில உடமையாளர்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் கண்டு பிடித்து உதவி செய்ய வேண்டும்.

குத்தகை பாக்கி விஷயமாக, ஏற்கனவே குத்தகையை ஒழுங்காக விவசாயிகள் கொடுப்பது இல்லையென்று கூறப்பட்டு வருகின்றது. "மரம் ஏறுகிற குரங்குக்கு ஏணியும் வைத்துவிட்டார்கள்" என்ற பழமொழிபோல் ஆகி

விட்டது. மேற்கொண்டு சட்டத்தின் மூலம், சட்டத்தின் துணைகொண்டு தக்கபடி கொண்டுவர வேண்டும். தவிர, அநேக தேவஸ்தானங்களில் பூஜைகள் எல்லாம் நின்றுபோய்விட்டன. நீங்கள் இதைப்பற்றி எப்படி நினைக்கிறீர்களோ, எனக்குத் தெரியாது—தெய்வம் என்று ஒன்று இருக்கட்டும். அதனுடைய செயலை ஒழுங்காகச் செய்யட்டும். கோவில் காரியங்களுக்குக் குந்தகம் ஏற்படாத முறையில் இந்தச் சட்டத்திலிருந்து, கோவில் நிலங்களுக்குப் பாக்கியுள்ளவர்கள் ஒழுங்காகக் கொடுத்துவிட வழி செய்ய வேண்டும். சிறு நில உடைமையாளர்கள், விவசாய நிலங்களுடைய அளவுக்குக் குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் குத்தகை பாக்கியைக் கொடுத்து விட வேண்டுமென்று சட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இது ஒரு தர்ம காரியம். இதை முதலமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாய வருமான வரி அது நிறைய வசூல் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பணம் நமக்குத் தேவைப்படுகிறது. வருமானம் கூடுதலாகக் கூடுதலாக, எவ்வளவு நிறையத் தொகை நமக்குத் தேவையென்று சர்க்கார் நினைக்கிறதோ, அதற்குத் தகுந்தபடி ரேட்டுகளைக் கூட்டி வசூல் செய்துகொள்ளலாம். கம்பவுண்டிங் செய்யவும் சிந்திக்க வேண்டும்.

சிறுநில விவசாயிகளுக்கு இன்னும் இந்த 5 ஸ்டாண்டர்டு எக்கர் என்ற வரம்பின்மூலம் கணக்குகள் வைத்துக்கொண்டு, இங்குமங்குமாக ஆபீஸர்களிடம் போகவேண்டும் என்று அலைக்கழிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, 12 ஸ்டாண்டர்டு எக்கர் என்ற முறையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் உள்ள அநீதிகளை லேண்ட் சீலிங் ஆக்டிலே உள்ளபடி விவரங்களை சொல்லிவிட்டேன்.

எங்கள் ஜில்லாவில் மணிமுத்தாறு என்ற டாம் கட்டப்பட்டிருக்கிறது. அது ஏற்கனவே தாமிரபரணி சிஸ்டத்திற்கு—டெல்டாப் பகுதிக்கு—தண்ணீர் பாய்கிறது. அதற்காகப் பாபநாசம் 'டாம்' கட்டப்பட்டது. பாபநாசம் டாமை எலெக்ட்ரிசிடி டாமாகக் கட்டியதனால் விவசாயத்திற்குத் தகுந்த பாதுகாப்பு இல்லை. ஆகவே மணிமுத்தாறு டாம் கட்டுவதற்கு அரசாங்கம் வாக்குறுதி கொடுத்து, தாமிரபரணி டெல்டாப் பிரதேசங்களுக்குத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது. அதையும் தடுத்து அணையாகக் கட்டினால் பாசனத்திற்கு உதவியாக இருக்கும். இதனால் எதுவும் விசேஷமாக உதவி செய்து தரவேண்டியதில்லை. அதன்கீழ் உள்ள நிலங்களுக்கு பெட்டர்மெண்ட் டாக்ஸ் என்று சொல்லி எக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் வரை வசூல் செய்து வருகிறார்கள். இது சட்டத்திற்குப் புறம்பான விஷயம். இதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மணியடிக்கப்பட்டது.) ஆகவே, அதையும் பரிசீலனை செய்து, அந்த பெட்டர்மெண்ட் டாக்ஸ் என்பதை எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெவின்யூ இலாகாவை எடுத்துக்கொண்டால், அந்த இலாகாவினால் ஏழை மக்களுக்கு நிலங்கள் கிடைப்பதில்லை. ஒருவருக்கு வீடு கட்ட 5 செண்ட் நிலம் வேண்டுமென்றால், பழைய முறைப்படி அந்த நிலம் கிடைப்பதற்கு ஐந்தாறு வருஷம் ஆகிறது. ஏராளமான நிலங்களை ஏழைகளுக்கும், மற்றவர்களுக்கும் வீடு கட்டுவதற்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டும். பழைய ரெவின்யூ இலாகா நிலைமையை மாற்றி, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு "லேண்ட் அசைன்மெண்ட்" முறையில் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டால் நலமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மொத்தத்தில் பழைய போக்கிலேயே ரெவின்யூ இலாகா போய்க்கொண்டிருப்பதனால் நமக்கு லேண்ட் அசைன்மெண்ட் விஷயங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. ஆறு, ஏழு வருஷங்கள் தாமதமாகிறது. ஒரு கேஸை எடுத்துக் கொண்டால் யாராவது ஒரு எம். எல். ஏ. பின்னால் தள்ளிவிட்டுக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. தாலூகா ஆபீசிலும், கர்ணம் முதல் எல்லோரும்

ந.ப. 12-00 சேர்ந்து கீழேயிருந்து மேலே பிடித்துத் தள்ளத்தான் வேண்டியிருக்
கிறது. ஜில்லாவாரியாக ஒரு தனி அதிகாரியை நியமித்து இதை நல்ல
முறையில் செய்ய வேண்டும். அதாவது எங்கள் ஜில்லாவில் ஒரு பஞ்சா
யத்து போர்டு கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.
அந்த இடத்தில் கட்டிக்கொள்ள ஐடில்மான் ஸ்கீம் என்ற முறையில்
உதவித்தொகை வழங்கவும் கலெக்டர் உத்தரவு போட்டுவிட்டார். எல்லா
வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு கட்டடம் கட்ட ஆரம்பிக்கும்போது, தனியார்
பள்ளியைச் சேர்ந்தவர் அங்கே அவர்களுடைய விளையாட்டு மைதானம்
இருக்க வேண்டும் என்று அப்பீல் செய்தார்கள் என்பதற்காக அந்தக்
கலெக்டரே ஒரு ஸ்டே ஆர்டரும் கொடுத்திருக்கிறார். இரண்டாயிரம் ரூபாய்
செலவு செய்து சாமான்களை எல்லாம் வைத்து விட்டார்கள். திருமலை
புரம் என்ற ஊரில்தான் இப்படி ஆகியிருக்கிறது. கலெக்டரே பர்மிஷன்
கொடுக்கிறார், கலெக்டரே ஸ்டே ஆர்டர் கொடுத்து சிக்கலை ஏற்படுத்தி இருக்
கிறார். ஆக ரெவின்யூ இலாகா பழைய முறையில்தான் நடந்து கொண்டி
ருக்கிறது. அவைகளை எல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டுமெனக்
கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

*திரு. வை. சுவாமிநாதன் : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்
களே, சபை முன் உள்ள மானியக்கோரிக்கைகளின் மீது பேசும்போது புஞ்சை
நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பதை வரவேற்கிறேன். இந்த
நாடு விவசாய நாடு. இந்த நாட்டில் 100-க்கு 75 சதவிகிதம் மக்கள்
விவசாய மக்கள். விவசாயிகளுக்கு உற்சாகமும் ஆர்வமும் ஏற்படுத்தப்பட
வேண்டுமென்பதால் புஞ்சையாக இருந்தாலும், நஞ்சையாக இருந்தாலும்
வரி விலக்கு அளிக்க வேண்டியது அவசியம். இதற்கு ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள்மீது அபிவிருத்தி
வரி என்றும் விதிக்கப்பட்டு வருகிறது. அந்த வரியை விதிக்கிறபோது
விவசாயிகளுக்கு விளைந்தாலும் சரி, விளையாவிட்டாலும் சரி, அந்தத் திட்டத்
தினால் அவர்கள் நன்மை அடைந்தாலும் சரி, அடையாவிட்டாலும் சரி வரி
கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படு
கிறார்கள். விவசாயம் செய்யப்பட்டதா ? விளைந்திருக்கிறதா ? தரமான
விளைச்சல் உண்டா ? என்பதையெல்லாம் கணக்கிட்டு இந்த அபிவிருத்தி
வரியை விதித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
சில இடங்களில் கடைசி வரைக்கும் தண்ணீர் போவதில்லை. கடைசியிலி
ருக்கும் நிலங்கள் நம்முடைய திட்டத்தினால் எந்தவிதமான நன்மையும்
அடைவதில்லை. இருந்தும் அவைகளுக்கும் அபிவிருத்தி வரி விதிக்கிறோம்.
ஆகவே, இந்த அபிவிருத்தி வரி விதிக்கும்போது பயன் அடைகிற நிலங்
களுக்கு விதிக்கும் ஒரு முறையை வகுக்க வேண்டும்.

அடுத்து, பஞ்ச நிவாரணத்திற்காக ஏராளமான பணம் ஒதுக்கப்படு
கிறது. ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இந்த
பணம் செலவு செய்யப்பட்டால் நலமாக இருக்கும். வெள்ளத்தினாலோ
தீயினாலோ மக்கள் பாதிக்கப்பட்டால் இப்போது உடனடியாக அவர்களுக்கு
நிவாரணம் கிடைப்பதில்லை. ரெவின்யூ அதிகாரிகளுக்குத் தெரிவித்து
அவர்கள் அந்த இடத்தை வந்து பார்வையிட்டு பின்னர் அதன் மீது
குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதற்குக்கூட ஏராளமான காலதாமதம்
ஆகிறது. அவ்வளவு நாட்கள் பாதிக்கப்பட்டவர்கள் எப்படி இருப்பார்கள்
வெள்ளமோ, தீயோ ஏற்பட்டவுடனே அடுத்த நாளே பாதிக்கப்பட்டவர்கள்
யாரிடமாவது கடன் வாங்கிக் குடிசைகளை அமைத்துக்கொள்ள வேண்டி
யிருக்கிறது. ரெவின்யூ இலாகாவிலிருந்து உதவித் தொகை வருவதற்கு
30 நாட்களுக்கு மேல் கூட ஆகிறது. அவ்வாறு தாமதம் ஏற்படாமல்
உடனுக்குடன் கொடுக்க வேண்டியிருப்பதால் பஞ்சாயத்து யூனியன்கள்
மூலமாகவே இந்தத் தொகையை செலவிடலாம் என்று கருதுகிறேன்
அதுபோல கொடுக்கின்ற தொகை 40 ரூபாய் மிக மிகக் குறைவு. 4
ரூபாய் வாங்குவதற்கு 40 ரூபாய் செலவு செய்வது என்ற நிலை இருக்கிறது
அதை ஓரளவாவது அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்
கூறிக்கொள்கிறேன். பாசன வசதி செய்து கொடுக்கிறபோது அந்த
இலாகாக்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. வருமான வரி இலாகா
உணவு இலாகா போன்றவைகள் இருக்கின்றன. அந்த இலாகாக்கள்

ஒன்றாக இணைத்து வேலை செய்தால் நன்றாக இருக்கும். உணவு இலாகா வுக்கும் ரெவின்யூ இலாகாவுக்கும் ஒரே அமைச்சர் இருப்பது போல அவை எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்திருந்தால் நன்றாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனித் தனியாக இருப்பதால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. திருச்சியில் நடந்த விவசாயக் கருத்தரங்கில்கூட எடுத்துக் கூறினோம். இதில் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பன்னீர்செல்வம் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்றபோது விவசாயிகளுக்கு உரம் வழங்குவதில் ரெவின்யூ அதிகாரிகள் சீரான முறையில் நடக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வசதி வாய்ப்புள்ள விவசாயிகளுக்கு உரம் கிடைத்து விடுகிறது. ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எல்லா விவசாயிகளுக்கும் உரம் கிடைக்கக் கூடிய வகையில் கார்டு முறை வைத்தாக வேண்டும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்று கோடியே மூன்று லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருப்பது யாருக்கு என்று பார்க்கும்போது செல்வாக்குள்ளவர்களுக்கே, நில உச்சவரம்பிலுள்ள பெரிய பெரிய மிராசுதாரர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலத்திற்கும் அந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, பம்புசெட்டுகள் வைப்பதற்கு இன்றைக்கு குறுக்கீடாக உள்ள பாலாறு பேசின் விதிகளை எடுத்துவிட வேண்டுமென்று இரண்டு மூன்று ஆண்டுகளாகவே விவசாயிகள் ரெவின்யூ போர்டில் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இந்த அரசு உடனடியாக அதைத் தளர்த்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் பெருங்குடி ஏழை விவசாயிகள் நல்ல பலனை அடைவார்கள். நம்முடைய சர்க்காரின் கொள்முதலுக்கும் மனமுவந்து கொடுப்பார்கள். அதோடு யூனியன் மூலமாகக் கொடுக்கப்படுகிற உரம் கார்டின் மூலமாகக் கொடுக்கப்பட்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்து, விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,000 மானியம் கொடுக்கிறார்கள். இரண்டாயிரம் போதாது. பாதிக் கிணறுதான் வெட்ட முடிகிறது. பாதியில் நின்று விடுகிறது. ஆகவே, அதை மூவாயிரமாகக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கொடுக்கப்படுகிற உதவியானது ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் 30 ஆண்டுக் காலமாக சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு உடனடியாகப் பட்டா வழங்க முன் வரவேண்டுமென்று கோரி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு பி.எஸ். தனுஷ்கோடி:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நிலவரி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். சர்க்காருக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் காட்டிலாகா பராமரிப்பில் இருக்கின்றன. அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டு உணவு உற்பத்திப் பெருக்கத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்திலே கீழ்ப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய சர்க்காருக்குச் சொந்தமான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் எடுத்தால் நிலம் அற்ற விவசாயித் தொழிலாளர்களுக்கு அவற்றைக் கொடுக்க முடியும். அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கடுத்தாற்போல், தஞ்சை மாவட்டத்தில் அரிந்திரா நதியின் கீழ் ஓடக்கூடிய கழிவுத் தண்ணீரைத் தேக்கினால், புஞ்சை நிலங்களுக்கு அந்தத் தண்ணீரைப் பாய்ச்சி நல்ல சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும், அதன்மூலம் உணவு உற்பத்தியையும் பெருக்கமுடியும் எனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இன்றையதினம் உணவு அமைச்சரவர்கள் கூறினார்கள், நிலச் சொந்தக்காரர்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டு வைத்தால் நிச்சயமாக சர்க்கார் அந்த நிலங்களை எடுத்துக் கொள்ளுமென்று. அதை நான் ரொம்ப வரவேற்கிறேன்.

அதே மாதிரி எனது தொகுதியில் ஒரு நிலச் சொந்தக்காரர் 15 வருட காலமாக தண்ணீர் வரியை மட்டும் செலுத்திவிட்டு நிலத்தைத் தரிசாகப் போட்டு இருக்கிறார். காரிமங்கலம் என்ற கிராமத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடப்பதை, அவர்கள் மீது தேச விரோதக் குற்றம் சாட்டி நிச்சயமாக அந்த நிலத்தைப் பறிமுதல் செய்யவேண்டும் என்று புது அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதே மாதிரி, இன்றையதினம் ஒப்படைக்கப்பட வேண்டிய ரெவின்யூ குளங்கள் எல்லாம் தஞ்சை மாவட்டத்திலே ஒப்படைக்கப்படாமல் தனியார்களிடம் இருக்கிறன்ன. அந்த நிலையை மாற்றி, அப்படி ஒப்படைக்கப்படாத குளங்களை எல்லாம் பஞ்சாயத்திடம் ஒப்படைத்தால் அதன் மூலம் பஞ்சாயத்துக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

அதுமட்டுமல்ல, குளங்கள் என்ற பெயரால் ஒரு காலத்தில் விதை விடுகிற பாத்தியதையை வைத்துக்கொண்டு இன்றையதினம் அந்த நிலங்கள் எல்லாம் தனியார் இடம் விடப்பட்டு இருக்கின்றன. அதை மாற்றி அமைத்தால் பஞ்சாயத்துக்களுக்கு வருமானத்தை பெருக்கிக்கொள்ளமுடியும். உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் இன்றையதினம் அந்த நிலங்களையும் நாம் உபயோகப்படுத்த முடியும் என்று கூறிக் கொள்ளவிரும்புகிறேன். இன்று தஞ்சை சாகுபடிதாரருக்கு பாதுகாப்புச் சட்டம் என்று ஒன்று இருக்கிறதே தவிர அது பெயர் அளவிலே தான் இருக்கிறது. உதாரணமாக ஒரு கிராமத்திலே நடந்து இருக்கக் கூடிய சம்பவத்தை கனம் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வேலுக்குடி என்ற கிராமத்தில் ஒரு குத்தகைச் சீட்டு எழுதப்பட்டு இருக்கிறது. அது எந்த சர்வே நம்பர் உள்ள நிலம் என்று எழுதாமல் இன்றையதினம் அந்த விவசாயிகள் நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு சிறைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் நிலச் சொந்தக்காரர்களுக்கு உடந்தையாக இருப்பதால் சரியான முறையில் அந்தச் சட்டத்தை அமல்படுத்த முடியவில்லை. அந்த விவசாயிகள், நிலத்தை நம்பி வாழக் கூடிய விவசாயிகள், குற்றமற்றவர்கள், இன்று சிறையில் வாடுகிறார்கள். இந்தக் கொடுமையைப் போக்க நிலச் சீர்திருத்த சட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும். மிச்சம் உள்ள நிலங்களையும் நிலம் அற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று வரம்பு கட்டி மீதம் உள்ள நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இன்றைய தினம் கோவை ஜில்லாவில் காட்டுப் பிரதேசத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. மதுரை ஜில்லாவிலும் காட்டுப் பிரதேசங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களை எடுத்து விவசாயம் செய்தால் இன்று உணவுப் பிரச்சினையை நாம் தீர்க்க முடியும். அதோடு உணவு உற்பத்தியையும் நாம் பெருக்கிக் கொள்ள முடியும். அதே மாதிரி ராமநாதபுரம் ஜில்லாவில் குளம்கோர்வை என்ற இனத்திற்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் இன்று நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படியே கண்மாய்களை எல்லாம் மராமத்துச் செய்தால் தண்ணீரைத் தேக்கிப் பற்றுக்குறை காலத்தில் அத் தண்ணீரைப் பாய்ச்சுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, தஞ்சை மாவட்டத்தில் கோவில், மடங்கள் இவற்றிற்குச் சொந்தமான நிலங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த கோவில், மடங்களில் உள்ள அதிகார வர்க்கம் அந்த கிராம கணக்குப்பிள்ளையைச் சரிக்கட்டிக் கொண்டு அந்த நிலம் விளையாமல் இருந்தாலும், குத்தகை நிலம் என்று சொல்லி நில வரியைச் செலுத்துகிறார்கள். அந்த நிலம் விளைந்ததா, விளையவில்லையா என்ற கணக்கைப் பரிசீலிக்கவேண்டும். இன்று பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். குத்தகை நெல் அளக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றையதினம் சர்க்காருக்குச் சொந்தமான ஜாரி நத்தம் புறம்போக்கு நிலங்களில் ஹரிஜனங்கள் குடியிருக்கிறார்கள். அந்த நிலங்களில் அவர்கள் எவ்வளவு ஆண்டுகாலமாகக் குடியிருக்கிறார்கள் என்று சர்க்கார் கணக்கு எடுத்தால் நிச்சயமாக மனை கட்டும் பிரச்சினையை ஓரளவு தீர்க்கமுடியும். சர்க்கார் இன்றையதினம் மனைகளை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் இருக்கிற ஜாரிநத்தம் புறம்போக்கு நிலங்களை எல்லாம் ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உதவி சபாநாயகரவர்களே, நான் சார்ந்து இருக்கும் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டு இருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி எனது கருத்துக்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். இந்த நாட்டில் விவசாயப் பெருங்குடி மக்கள் ஏற்கனவே விலைவாசி ஏற்றத்தினாலும், மற்றும் விவசாய உற்பத்திச் செலவு அதிகரித்து இருப்பதாலும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பெரு நிலக்கிழார்கள் சொற்பமாகவும், சிறு நிலக்கிழார்கள் அதிகமாகவும் இருக்கிறார்கள். இதை நினைத்துத் தான் காரைக்குடியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் எங்கள் கட்சியின் ஒப்பற்ற தலைவரும் இந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சருமான திரு. காமராஜ் நாடார் அவர்கள் ஒரு தீர்மானத்தை அங்கு கொண்டு வரச் செய்தார்கள். அதோடு நிலவரியை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது இருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக் கொண்டு ரெவின்யூ சம்பந்தப்பட்ட ஒரு பெரிய அதிகாரியை வைத்து "பேஸிக் லாண்ட் ரெவின்யூ"வை நீக்கி விட முடியுமா என்பதற்கான வழிவகைகளைக் காணச் சொன்னார்கள். ஆனால் அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற அங்கத்தினர்கள் நிலவரியையே ஒட்டுமொத்தமாக நீக்கிவிட வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதுபற்றி காரசாரமாகவே பேசினார்கள். ஆனால் அதோடு மட்டும் நின்று விடாமல் தங்கள் தேர்தல் அறிக்கையில் 6-வது பக்கத்தில் 18-வது பாராவில் ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு நில வரியையும் அத்துடன் தொடர்பு உள்ள மற்ற வரிகளையும் நீக்கவேண்டுமென்று வாதாட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விதமாகச் சொன்ன பிறகு இப்போது புஞ்சை நிலத்திற்கு மட்டும் நில வரியை எடுத்து இருக்கிறார்கள். அது பாரம் ஏற்றிய ஒட்டகத்தின் மீது உள்ள பாரத்தில் ஒரு சிறிய துரும்பை எடுத்துக் கீழே போட்டது போல இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு கடந்த காங்கிரஸ் அரசாங்கத்தில் நெல் கொள்முதல் விலையையும் நிர்ணயித்து இருந்தாலும் அதற்கு மேலாக 3 ரூபாய் க்விண்டலுக்கு கொடுத்து வந்தது போனஸாக. அது இன்று நிறுத்தப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் அங்கத்தினர் அவர்கள் காங்கிரஸ் அரசாங்கம் வந்து இருந்தால் என்னென்ன செய்யமுடியும் என்ற பட்டியலைத் தரலாம். ஆனால் இப்போது போனஸை நிறுத்தி விட்டதாகச் சொல்வது, விசாரித்துப் பார்த்து சொல்லி இருக்க வேண்டியது.

*** திரு. டி. மார்டின் :** போனஸ் கொடுத்தால் அதை வரவேற்கிறோம். ஆனால் அது கொடுக்கப்படவில்லை என்ற குறை மக்கள் மத்தியில் இருப்பதால் அதைக் கூறவேண்டியதாயிற்று. எது இருந்தாலும் சரி, இந்த

விவசாயப் பெருங்குடி மக்களை மிகவும் பாதிக்கிற நிலையில் விவசாய வருமான வரியை அதிகமாக்கி அதை அவர்கள் மீது சுமத்துவது, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் இன்னலை இழைக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நில வரி சம்பந்தமாக கெய்வார் ரெவின்யூ போர்டு அதிகாரி கொடுத்த ரிப்போர்ட்டை சட்டமன்ற அங்கத்தினர் எல்லோரும் பார்க்கக் கூடிய அளவில் எல்லோருக்கும் ஒரு நகல் கொடுப்பது நல்லது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.. மேலும், "பேமின் ரிலீப்" ஐப்பற்றி ஒன்று கூறவேண்டி இருக்கிறது. நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவில் சாத்தான் குளம், உடன்குடி பகுதிகள் வரட்சி மிகுந்த பகுதிகளாக இருப்பதால் அங்குள்ள பனை மரங்கள் பட்டுப்போய் விட்டன. அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அங்குள்ளவர்களுக்கு வாழ்வதற்கு ரேஷன்கூட கொடுக்காமல் இருக்கிறார்கள். அது ஏழைத் தொழிலாளர்கள் வாழ்கிற இடமாக இருக்கிறது. ஆனால் அதே மாவட்டத்தைச் சேர்ந்த தூத்துக்குடி சப்-தாலுகாவிலுள்ள கிராம மக்களுக்கு ரேஷன் கொடுக்கும்போது இங்குள்ளவர்களுக்கு என் ரேஷனை நிறுத்தி விட்டார்கள் என்று தெரியவில்லை. பஞ்சப் பிரதேசமாகிய அப்பகுதிகளில் நிவாரண வேலைகள் எடுக்கவேண்டியது போக, அங்கு மேலும் பஞ்சத்தை உண்டாக்கக்கூடிய அளவில் கொடுக்கவேண்டிய ரேஷனைக் கூட நிறுத்திவிட்டார்கள். இது பாரபட்சம் காட்டுவதாக இருக்கிறது. நான் நெல்லையில் நடந்த விவசாயக் கருத்தரங்கு மகாநாட்டில் விவசாய அமைச்சரவர்களிடம் கூறினேன். அவர்கள் உணவு அமைச்சரவர்களிடம் கூறும்படி சொன்னார்கள். அவர் மிகவும் நேரம் கழித்து வந்ததால் பார்க்க முடியவில்லை. ஆகவே அவருக்கு எழுதுங்கள் என்றார்கள். ஆனால் அரசாங்கத்தில் இருந்து வந்த பதில் 'கலெக்டரைப் போய் பாருங்கள்' என்று வந்தது. கலெக்டரைப் பார்த்தேன். அவர் 'சென்னையைப் போய் பாருங்கள்' என்றார். சென்னை வந்தேன். இன்று வரை எனக்குப் பதில் இல்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கருத்தரங்கில் கலந்துகொண்ட அங்கத்தினர் அவர்கள் கருத்தரங்கு முடியும் வரைக்கும் இருக்கவேண்டுமென்று நான் வேண்டிக்கொண்டும், அவர் கடைசி வரை இல்லாமல் போய் விட்டார். கடைசி வரை அங்கே இருந்திருந்தாரானால், உணவு அமைச்சரவர்கள் வந்த நேரத்தில் அதைச் சொல்ல வாய்ப்பு இருந்திருக்கும்.

திரு. டி. மார்டின் : நான் அங்கு 7½ மணி வரை இருந்தேன். உணவு அமைச்சர் வரவில்லை. அங்கிருந்து அதற்குப் பிறகு செல்ல வேண்டுமென்றால் பஸ் வசதி கிடையாது. தங்குவதற்கும் வசதி கிடையாது. என்னுடைய ஊருக்குச் செல்ல முடியாது. அதனால்தான் சென்றுவிட்டேன். எது இருந்தாலும் சரி, இந்த முக்கியமான விஷயத்தின்மீது அரசாங்கம் நடவடிக்கை உடனே எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உடன்குடி செட்டியாபத்து என்ற இடத்தில் தேரிமணலில் பனை ஏறுகின்றவர்கள் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏழைகள், பனையேறிப் பிழைப்பவர்கள். மீன்பிடித் தொழிலாளர்கள். பனைமரத் தொழிலாளர்கள். அவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் தங்களுடைய புறம்போக்கு நிலங்களைக் கொடுத்து அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமே தவிர, ஏற்கனவே அவர்கள் குடியிருந்த குடிசைகளை அகற்றுவது நியாயமல்ல. அவ்வாறு அகற்றாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய என் பகுதிக்கு உடனடியாகக் கொடுக்கக்கூடிய ரேஷனையாவது கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

*** திரு கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, புஞ்சை நிலங்களுக்கு வரியை ரத்து செய்திருப்பது விவசாய மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்து இருக்கிறது. பல ஏக்கர் நிலங்கள் என்னுடைய தொகுதியில் கரம்பாக இருந்து கொண்டிருக்கிறது. அவற்றை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே இருந்த அரசு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கும் நிலங்களை ஜாரி செய்திருக்கிறது. ஆகவே மூன்றாண்டுக் காலத்திலே என்ன என்ன நிலங்கள் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இந்த மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்தில் பஞ்சத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட தொகுதி என்னுடைய தொகுதி என்ற காரணத்தாலே நான் சில கோரிக்கைகளைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கடுமையான புயலின் காரணமாகப் பாதிக்கப்பட்டு, வீடுகள் எல்லாம் மோசமான நிலையில் இருக்கின்றன. தென்னை, மா, பலா போன்ற மரங்கள் எல்லாம் வேரோடு சாய்ந்துவிட்டன. தென்னை உற்பத்திக்காக வென்று ஏறக்குறைய 6 லட்சம் ரூபாய்களை ஒதுக்கியிருப்பதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னைப் பிள்ளைகளையும், மா, பலா போன்றவற்றையும் வைப்பதற்கு உடனடியாகக் கடன் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குடிசைகளில் வாழ்ந்தவர்கள் எல்லாம் குடிசைகளை இழந்து விட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஏற்ற முறையில் கடன் வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புயல் அடிக்கின்ற நேரத்திலேயும், தீ விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்திலேயும் உதவித் தொகையாக 30 ரூபாயும், 10 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் தான் தரப்படுகிறது. அதை ஏற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படைச் சம்பளம் 50 ரூபாய்க்கு மேல் வாங்குகின்றவர்களுக்கு இந்த உதவித் தொகைகள் கிடைக்கவில்லை. புயலால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும் மற்றவர்களும் இந்த உதவித் தொகைகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. எனவே இது சம்பந்தமான சட்டத்தையும் திருத்த வேண்டுமென்று நான கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மிகவும் முக்கியமாக, பாதிக்கப்பட்ட பகுதியை மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். எந்த அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது என்பதையெல்லாம் நேரிலே தெரிந்து கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால், வீடுகள் இழந்தவர்கள், தோட்டங்களை இழந்தவர்கள் இவர்களுக்கு எல்லாம் உதவிகள் செய்யப்பட வேண்டும். அங்கே உள்ள ஏரிகளைப் பழுது பார்க்கும் வேலை இன்னும் எடுக்கப்படவில்லை. ஸ்பெஷல் ஃப்ளட் டிவிஷன் என்று ஏற்படுத்தியும்கூட அங்கு வேலைகள் துரிதமாக நடக்கவில்லை. தென்னை, மா, பலா, முந்திரி போன்றவைகள் சேதம் அடைந்திருக்கின்றன......

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பாதிக்கப்பட்டதை மராமத்து செய்வதற்குப் போதுமான நிதி ஒதுக்கி வேலைகளை ஆரம்பிக்கச் சொல்லியிருக்கிறோம். எந்த எந்தக் கிராமங்களில் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால் அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு கொளத்தூர் கோதண்டம் : இதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னை, மா, பலா, முந்திரி போன்றவற்றிற்கு, அவற்றை நல்ல முறையில் வளர்ப்பதற்கு வேண்டிய கடன் வசதிகளை உடனடியாகச் செய்து கொடுத்தால்தான் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கக்கூடிய பலனை அடைய முடியும். அதற்கான கடன் மனுக்களை நாங்கள் தயார் செய்து கொடுத்து இருக்கிறோம். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜமாபந்தியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஜமாபந்திக்காக கலெக்டரோ அல்லது டெபுடி கலெக்டரோ வரும்பொழுது புறம்போக்கு நிலங்களையும், மற்றவைகளையும் ஜாரி செய்கிறார்கள். ஆனால் பரிசீலனை செய்து கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆண்டுக் கணக்கில் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜாரி செய்யப்படுவது பற்றி மூன்று மாதத்திற்கு முன்னாலேயே எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட கிராமங்களிலே பொது மக்களை ஜமாபந்தியில் சந்தித்து இந்த நிலம் ஜாரி செய்யப்பட்டது அல்லது ஜாரி செய்யப்படவில்லை என்று சொன்னால் அது நலமாக இருக்குமென்று கருதுகிறேன். அப்படிச் செய்தால் தான் அங்கே இருக்கின்ற சிக்கல்கள் காலதாமதங்கள் எல்லாம் குறையும். என்னுடைய வட்டத்திலே யார் யாருக்கு பட்டாக்கள் இதற்கு முன்பு வழங்கப்பட்டிருக்கின்றன. வசதி உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா அல்லது ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதை ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்புக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*Thiru K.S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I express my thankfulness for giving me an opportunity to speak on the Demand for Famine Relief moved by the Hon. Minister for Food. In the Budget considerable amount has been sanctioned and I think it is the most important item which requires careful attention because if this is not solved, all our efforts we put in regard to other departments and the amount we spend will become wasteful and would not yield results. Therefore, this item requires greater attention and more funds. In this connection, I wish to say a few words about the drought conditions in my constituency in particular and the Hosur taluk in general.

I express my congratulations and also thankfulness to the Hon. Minister for giving information a few days ago about the permanent drought-affected areas of our State. He was also kind enough to state that the entire Hosur taluk and certain portions of the Krishnagiri taluk also had been included in the list of drought affected areas of the State. Therefore, on behalf of the people of that area, I wish to express my thankfulness to him. In this connection, I wish to state that in the year 1965–66, the south-west monsoon failed and till October there was no rain. In the District Administration Report relating to the Madras State, it is stated that on the whole the rainfall for that period has been below the normal and especially in the Hosur taluk it completely failed. The famine condition began to be felt by the people in the month of October and immediately we represented the matter to the Hon. Chief Minister who was then in power, but we never got any reply from him. Again, a number of mahazars were sent. People were anxiously expecting rain in the months of October and November from the north-east monsoon and they were disappointed. Instead of hearing thunders and seeing the showers we saw only tears of sorrow, flowing from the eyes of the people of the entire taluk. When season failed the life of the people became horrible and poor people began to eat roots and leaves etc. and many people left their homes in search of food and employment. This is the pathetic condition of the people. In the month of November the Collector gave a

report that nearly 50,000 acres of land were not brought under cultivation due to failure of rains and in certain places the crops that had been raised, withered away for want of rain. That was the condition of the people then. The then Hon. Minister for co-operation came to Hosur in November, he saw the pathetic conditions of the people and he also promised to see that loans payable to Co-operative Societies would be postponed, but afterwards he forgot it entirely. In the next year we had plenty of rain, abnormal and excessive rain, and the crops which were ready for harvest were completely drowned, even dry fields were covered with water and almost all the crops failed. On account of drought in 1965–66 and on account of heavy rains in 1966–67 the entire taluk suffered. The capacity of an average ryot has completely gone down, and he is in a most pathetic condition.

பிற் பக 12-30

We heard that the Union Government has constituted a committee to go into the question of removal of permanent drought conditions in Andhra, Mysore and Maharashtra. We heard that a conference was held in Tirupati. From newspapers we learnt that not a single Minister of this State attended the meeting and represented about the drought areas of our State. We are glad that at least our present Ministers have made up their minds, and have taken steps in the right direction and have submitted proposals to the Central Government for the inclusion of the drought-affected areas of our State. I request the Hon. Ministers to show sympathy and grant extra amounts for the improvement of Hosur taluk in this direction. With these words I conclude my speech.

* **திரு. வ. ஜார்ஜ் :** மதிப்புமிகு உதவித் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்பேரில் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் கலெக்டர்களுக்கு அதிகப் பி.ஏ.-க்கள் வேண்டாமென்று அவர்களுடைய பதவி தாழ்த்தப்பட்டது. ஆனால் ஒரு பி.ஏ.க்கு, கடந்த மே மாதம் ஓய்வு பெற வேண்டியவருக்கு, பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியும்போது இது நீதியா நேர்மையா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. பதவி தாழ்த்தப்பட்டவர்கள் நேர்மையான முறையில் இந்த அநீதியைப் பார்த்துக்கொண்டு தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்வார்களா என்பதையும் கேட்காமல் இருக்க முடியாது.

ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் என்பது அரசாங்க இலாகாவிலே அச்சாணி போன்ற டிப்பார்ட்மெண்ட் ஆகும். அது பழம் பெரும் டிப்பார்ட்மெண்ட். டிப்பார்ட்மெண்டுகளிலே மாறுதல் செய்வது என்றால் முதலிலே ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் கவனம் செலுத்தினால் தான் பலன் கிடைக்கும். இங்கு சிவப்பு நாடா முறை பெருமளவில் இருக்கிறது. உதாரணமாக ரெவின்யூ ஈல. சர்டிபிகேட் கொடுக்க சாதாரணமாக மாதம் ஆகலாம். ஆனால் இன்று $3\frac{1}{2}$ வருஷம் கழித்துக் கொடுக்கும் நிலை இருக்கிறது. இவ்வாறு இதற்கு $3\frac{1}{2}$ வருஷம் ஆகும்போது லிமிடேஷன் ஆக்ட்படி மூன்று வருஷத்திற்குள் இந்த சர்டிபிகேட்டை வாங்கி ஒழிப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற விதி இருக்கிறது. விற்பனைச் சன்னத்தில் பிழை இருந்தால் கூட தொல்லை ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கேஸில் அகஸ்தீஸ்வரம் தாலுகா சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் என்று இருந்தது; அடிஷனல் சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் என்று இருந்திருக்க வேண்டும். அந்த

"அடிஷனல்" என்ற வார்த்தை இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டு அதற்கே 4½ மாதம் ஆகிவிட்டது. இந்த நிலைமையில் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் இருந்தால் விவசாயிகள் நிலைமை என்ன என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் படி மூன்று மாதத்திற்குள் பதிவு செய்யாவிட்டால் பெனல்டி கட்ட வேண்டும். அரசாங்க இலாகாவின் தவறுக்காக விவசாயி பெனல்டி கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. இந்த மாதிரி ஊழல்கள் நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். எந்த ஒரு குடிமகனும் ஒரு மனு அனுப்பினால் ஒரு மாத காலத்திற்குள்ளாக—திட்டவட்டமான முடிவு எடுக்கப்படாவிட்டாலும்கூட, அம் மனு என்ன நிலையில் இருக்கிறது என்பதற்குப் பதில் அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்தால் ஓரளவு இந்தச் சிவப்பு நாடா முறையைக் கட்டுப்படுத்த முடியும்; அதை முதலிலே ரெவின்யூ இலாகாவிலே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெவின்யூ இலாகாவிலே "போக்கு வரவு" என்ற முறை இருக்கிறது. சொத்துக்களை விற்றால் வாங்குகின்றவர்கள் பெயரில் அரசாங்கம் பதிவு செய்து போக்குவரவு செய்ய வேண்டும். அவ்வாறு பல சொத்துக்கள் போக்குவரவு செய்யப்படாமலே இருக்கின்றன. இதனால் பல கேஸ்களுக்கு இடம் ஏற்படுகிறது. இந்த நிலைமையை அரசாங்கம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்மனாபபுரத்தில் ஆர். டி. ஓ. ஆபீசுக்கான நிலங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்து வைத்தும் பல வருஷங்களாகியும் இதுவரை கட்டடம் கட்டுவதற்கான முஸ்தீபுகள் இல்லை. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இப்போது இருக்கிற ஆர். டி. ஓ. ஆபீசில் உட்காருவதற்குக் கூட இடம் இல்லை. வக்கீல்கள் போனால் கூட உட்கார இடமற்ற நிலை இருக்கிறது. அத்தகைய இடத்தில் தற்போது அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் ரி-சர்வே நடந்து வருகிறது. ரி-சர்வே சார்ஜுகளை நிலத் தீர்வையோடு சேர்த்து வசூலிக்கக்கூடிய காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை நாலைந்து தடவைகளாக வசூலிப்பது நல்லது. அதிலும் மலைப் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, நாலைந்து தவணைகளில் வசூலிக்க வழி செய்ய வேண்டும்.

கோர்ட் பீஸ் ஸ்டாம்ப் பேப்பர் பற்றுக்குறையாக இருக்கிறது. முத்திரைத் தாளுக்கு சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பணத்தைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளலாம் என்ற முறை இப்போது அமுல் நடத்தப்பட்டு இருக்கிறது. அந்த முறையிலே கோர்ட் சிரஸ்ததார்களும் கோர்ட் பீஸுக்கு பணத்தை பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்கலாம் என்ற முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு உரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். நாகசுந்தரம் :** அன்புள்ள துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அரசாங்கம் விவசாய நிலங்களுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தாலும் கூட அந்த விவசாயிகளுக்கெல்லாம் என்ன காரணத்தாலோ இது வரை பட்டா வழங்கவில்லை. எனவே, ஆயிரக் கணக்கான விவசாயிகள் பட்டா வழங்கப்படாமையால் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த அரசாங்கம் இன்னொரு தவறையும் செய்திருக்கிறது. எக்ஸ் சர்விஸ்மென்னுக்குக் கொடுத்த அதே நிலத்தைக் காங்கிரஸ் தியாகிகளுக்கும் கொடுத்திருக்கிறது. இரண்டு பேரும் வேறு வேறு இடத்திலிருந்து வந்து சண்டை போட்டுக் கொள்வதால் அந்த மாதிரி நிலங்கள் எல்லாம் சும்மா தரிசாகக் கிடக்கின்றன. நம்முடைய அரசாங்கம்

அந்த நிலத்தை எல்லாம் எடுத்து மூன்றுமவர் ஒருவருக்கு அதுவும் உள்ளூர்க்காரர் ஒருவருக்குக் கொடுத்து தரிசாக இல்லாமல் விவசாயம் செய்ய வழி செய்ய வேண்டும்.

இந்த அரசாங்கத்திற்குத் தரக்கூடிய புள்ளி விவரங்களைக் கடைசி மட்டத்தில் இருக்கிற கிராமாதிகாரிகள் தான் இது வரை தந்து வருகிறார்கள். அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களினால் தான் சென்ற அரசாங்கம் உணவுப் பிரச்சினையில் தவறிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, இந்த அரசாங்கம் கிராமதிகாரிகள் சரியான புள்ளி விவரங்களைத் தர வேண்டுமென்று எச்சரிக்கை விடவேண்டும். அவர்களுக்கு அதிக அவகாசம் கொடுத்தாவது புள்ளி விவரங்களைச் சரியானபடி சேகரிக்க வேண்டும். சரியான புள்ளி விவரங்களைக் கொடுக்காவிட்டால் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பயந்து ஒழுங்கான புள்ளி விவரங்களைத் தருவார்கள்.

வரி வசூல், கிஸ்தி வசூல் முதலிய காரியங்கள் இருந்தபடியால்தான் "கலெக்டர்"களுக்கு வெள்ளைக்காரன் காலத்தில் "கலெக்டர்" என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அந்த மாவட்டத்தின் எல்லா அபிவிருத்திகளுக்கும் அவர்தான் பொறுப்பு. ரெவின்யூ, போலீஸ் அட்மினிஸ்ட்ரேஷன், லோகல் போர்ட்ஸ் அத்தனைக்கும் இந்த மாநில சர்க்காரின் பிரதிநிதியாக அவர் இருக்கும் காரணத்தால் "கலெக்டர்" என்ற பெயரை மாற்றி, "டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேட்டர்" என்று பெயர் சூட்டினால் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

நகரங்களில் டி. டி. வி. கூடுகிறது. இந்த டி. டி. வி. யினால் எந்த விதப் பயனும் இல்லை. அதிகாரிகள் வருகிறார்களே தவிர, நாங்கள் சொல்வதற்கெல்லாம் ஏதோ பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டு போய் விடுகிறார்களே தவிர, உருப்படியான பலன் எதுவுமில்லை. ஆகவே அன்பு கூர்ந்து இந்த டி. டி. வி. க்கு முழு அதிகாரத்தையும் கொடுத்து அதை மாற்றியமைக்க வேண்டும்.

வெள்ளம், தீ விபத்து இவற்றிற்கு 30 ரூபாய் கொடுப்பது என்பது எப்போதோ தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த நகராட்சிகளுக்கும் அதன் மீது பொறுப்பிருக்கிறது. அவர்கள் எல்லோரும் அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி 100, 200 அல்லது 250 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் அந்தத் தொகைகளை அப்படியே அனுமதிப்பது இல்லை. ஆகவே நம் அரசாங்கமாவது நகராட்சி என்ன தீர்மானம் போடுகிறதோ, ஒவ்வொரு வீட்டிற்கும் எவ்வளவு தரவேண்டும் என்று சொல்கிறார்களோ அந்தத் தொகையை அனுமதித்து விட்டால் போதும். நமக்குத் தனிப்பட்ட செலவு எதுவும் இல்லை. அந்தந்த நகராட்சியே அதைப் பார்த்துக் கொள்ளும்.

அடுத்தபடியாக, ஹௌஸிங் யூனிட்டில் அடுக்கடுக்காக பெரிய அகலமான, உயரமான மாடி வீடுகளைக் கட்டுவதைவிட ஏழைகளுக்கு ஓட்டு வீடுகள், ஆயிரக் கணக்கான வீடுகளைக் கட்டி சிறுசிறு தொகைகளாக அவர்களிடம் இருந்து வசூல் செய்தால் தீ தடுப்பு வேலைகளை முன் கூட்டியே செய்ததாக முடியும். ஆகவே ஹௌஸிங் யூனிட்டின் கவனம் இந்த முறையில் திரும்பினால் அது நன்மையாக இருக்கும்.

இந்த விவசாயத்தைப் பொறுத்த வரையில், "எலெக்ஷன் அர்ஜண்ட்" என்று எப்படி நடைமுறையில் துரிதமாக செயல்களை எல்லாம் நடத்த வேண்டுமென்று நினைக்கிறோமோ அதே போன்று "அக்ரிகல்ச்சர் அர்ஜண்ட்", "விவசாயம்-அவசரம்" என்று அட்டைகளைப் போட்டு ஃபைல்களை மூவ் செய்தால் காலதாமதம் தவிர்க்கப்படும் என்று கூறிக்கொண்டு எனது சிறிய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு பி. ஜி. கருத்திருமன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது கனம் அங்கத்தினர் திரு. விநாயகம் அவர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் தமிழக அரசாங்கத்தில் மட்டுமல்ல, நம் தேசத்திலேயே இந்த ரெவின்யூ டிப்பார்ட்மெண்டுக்குத்தான் அன்னிய ஆட்சியின் கீழ் அதிக முக்கியத்துவம் கொடுத்து, எல்லா இலாக்காக்களையும் அதில் சேர்த்து, அதுதான் பேரண்ட் டிப்பார்ட்மெண்ட் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் சுதந்திரம் பெற்றவுடன் இதன் மூலம் கிடைக்கும் வருவாய், பாக்கியுள்ள வருவாய்களை விடக் குறைந்துவிட்ட போதிலும், ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட்டில் உள்ள பழைய ஜபர்தஸ்துகள் எல்லாம் இன்னும் கிராமங்களில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை இங்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் கூட, அவையெல்லாம் இரண்டாம் தரம், மூன்றும் தரம் தான். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் தான் முதல் தரமாக இருக்கிறது. காரணம், பழைய காலத்தில் அது பெரிய வருவாயைக் கொடுத்துக் கொண்டிருந்தது என்பதுதான். சென்ற ஆட்சியில் காங்கிரஸ் சர்க்கார் அடிப்படைத் தீர்வையை எடுத்துவிட வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்காக அடிப்படைத் தீர்வையை நீக்கிவிட வேண்டும் என்பது பழைய சர்க்காரின் நோக்கம். அப்படி நீக்கும் சமயத்தில் தானியக் கொள்முதலை சர்க்கார் எடுத்து நடத்துவதின் மூலம் அதை ஈடுகட்டிக் கொள்ளலாம் என்று அன்றைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். இப்போதைய சர்க்காரின் தீர்மானம் எப்படியிருக்கிறது ? இப்போதைய சர்க்கார், தான்ய வர்த்தகத்தை எடுத்துக் கொள்வதா இல்லையா என்பது பற்றி முடிவிற்கு இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன். இதில் பூமித் தீர்வை என்பதும் இருக்கிறது. ஒரு ஊரை எடுத்துக் கொண்டால் சர்க்கார் வாய்க்கால் மூலம் தண்ணீர் பாயும் ஒரு பூமிக்கு $6\frac{1}{2}$ ரூபாய் கந்தாயம், இன்னொரு பூமிக்கு $7\frac{1}{2}$ ரூபாய், இன்னொரு பூமிக்கு $14\frac{1}{2}$ ரூபாய் என்றிருக்கிறது. பழைய காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்போது, வெள்ளைக்காரனுக்கும் பூமிக்கும் சம்பந்தம் இல்லாத போது—அப்போது மண்தின்னி கலெக்டர் என்று சொல்வார்கள், மண்ணை வாயில் போட்டு அதன் சத்தைப் பார்த்து தரம் பிரித்ததாகச் சொல்வார்கள், ஃபெர்டிலிட்டி ஆஃப் தி ஸாயில்—அப்படிச் செய்தார்கள். ஆகவே பூமியைச் சீராக மூன்று வகையாகப் பிரிக்க வேண்டும். ட்ரை லாண்ட், (மானாவாரி பூமி), குளத்துப் பாசனம் பெறும் பூமி, சர்க்கார் வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் பூமி என்று திடமாக பூமியைப் பிரித்தால் புன்செய் நிலங்களுக்குத் தீர்வை ரத்து செய்யப்பட்டிருப்பதை, அந்த வருவாயைச் சரிக்கட்டி விடலாம். எப்படி என்று கேட்கலாம். கீழ் பவானிப் பிரதேசம் இருக்கிறது. 15 ரூபாய் தீர்வை விதித்திருக்கிறார்கள். பழைய பூமிக்கு $6\frac{1}{2}$ ரூபாய் தீர்வை. இதைவிட நல்ல பூமிக்குப் பத்து ரூபாய் தான் தீர்வை இருக்கிறது. சிலவற்றிற்கு 14 ரூபாய் தீர்வை என்று இருந்து கொண்டிருக்கிறது. தாம்பரபரணிப் பாசனத்தில் 21 ரூபாய் என்று இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றை யெல்லாம் கன்ஸாலிடேட் செய்து வாய்க்கால் மூலம் தண்ணீர் பயன்படுவதற்கு, எந்த இடத்தில் எந்த வாய்க்காலாக இருந்தாலும் ஒரு போகமானால் ஒரு தீர்வை, இரண்டு போகமானால் அதற்குப் பாதி, மூன்று போகமானால் அதில் கால் பங்கு என்று ஒரு நிலையான தீர்வை இருக்க வேண்டும். எனக்கு ஒரு பத்து ஏக்கர் இருந்தால், பாசன வசதி பெறாத பூமி எதுவாயிருந்தாலும் ஒரு போகம் இருந்தால் 12 ரூபாய் என்று வைத்தால், 120 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தமிழகம் பூராவும் இருக்குமானால் நல்லது. சிக்கல்கள் ஒன்றும் ஏற்படாது. பிறகு அடங்கல் என்று எழுதி வைக்கிறார்கள். அதில் என்னென்ன எழுதிவைப்பார்கள் என்று சொல்ல முடியாது. கிராம அதிகாரிகளை நம்பித்தான் இருக்க வேண்டும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் என்று சொல்லும் ரெட் டேப்பிஸம், சிவப்பு நாடா முறை இன்னும் இருக்கிறது. சிலர் நாணயமாக இருக்

கிறார்கள், சிலர் நிலத்தைப் பார்க்காமலேயே வீட்டில் இருந்து கொண்டே எழுதிவிடுகிறார்கள். ஆகவே புதுப் புதுப் பாசனத்திற்கு வரும்போது கிராம விவசாயிகள் பல பலப் அல்லல்களுக்கு ஆளாகிறார்கள், என்ன என்னவோ எழுதி வைத்து விடுகிறார்கள். சிலவிடங்களில் தண்டத் தீர்வை விதித்து விடுகிறார்கள். அது எவ்வளவு என்று சொல்ல முடியாது. பிறகு அவர்கள் அது குறித்துச் சர்க்காரிடம் செல்ல வேண்டியிருக்கிறது. சென்று அதை நிறுத்தி வைக்கிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல்கள் நீக்கப்பட வேண்டும். என்னுடைய யோசனை, புன்செய்யின் மீதுள்ள அடிப்படைத் தீர்வையை நீக்கிவிட்டாலும் பூமி எல்லாம் சர்க்காருக்கும், மக்களுக்கும் சொந்தமானது. ஆகவே ஒருவருக்கு அதிகம் ஒருவருக்குக் குறைவு என்ற நிலை இருக்கக்கூடாது. ஒரு அடி மண் தோண்டினாலும் நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. ராயல்டி என்ற முறையில் எந்த பூமியாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தீர்வை இருக்க வேண்டும். எந்தெந்த வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறதோ அதற்கு மேல் தீர்வை இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது எல்லா நிலத்திற்கும் பேஸிக் டாக்ஸ் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நன்செய், புன்செய் இரண்டிற்குமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : எதுவாக இருந்தாலும் சரி. முதல் அமைச்சர் அவர்கள்..........

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நிலப் பிரச்னைபற்றிய கருத்துக்கள் எப்படி வளர்ச்சி யடைந்து கொண்டு வருகின்றன என்பது பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : நில வரி பூராவையும் மாற்றியமைக்க வேண்டும். லாப நஷ்டம் பார்த்துப் போட்டுக் கொள்ளலாம். ஒரு முறையைச் செய்தால், ஒரு புதுமையைச் செய்தால் அது நிரந்தரமாக இருக்க வேண்டும். நிலச்சீர்திருத்தம் பற்றிப் பலவிதமாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது என்ன கூறிவந்தார்கள் என்று தெரியும். காங்கிரஸ், சட்டம் கொண்டு வருவதற்கு முன்னதாக எல்லோருக்கும் நோட்டீஸ் கொடுத்துவிட்டு வேண்டியதையெல்லாம் செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். அடிப்படைக் கருத்து என்ன ? பூமி ஒரு இடத்தில் குவிந்து இருக்கக்கூடாது, பரவலாக இருக்க வேண்டும் என்பது தான். எனக்கு 15 ஏக்கர் இருந்தால் தீவிரமாக சாகுபடி செய்து அதிக உற்பத்தி செய்ய வாய்ப்பிருக்கும். 100 ஏக்கர் இருந்தால் அதைக் கவனிக்காமல் பட்டணத்தில் இருந்து கொண்டு குத்தகை எடுத்துக் கொண்டிருக்கும் நிலைதான் இருக்கும். ஒவ்வொருவரும் பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பெரிய பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட் கூட............

திரு வி. எஸ். எஸ். மணி : 200 ஏக்கர் இருந்தால் அதை அந்தக் குடும்பத்தாரே பகிர்ந்து கொள்ளுகிற பாலிஸியை ஒத்துக்கொள்கிறீர்களா ?

திரு. பி.ஜி. கருத்திருமன் : அதைத்தான் சொல்ல வந்தேன், அதற்குள் குறுக்கிட்டு விட்டார்கள். ஆகவே, ஒரு குடும்பத்தில் இருக்கிற அவர்களும் பிழைத்துத்தானே ஆகவேண்டும்? அதைத்தான் நான் சொல்ல வந்தேன். பெரிய பெரிய இண்டஸ்ட்ரீஸ்ஸிலே சொத்துக்களைக் கோடிக் கணக்கில் சேர்த்து, மகள் பேரிலும், மகன் பேரிலும் பிரித்திருக்கும்போது, விவசாயி மட்டும் ஒன்றும் செய்யாமல் இளிச்சவாயனாக இருக்க வேண்டுமா ?

(திரு. கா. வேழவேந்தன் தலைமை)

இந்துச் சட்டப்படி கர்ப்பத்தில் ஒரு குழந்தை இருந்தாலும் அதற்கு ரைட் வருகிறது. இப்படிப்பட்ட அடிப்படை ஜீவாதார உரிமை இருக்கிறது. பையன் மேஜர் ஆனால், 'என்னுடைய சொத்தைப் பிரித்துக்கொடு' என்று

கோர்ட்டிலே சூட் போடுகிறான். அப்படிப் பிரித்து வைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. எல்லா விதத்திலும் பிரித்து வைக்க வேண்டும் என்பதுதான் முறை. அப்பன் இருந்தால் சாகும் வரையில் மகனுக்குக் கொடுக்க மாட்டான். அந்த நிலைமை இருந்து கொண்டுதான் வருகிறது. ஒரு சிறிய கதை. ஒரு அப்பன் ரொம்ப சொத்து சேர்த்து வைத்திருந்தான். அவன் வீட்டிலே ஒரு தங்கக் கட்டியை எடுத்துச் சுவற்றோடு கட்டி விட்டான். அவனுக்கு உயிர் போகும் நேரம். சுவற்றுக்குள் தங்கக் கட்டி வைத்திருப்பதைச் சொல்ல வேண்டும் ; அந்தச் சமயத்தில் வேறு யாரோ வந்துவிட்டார்கள். அப்போது கொல்லைப் புறத்தில் இருந்த விளாம்பழத்தைச் சுட்டிக் காட்டினான். மனைவிக்கு அது அர்த்தமாகி விட்டது. அப்போது அங்கே இருந்தவர்கள் என்ன என்று கேட்டார்கள். "விளாம்பழம் சாப்பிட்டால் தொண்டை விக்கல் நிற்கும் என்று சொல்கிறார்" என்று மனைவி விளக்கம் கொடுத்தாள். அப்பேர்பட்ட சொத்துச் சேர்த்தது விளாம்பழமாகப் போய்விடாது குடும்பத்தில் உள்ளவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதில் தவறு கிடையாது. பிரித்துக் கொடுப்பதில் வேலைக்காரன் பேரிலோ, அல்லது வேறு யாரோ சொந்தக்காரர் பேரிலோ செய்தால் தவறு. அதற்காக ரெவின்யூ போர்டில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. (திரு. வி. எஸ். எஸ். மணி எழுந்தார்) ஐ ஆம் நாட் ஈல்டிங், ஸார். செய்யப்பட்ட காரியங்கள் நியாயமானவையாக இருக்கின்றனவா என்று பார்க்க சர்க்காருக்கு உரிமை இருக்கிறது. நியாயமான முறையில் பிரிக்கப்பட்டிருக்கிறதா, அல்லது தவறான முறையில் பிரிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க சர்க்காருக்கு உரிமை இருக்கிறது என்று நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். தவறான டிரான்ஸாக்ஷன்கள் இருக்கலாம். சிலர் ஏமாற்றி இருக்கலாம். இல்லை என்று நான் சொல்லவில்லை. யார் யார் பேரிலோ பிரித்து எழுதி வைத்திருக்கலாம். அதைப் பற்றிப் பார்க்க சர்க்காருக்கு எப்போதும் உரிமை இருக்கிறது.

அடுத்தபடியாக, ஜமீன்தாரி, இனாம்தாரி முறையை எப்போது ஒழித்தோமோ அப்போதே நிலப் பிரச்னைக்கும் முடிவு கட்டியாகிவிட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் குடியானவர்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் இடையே நிரந்தரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்வதில் நல்ல முறை எது என்றால் ரயத்துவாரி முறை தான். ரயத்துவாரி முறையை யுனிஃபார்மாகச் செய்யவேண்டும். இனாம்தாரி, ஜமீன்தாரி முறைகள் போய் விட்டன. எல்லாவற்றையும் ரயத்துவாரியாக மாற்றிக்கொள்ளும் முறை இருப்பதால், இதை விடச் சிறந்த முறை இருக்க முடியாது என்று கூறிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாகத் தரிசு நிலம். ஒரு நிலத்தைப் பிறருக்கும் பிரயோசனம் இல்லாமல், அவர்களும் தரிசாகப் போட்டிருப்பதை இனிமேல் ஆதரிக்க முடியாது. அந்த நிலங்களைப் பயிரிடுகிறவர்களிடத்திலே கொடுக்க வேண்டும். தரிசு நிலங்களில் இன்னும் சில பிரச்னைகள் இருக்கின்றன. அதைப் பற்றி நான் தனியாக முதல் அமைச்சரிடம் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன். ஒரு நிலத்திற்கு அந்தத் தரிசு நிலத்தின் வழியாகத் தண்ணீர் பாயவேண்டிய நிலைமை இருக்கும். அந்த நிலத்தின் வழியே தண்ணீர் வந்து பாய இடம் கொடுக்க மாட்டேன் என்று இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவனுடைய பூமிக்குத் தண்ணீர் வந்து சேர முடியாதபடி இடைஞ்சல்கள் இருக்கின்றன. 10–15 வருஷமானாலும், "என்னுடைய பூமி, நான் கொடுக்கமாட்டேன்." என்று சொல்லிக்கொண்டு, சாதாரண விவசாயிக்குத் தண்ணிர் போகாது. அந்த வசதிகளைச் செய்து கொடுத்தால், பாதித் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாறும் என்பதில் சந்தேகம் கிடையாது.

தரிசு நிலங்களில் இன்னொரு வகை. மலை பூமிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சர்வே நடத்துவது கஷ்டமாக இருக்கலாம். ஐந்து வருஷம் என்று சொல்லுவதை இன்னும் சில காலம் கொடுத்து, நல்ல முறையில் சரியான முறையில் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரி. இதிலே, பழைய காங்கிரஸ் சர்க்காரிலே 1955-ம் வருஷத்தில் சட்டம் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள், மேய்ச்சல் நிலத்திற்கென்று விலக்கு அளிக்கலாம் என்று இருப்பதை மாற்றலாம் என்று கருதுகிறாரா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : மேய்ச்சல் நிலம் என்று இருப்பதை போர்ட் ஆஃப் ரெவின்யூ அதிகாரிகள் பார்த்து, நியாயமாக இருந்தால் விலக்குக் கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய நாட்டின் விவசாயம் குறித்து, கால்நடைகள் நல்ல விதத்தில் வளர்க்கப்பட வேண்டுமென்றால், நிரம்ப மேய்ச்சல் நிலம் வேண்டுமென்று அடிப்படையாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால், டென்மார்க் நாடு, விவசாயம், கால்நடை அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கிற நாடு. விரிவான முறையில் மேய்ச்சல் நிலங்களை வைக்காமல் கால்நடைகளை வளர்க்கிற முறை அங்கே இருக்கிறது. அதைக் கடைப்பிடித்தால் நெல் உற்பத்தி செய்யக் கூடிய நிலத்தை மேய்ச்சல் நிலம் என்று ஒதுக்காமல் இருக்க முடியும். அதைப் பற்றி கனம் எதிர்க் கட்சித் தலைவர் என்ன சொல்லுகிறார் ?

திரு. பி.ஜி. கருத்திருமன் : முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை நான் பூர்ணமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். நானும் பல பாகங்களுக்குச் சென்று வந்ததில் மேய்ச்சல் நிலம் என்ற பெயரில் அதிகமாக நிலம் ஒதுக்கப்படாமல், குறைந்த அளவுக்கு நிலத்தை ஒதுக்கி அதிகமாகப் பயன்படுத்தும் முறையில் செய்யலாம் என்று அறிந்திருக்கிறேன். இப்போது இருக்கும்படியான நிலையில் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். ஃபாடர் க்ராப்ஸ் என்று ஒரு ஏக்கரில் போட்டால் அது 15 மாடுகளுக்குப் பயன்படும். விளைச்சலும் இல்லாமல், எதற்கும் பயன் இல்லாமல் இருக்கும் நிலங்களைப் பூர்ணமாக உபயோகப்படுத்திக்கொள்ளும் யோசனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று நான்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில் நான் ஏற்கெனவே சொன்னதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். விவசாய வருமான வரியை 1955-ம் வருஷத்தில் கொண்டு வந்த சமயத்தில் நிலசீர்திருத்தம் என்பது அப்போது கிடையாது. நிலச் சீர்திருத்தத்தில் பூமி யெல்லாம் பிரிக்கப்பட்டு அவர்களிடத்திலிருந்து எப்படியெப்படியோ போன பிறகு, பெறக்கூடிய வருவாயானது குறைந்து கொண்டே தான் வந்திருக்கிறது. கம்பவுண்டிங்கை நீக்கிவிட்டால் நன்றாக இருக்கும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். இப்போது கம்பவுண்டிங்கை நீக்கும் நிலை இருந்தால்—படித்து அறிந்தவனாலேயே கணக்கு வைக்க முடியாத நிலை என்று நான் சொன்னேன்—சாதாரண விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அப்போது என்ன சொன்னார்கள் ? நிலசீர்திருத்தச் சட்டம் வந்தவுடனே அக்ரிகல்ச்சுரல் இன்கம் டாக்ஸை எடுத்துவிடுவதாகச் சொன்னார்கள். நிலசீர்திருத்தச் சட்டம் வந்த பிறகும், வந்தது லாபம் என்று அது எடுக்கப்படவில்லை. அவர்கள்—எடுக்காத—நிலையில், 'முன்பு இருந்த சர்க்கார் எடுக்கவில்லை. அதை நாம் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொண்டால் என்ன' என்று இப்போது இருக்கிற சர்க்கார் நினைப்பதில் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை. அக்ரிகல்ச்சுரல் இன்கம் டாக்ஸைப் பொறுத்த வரையில், உணவு உற்பத்தி செய்யும்படியான—நெல், பாக்கி இருக்கும்படியான தானியங்கள் உற்பத்தி செய்யும்படியான—நிலங்களுக்கு கம்பவுண்டிங் இருக்க வேண்டும். பணப் பயிர்கள் உற்பத்தி செய்கிற நிலங்களைப் பொறுத்த வரையில் ஓரளவு மாற்றி அமைத்துக்கொண்டால் தவறு இல்லை என்பது கருத்து. விவசாயி கணக்கு வைத்து, அதிகாரிகளிடத்தில் கொடுத்து தொல்லைக்குள்ளாக வேண்டும் என்பது நோக்கமாக இருக்காது. அந்த அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்துவது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன்.

அதற்குப் பிறகு எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வந்தோம். குடியானவர்கள், கூலி, வாரச் சட்டம் கொண்டு வந்தோம். ஏற்கெனவே உழுது கொண்டிருக்கிறவர்களை வெளியேற்றக் கூடாது என்று சட்டங்களைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டங்களை ஏழை விவசாயிகளுக்கு, விவசாயத்தில் பாடுபடுகிறவர்களுக்கு, அவர்கள் நல்ல நிலைமையில் இருக்கும் முறையில், அவர்களுடைய எந்தச் சுதந்திரமும் பாதிக்காத வகையில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்று சர்க்கார் தீவிரமாக எடுத்து நடத்துவார்கள் என்று நினைக்கிறேன்.

வெளியிலே கிடக்கும் தரிசு நிலங்களை ஜாரி செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களும் சொல்லுகிறார்கள். அதிலேதான் ஒரு அரசியல் பிரச்சினை இருக்கிறது. தரிசாக இருக்கும் நிலங்களை யாருக்குக் கொடுப்பது, எப்படிக் கொடுப்பது என்ற நிலையில், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கோ, அனுதாபம் உள்ளவர்களுக்கோ ஜாரி ஆகும் நிலைமை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உச்ச வரம்புச் சட்டத்தை வைத்து நிலத்தைப் பிரிக்கிறபோது, நம்முடைய நோக்கம், நிலம் பிரிந்து இருக்க வேண்டுமே தவிர நிலம் யாரிடத்தில் இருந்தால் என்ன என்று இருக்கவேண்டும் என்று சொன்னதைப் போல, தரிசு நிலங்கள் விளை நிலங்களாக ஆக்கப்பட வேண்டும். யாரிடத்தில் கொடுக்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 1-00

திரு. பி.ஜி. கருத்திருமன் : அதைத்தான் நான் சொன்னேன். யாரிடம் கொடுக்கப்பட்டாலும் அரசியல் நோக்கம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பூமி இல்லாதவர்கள் விண்ணப்பங்கள் போடவேண்டும். அந்த விண்ணப்பங்களை ஒரு பொது இடத்தில் வைத்து சீட்டுக் குலுக்கிப் போட்டு, ஒருவருக்கு இத்தனை ஏக்கரா நிலம் என்று கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இன்னும்கூட நேர்மையான முறையில் பிரித்துக் கொடுக்கலாம். அப்படி வருகின்ற மனுக்களில் ஆதித் திராவிட மக்களுடைய கோரிக்கைக்கு முதலிடம் கொடுத்து முதலாவதாக வைத்துக்கொள்ளலாம்; இரண்டாவதாக பிற்பட்ட மக்களை வைத்துக் கொள்ளலாம், மூன்றாவதாக எக்ஸ் சர்வீஸ்மென்னை வைத்துக் கொள்ளலாம்; நான்காவதாக உழவர்களை வைத்துக் கொள்ளலாம்.

திரு பி. ஜி. கருத்திருமன் : இவர்களையெல்லாம் வைக்கும்படியான நிலை சரி. ஆனால், அவர்களில் எத்தனை பேர்கள் விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்து, 10 பேர்கள் கொடுக்கிற இடத்தில் 20 பேர்கள் விண்ணப்பங்கள் கொடுத்தால், அதை ஒரு பொதுப்படையான இடத்தில் வைத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வைத்து, சீட்டுக் குலுக்கிப் போட்டுக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது.

அடுத்தபடியாக, நெல் விலை. "பிக்ஸேஷன் ஆப் தி பிரைஸ்". ஏற்கனவே ஒரு விலை வைக்கப்பட்டு, குவிண்டாலுக்கு இத்தனை என்று கொடுக்கப்படுகிறது. விலை தீர்மானம் பண்ணுவதிலே விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையாக இருக்க வேண்டும். இப்பொழுது இருக்கும்படியான பொருளாதார நிலைமை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 15 வருஷங்களாக அரசியலில் இருந்து வந்திருக்கிறேன். இப்பெழுதும் இது தான் என்னுடைய பாலிஸி என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். சாதாரணமாக விவசாயிகளுடைய உண்மையான பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்குச் சில பேர்கள் பயப்படுவார்கள். கட்சிக் கட்டுப்பாடு கூட இடையிலே வரும். ஆனால் நான் எந்த நிலையில் இருந்தாலும் சரி, விவசாயிகளுடைய பிரச்சினை வரும்பொழுதெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கும்படியான விலை கட்டுபடியாகக்கூடிய விலையாகத்தான் இருக்க

வேண்டுமென்பதில் நான் கண்டிப்பாக இருந்து வந்திருக்கிறேன். இதுபற்றி என்னைத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும். நான் லோக் சபாவில் கூட ஒரு சமயத்தில் பேசும்பொழுது சொன்னேன்.

After all these restrictions and land legislations, Sir, I would prefer my son to be a dock labourer than to be a farmer of this country.

என்று சொன்னேன். என்னுடைய தந்தை விவசாயி, என்னுடைய பாட்டன் விவசாயி, நான் விவசாயி. இருந்தபோதிலும், என்னுடைய மகன் ஒரு துறைமுகத் தொழிலாளியாக இருப்பதற்கு விரும்புவேனே தவிர, அவன் விவசாயம் செய்வதற்கு நான் சம்மதப்படமாட்டேன் என்று சொன்னேன். விவசாயிகளுக்கு இரண்டு விதமான கஷ்டம். விவசாயத்தை உற்பத்தி செய்வதிலேயே அதிக கஷ்டம். அதைச் சர்க்கார் உணர்ந்து அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்கும் நிலைமை இல்லை. விவசாயத்துறை அமைச்சர் இப்பொழுது கொடுக்கப்படும் விலை கட்டுபடியாகக்கூடிய விலையா, நியாயமான விலையா என்று சொல்லட்டும். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயம் தெரிந்தவர்கள் விவசாயிகளுக்கு இந்த நிலையில் நிச்சயம் லாபம் கிடைக்கும் என்று சொல்லட்டும். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒன்று சொல்கிறேன். 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இப்போது சர்க்கார் கொடுக்கும் விலை நியாயமானதா, கட்டுப்படியாகக்கூடிய விலையா என்று பார்த்தால், சாதாரணமாக செகரடேரியட்டில் வேலை பார்க்கும்படியான குமாஸ்தாக்கள்கூட இல்லை, அவர்களுக்கும் கீழுள்ள கீழ்நிலை உத்தியோகஸ்தர்களுடைய நிலையிலேதான் இருக்கிறார்கள் அவர்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் நடுத்தர விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு போக, லாபம் ஒன்றும் கிடைப்பதில்லை. இப்பொழுது கொடுக்கப்படும் விலையினால், அவர்கள் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுடைய நிலையைவிட குறைவான அந்தஸ்தில்தான் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் தான் சர்க்கார் கொடுக்கக்கூடிய விலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றி அமைத்தால் தான், உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியும். அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை, லாபகரமான விலை கொடுத்தால்தான், அவர்கள் மேலும் உற்சாகத்தோடு விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இப்பொழுது குவிண்டால் நெல்லுக்கு ரூ. 40, 42, 45 என்று விலை கொடுக்கப்படுகிறது. சென்ற சர்க்கார் ரூ. 2, 3 போனஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ரூ. 42 என்பது ரூ. 45, ரூ. 45 என்பது ரூ. 49 என்று அப்படிக் குவிண்டாலுக்கு விலை கொடுக்கப்பட்டு வந்தது. மத்திய சர்க்கார் இப்பொழுது விலையைக் கொஞ்சம் ஏற்றியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உணவு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார். ஏற்கனவே கொடுத்த விலை இருக்கிறது. ஆகவே, இந்த விலை கொடுக்கலாமா, வேண்டாமா என்று யோசிக்க வேண்டும் என்ற பதிலையும் சொல்லியிருக்கிறார். பழைய விலையை வைத்து, இப்பொழுது இருக்கக்கூடிய மத்திய சர்க்கார் சிபார்சை ஏற்று, அதிகமாக ரூ. 4 சேர்த்துக் கொடுத்தால் தான் விவசாயிகளுக்கு ஓரளவுக்கு நன்மை ஏற்படும், ஆறுதல் ஏற்படும் என்பதை மிகவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய சங்கடம் எனக்குத் தெரிகிறது. ஒரு பக்கத்தில் குறைந்த விலைக்கு மக்களுக்கு அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லி, விவசாயிகளுக்கு விலையை ஏற்றிவைத்துக் கொடுத்து, அதனால், அதிகமாக நஷ்டம் வந்தால் அந்தப் பொறுப்பையும் அவர்கள்தானே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்ற நிலைமையும் இருக்கிறது. அதற்காகப் பயந்துகொண்டு விவசாயிகளுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்காமல் இருக்கக்கூடாது. "சென்ற சர்க்கார் ரூ. 2, 3 என்று போனஸ் கொடுத்து வந்தார்கள், இப்பொழுது நாம் வந்திருக்கிறோம், இதிலே இன்னும் கொஞ்சம் கூடப்போட்டு ரூ. 10 வரையில் தாராளமாகக் கொடுப்போம்" என்று சொன்னால், சென்னை, கோவை............

***மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** வேடிக்கையாகக் கேட்கிறேன். சீரியஸாகக் கேட்கவில்லை. இப்படி விவசாயிகளுக்கு அதிகப் பணத்தைக் கொடுத்து வாங்கி, வாங்கி உண்பவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுத்து வரவேண்டும் என்ற இப்படிப்பட்ட பொருளாதாரத்தை சொல்லிக் கொடுப்பதன் மூலம் ஒரு வேளை இரண்டு, மூன்று வருஷங்களுக்குள்ளேயே இந்தச் சர்க்கார் திவால் ஆகிவிடும் என்று பேசினரோ அந்த நோக்கத்தோடு இதைச் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு பி.ஜி. கருத்திருமன் : என்னுடைய நோக்கம் என்ன ? நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுகிறேன். அது என்னுடைய கடமை. சர்க்காருக்குக் கடமை இருக்கிறது. அதை ஆலோசித்து, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, ஏற்றுக்கொள்ள வேண்டாமா என்று முடிவு செய்யக்கூடிய நிலை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்ல வேண்டியது எதிர்க்கட்சியினருடைய கடமை. நீங்கள் செய்த குற்றத்தை எடுத்துக் காட்டவேண்டியது என்னுடைய கடமை. ஒன்று மட்டும் சொல்லிக்கொள்வேன். நீங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபொழுது சொன்னதைவிட நாங்கள் இப்பொழுது குறைத்துத் தான் சொல்கிறோம். அவர்கள் பத்திரிகையில் படித்திருக்கலாம். நான் என்ன சொன்னேன் என்றால் சாதாரணமாக தனிப்பட்டவர்கள் திவாலாகிற நிலைமையில் இருக்கிறார்கள் என்றால், எந்த நிலையில் அவர்கள் இன்ஸால்வென்ஸி பெடிஷன் தாக்கல் செய்வார்கள் என்றால், முதலில் வட்டி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு, பிறகு அசலும் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு, அதற்கு மேல் நிலைமை முற்றினால்தான் இன்ஸால்வென்ஸி பெடிஷன் கொடுக்கக் கூடிய நிலை ஏற்படும். அந்த நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த நிலைக்குப் போகக் கூடாது.......

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : கடன்பற்றியும், வட்டி பற்றியும் திரு. கருத்திருமன் அவர்கள் பேசிக்கொண்டு போகும்பொழுது, வட்டியைக் குறைத்துக்கொள்ள வேண்டும், தள்ளிப்போட வேண்டும் என்று கேட்பதே தனிப் பட்டவர்களுக்கும், அரசுக்கும் சரியான முறையல்ல, தன்மானமான முறையல்ல என்ற எண்ணத்தில் பேசிக் கொண்டு போவதாகத் தெரிகிறது. இங்கிலாந்து இந்தியாவுக்குக் கொடுத்திருக்கிற கடன், வட்டி ஆகிய இரண்டையுமே தள்ளிக் கொடுப்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடந்து, இங்கிலாந்து அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறது. அதனால் இந்தியாவின் தன்மானம் பாதிக்கப்படுவதில்லை.

திரு பி. ஜி. கருத்திருமன் : நான் சொல்வது என்னவென்றால், இங்கிலாந்து தேசம் அதனுடைய பொருளாதார அடிப்படையை வைத்து, அதற்குச் சக்தி இருக்கிறது, தள்ளிக் கொடுத்திருக்கிறது. மத்திய சர்க்காருக்கும் அப்படிச் சக்தி இருக்கிறது என்று நமக்குத் தெரிந்தால், அப்பொழுது வேண்டுமானால் நாங்களும் சேர்ந்து சொல்லத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தாங்கள் பேசுவது இயலுமா, இயலாதா என்பது. அது வேறு பிரச்சினை. கேட்பதே அடாது, கேட்பதே நம்முடைய தரத்திற்குக் குறைவானது, தன்மானத்திற்கு உகந்தது அல்ல என்ற அந்த வாதங்கள் வேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : கேட்பது என்றால், எந்த நிலையில் கேட்பது, யாரைக் கேட்பது என்பதெல்லாம் வேறு பிரச்சினையாக வைத்துக் கொள்ளலாம். நீங்கள் செய்கின்ற பிரசாரம் என்னவென்று சொன்னால்—நான் அதைத் தான் வேண்டாம் என்று சொல்கிறேன்—வட்டி கேட்கிறார்களே என்று சொல்லக் கூடாது. நாம் அவர்களிடம் பெற்றுவிட்ட கடனுக்குத் தான் வட்டி கேட்கிறார்கள். வட்டியாகக்

கேட்கிறார்களே என்று சொல்வது தவறு. நாமே ரூ. 19 கோடி வட்டியாகப் பெற்றுக்கொண்டு, மத்திய சர்க்கார் வட்டி கேட்கிறார்களே என்று சொல்வது தவறு என்பது தான் என்னுடைய வாதம். நமக்கு ரூ. 31 கோடி மத்திய சர்க்காரிடமிருந்து வரிமூலம் வரக்கூடிய வருமானத்தின் பங்கு வருகிறது. இந்த நிலையில் அவர்களிடம் வாங்கிய கடன் தொகையைக் கொண்டு நாம் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கடன் கொடுத்து அதன் மூலம் ரூ. 19 கோடி வட்டியாகப் பெறும்பொழுது, அதையும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய நிலை தானே வரும்......

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் நான் முன்னால் எடுத்துச் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கடன் வாங்குவது, கடனுக்கு வட்டி கொடுப்பது உலகத்தில் இருக்கிற வாடிக்கையான முறை. யார் யாரிடமோ வாங்குகிறோம். ஆனால், நாம் பெற்றிருக்கிற கடன் தொகையை நாம் விரைவிலே திருப்பிச் செலுத்தத்தக்க விதத்தில், அதைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தாவிட்டால் அதற்கு வட்டி கொடுப்பது கடினம் என்பது தான் என்னுடைய வாதம்.

திரு பி. ஜி. கருத்திருமன் : நாம் இந்த வாதத்தில் இப்பொழுது இறங்க வேண்டாம். இது சரியான வாதமா, தப்பான வாதமா என்று பேசுவதற்கு இன்னும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அவர்கள் இப்பொழுது இருக்கும்படியான கொள்கையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். போகப், போக பின்னாலே எப்படியும் ஒரு தீர்மானத்திற்கு வருவது என்ற நிலை ஏற்படும்..........

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : இது என்னுடைய கருத்து மட்டுமல்ல. முன்னாள் முதல் அமைச்சர் திரு.பக்தவத்சலம் கூட இது தேவை தான், நியாயம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை.)

திரு பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் சொன்னதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதைப் பூராவும் இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா ? ஏற்றுக் கொண்டு நடந்தால் ரொம்ப சந்தோஷம். அவர் அப்படி எந்த நிலையில் சொன்னாரோ......

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : அவர் சொல்கிற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்கிறார்கள். அவர் காய்கறி சாப்பிடுகிறார். நான் வேறு உணவைச் சாப்பிடுகிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : பேசுகிற பேச்சில் முதலிலும் கடைசியிலும் விட்டுவிட்டு, இடையிலே சொன்னதைப் பிடித்துக்கொள்ளக் கூடாது. முன்னாள் முதல் அமைச்சர் எதற்காகச் சொன்னார், என்ன சொன்னார், எந்த நிலைமையில் சொன்னார் என்று பார்க்க வேண்டும். அவர் சொன்னதை யெல்லாம் பூரணமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா ? அந்த ஒன்றை மட்டும் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும் ? வேறு எத்தனையோ சொல்லியிருக்கிறார். நிலவரியை பூராவும் ரத்து செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டீர்களா ? சர்க்கார் உணவு தான்ய வியாபாரத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்......

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: திருக்குறள் ஒன்று இருக்கிறது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

திரு பி. ஜி. கருத்திருமன் : மெய்ப் பொருளை நாம் காண வேண்டும் என்று சர்க்கார் கட்சியிலுள்ளவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : மெய்ப் பொருளைக் காண்பது வெகு எளிது. சோற்றில் குழம்பை ஊற்றிக்கொண்டால், காய்கறியை வைத்துக்கொண்டு, மிளகாய்த் துண்டத்தைத் தனியாக எடுத்து வைத்து விடுகிறோம்.

திரு பி. ஜி. கருத்திருமன் : மிளகாயையும் எடுத்து நன்றாகச் சாப்பிடுகிறவர்களும் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இருக்கும் இந்தப்பிரச்சினைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து, இந்த நில வருமான வரி இவற்றையெல்லாம் ஒரு சீராக அமைத்து, விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமல் செய்யவேண்டும். வருமான வரியில் கம்பௌண்டிங் ஒரு சிறந்த முறை. அதைச் சீராக அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு......

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினருக்கு மகிழ்ச்சியான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நில வருமான வரி மாறுதல்கள் செய்யும் மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடலாம் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மிக, மிகச் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். அந்த வரியை நல்ல முறைப்படுத்தி செய்ய முற்படுவதில், எங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பைத் தருகிறோம் என்று சொல்லி, திரு. விநாயகம் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் முக்கியமான கருத்தொன்றை வலியுறுத்தினார்கள். அதில் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். முப்பது ஏக்கர் கொடுக்கலாம் என்று அவர்கள் குறிப்பிட்டதாக எடுத்துக் கொள்ளுகிறேன். திட்டக் கமிஷனும், மத்திய நீர், மின் கமிஷனும் குடும்பம் என்று சொன்னால், மூன்று நபர்கள் என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய விளக்கம் என்ன என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வருவாய்த் துறை மானியங்கள் மீது நடைபெற்ற விவாதத்திற்கு இத்தனை உறுப்பினர்களும் பங்கு எடுத்துக்கொண்டதனால், அவர்களுடைய ஒத்துழைப்புடன் கருத்துரைகளை வழங்கியதற்காக, அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல, ரெவின்யூ துறை என்பதுதான் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து அரசாங்கத்தின் சின்னமாக இருந்து வந்திருக்கிறது. இன்றைக்கும் அது ஒரு ஆழமான கடல். அதில் முத்துக்களைத் தேடி எடுக்கலாம். அகலமான அந்தரம் போல அமைந்திருக்கிறது. அவ்வளவு பெரிய அமைப்பாக இருக்கிறது. இந்த நிர்வாகத்தினைப் பற்றிப் பல்வேறு வகையான கருத்துக்கள் சொல்லப்பட்டன. அவற்றில் நல்ல அம்சங்களை நிறைவேற்றுவதில், இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் முன் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, ரெவின்யூ இலாகாவைத் திருத்தியமைக்க வாய்ப்பு ஏற்பட்டால், இந்த அரசாங்கம் வெற்றிகரமாக நல்ல அரசாங்கமாக மாறி விட்டது என்று எடுத்துக் கொள்ளலாம். அந்த வகையில் காலாகாலமாக பல்வேறு நிலைகள் இருந்து வருகின்றன. உதாரணமாக, இன்றைக்கு தரம் பிரிக்க வேண்டும், அந்த அடிப்படையில் இந்த நிலத்திற்கு வரி போடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், நில வரிக்குச் சட்டம் இருக்கிறதா என்று நானும் தேடித் தேடிப்பார்த்தேன். ஆனால் நில வரிக்குச் சட்டமே இல்லை. நில வரி அனுபவ முறையில் தான் இருக்

கின்றதே அல்லாமல் சட்டம் இல்லை. (குறுக்கீடு) அதற்கென்று சட்டம் இல்லை. There is no permanent Settlement Order—செட்டில் மெண்ட் என்பது வேறு. நிலங்களுக்கு வரிகொடுக்க வேண்டும் என்று சட்டம் இல்லை. ஆக ஒரு சட்டத்தின் மூலம் என்பதல்லாமல், அனுபவத்தின் மூலம் இது செய்யப்படுகிறது. ஆக, இது ஒரு பரந்த, விரிந்த இலாகாவாக இருக்கிறது. அந்த வகையில் மாறியிருக்கிறது. இதுவே நம்முடைய நிர்வாக இயந்திரத்திற்கு அடிப்படை ஆதாரமாக இருக்கிறது. அதன் பேரில் நிர்வாகக் கட்டுக் கோப்புக்கள் அமைக்கும் நிலைகள் இருக்கின்றன.

இந்த மானியத்தில் உறுப்பினர்கள் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார்கள். கடந்த சட்ட சபையில் கூட இவ்வளவு வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வந்ததாக எனக்கு நினைவு இல்லை. உண்மையிலேயே இதைக் கண்டு அரசாங்கம் மிக்க மகிழ்கிறது. பல்வேறு உறுப்பினர்களும், இது பரந்த இலாகாவாக இருப்பதால், பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நான் பதில் சொல்லவில்லை யென்றால், அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று பொருள் அல்ல. அந்தக் கருத்துக்களை யெல்லாம், உறுப்பினர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் பரிசீலனை செய்து, அதற்கான நடவடிக்கைகளை, இந்த அரசாங்கம் எந்தெந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு, எடுக்க முற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதிலே இன்பமான ஒரு செய்தியை, கனம் எதிர்க் கட்சித் தலைவருடைய கவனத்திற்காக, நில வருமான வரி சம்பந்தமாக, மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். விவசாய வருமான வரியைத் திருத்தியமைக்கும் முயற்சியில், காம்பொஷிஷன் முறை அப்படியே இருக்கும், அதற்கான வரிவிகிதங்கள் இரட்டிப்பு ஆகும், 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்கிற வரம்பு 5 ஏக்கர் என்று ஆகும் என்று குறிப்பிட்டார்கள். கனம் உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து, இதே தொடரில் வரவிருக்கும் மசோதாவை இந்த அவையின் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பலாம் என்று அரசாங்கம் செய்திருக்கும் முடிவை கனம் முதல் அமைச்சர் தெரிவித்தார்கள். அதனை இந்த மாமன்றம் வரவேற்கும் என்று நம்புகிறேன். அந்தப் பொறுக்குக் குழுவில், கனம் கிருஷ்ணசாமி கவுண்டர் சொன்னவற்றையெல்லாம் நல்ல வகையில் பரிசீலனை செய்து நல்ல முடிவுகளுக்கு வரும். விவசாய வருமான வரி போடுவதில், தாங்கக் கூடியவர்களுக்கு வரி போடும் நிலைமைகளை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. இப்படித் தான் திருவனந்தபுரத்தில் செய்தார்கள். முன்பு, டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்களோடு விவாதித்த காலத்திலும், விவசாய வருமானத்தின் பேரில் வரி போடும் வகையில்தான் செயல்பட்டிருக்கிறது என்பதை யெல்லாம் தெளிவாக உணர முடிந்தது. அதற்கு வாய்ப்பாக இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவது நலமாக இருக்கும். விரிவாகப் பேச அதிக நேரம் இல்லை. குறைந்த நேரம்தான் கனம் துணைச் சபாநாயகர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மேலோட்டமாக, தலைப்புகளுக்கு மட்டும் பதில் சொல்ல முற்படுகிறேன்.

புஞ்சைக்கு மட்டும் நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இதிலும், 121 லட்சம் ஏக்கருக்கு, பல நஞ்சை நிலங்களுக்கும் பயன் கிடைக்கிறது. புஞ்சை நிலங்கள் மட்டுமல்ல. உதாரணமாக கிருஷ்ணகிரி ரிசர்வாயர், அமராவதி ரிசர்வாயர், லோயர் பவானி ப்ராஜக்ட், மேட்டூர் கனல் ப்ராஜக்ட், நியூ கட்டளை கானல் ப்ராஜக்ட், பரம்பிக்குளம்–ஆளியாறு ப்ராஜக்ட், புள்ளம்பாடி கனல் ப்ராஜக்ட், வைகை ப்ராஜக்ட், வீடூர் ரிசர்வாயர் போன்ற புதிய திட்டங்கள் இருக்கும் இடங்களில் புஞ்சை நிலங்களும் நஞ்சை நிலங்களாக மாறியிருக்கின்றன. அவைகளும் இந்தச் சலுகையால் பயன் பெறமுடியும். கனம் உறுப்பினர் திரு. கருத்திருமன் மாவட்டத்தில், ஈரோடு பகுதியில் லோயர் பவானி திட்டம் இருக்கிறது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 3

அமாராவதித் திட்டம், வைகைத் திட்டம், போன்றவைகளும் இருக்கின்றன. இங்கெல்லாம் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகப் பிரிக்கப்படவில்லை. அவைகளெல்லாம் புஞ்சை என்கிற காரணத்தால், இன்றைக்கு 1,21,00,000 ஏக்கர்கள் நஞ்சை நிலங்கள், புதிய புதிய திட்டங்கள் காரணமாக, வரி ரத்தின் பயனை அடைகின்றன. இதை அரசியல் காரியத்திற்குப் பயன் படுத்தக்கூடாது. இதிலே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் மாவட்டமான கோவை ரொம்ப அனுகூலம் பெறுகிறது. ஏறக் குறைய பூரா நிலத்திற்கும் கூட பலன் கிடைக்கிறது. (மாண்புமிகு முதல் அமைச்சர் குறுக்கிடு) "உணவு அமைச்சர் மாவட்டம்" என்று முதல் அமைச்சர் சொல்லுகிறார்கள். இருக்கட்டும். அவற்றை யெல்லாம் நஞ்சை நிலம் என்று வைத்துக்கொள்ளவில்லை. ஆகவே அவை யெல்லாம் புஞ்சை நிலம் என்பதால் இந்தத் திட்டத்தால் பலன் பெறுகிறது. சட்டத்தின் தடங்கல் காரணமாக நஞ்சை என்று உடனடியாகச் செய்யவில்லை. ஆகவே, இதை அரசியலுக்கு உபயோகிக்க வேண்டியது இல்லை என்பதை நம்முடைய தனி அதிகாரி கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மன்றத்திற்கு எடுத்துக் கூற விரும்புவது என்னவென்றால், இந்த முடிவு, சட்டப் பிரச்சினை அடிப்படையில் எடுக்கப்பட்டது. ஆகவே, அனுகூலம் இல்லாமல் இல்லை. ஐந்தில் நான்கு பகுதிக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. நம்முடைய தனி அதிகாரி, திரு. கெய்வார், ரெவின்யூ போர்டு உயர்தர அதிகாரி, சொல்லியிருப்பதை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்:

"I am slowly coming to the conclusion that it would be of immeasurable benefit to the State if land revenue can be placed above all political controversy and a consensus arrived at regarding its future.

Reverting back to the subject under study, in one village the dry rate for soil 7–1 happens to be Rs. 1–11–0. The single crop rate under second class source of irrigation happens to be Rs. 9–4–0. So, if the dry assessment were to be abolished the net charge that remains over will be Rs. 7–9–0. In the case of another set of lands, the dry assessment is Rs. 1–2–0 and the consolidated wet assessment is Rs. 5–12–0 under a second class source. Deducting the dry assessment what remains will be Rs. 4–10–0. Although these two pieces of lands are drawing water from the same irrigation source the charge which remains in the case of taram 5 wet land (which occupies taram 4 under dry group) is Rs. 4–10–0 and in the case of taram 3 wet land (which occupies taram 2 under group dry) the charge for water is Rs. 7–9–0. When the half net theory was adopted, the grain outturn was the criterion and the issue did not arise in this form.

In this exercise of separating the notional dry assessment from the consolidated wet assessment, leaving behind the residual figure and calling it a water rate, different parcels and pieces of land under the same source of irrigation in a village will come under different rates of water charge........"

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : கனம் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் விரும்பினால் கெய்வார் அறிக்கை அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்படும். நாளை மறுநாள் தரப்படும்.

THIRU K. VINAYAKAM: Till that moment this Demand may be postponed.

1967 ஜூலை 3]

THE HON. THIRU C. N. ANNADURAI; My Friend's argument would have been valid only if we had based our entire discussion on that report. It is proposal to be given only for study.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : கனம் மன்றத்திற்கு மேலும் பெரிய வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் நான் இதனை முடித்து விடுகிறேன்.

"......The implications and the scope and effect of the settlement and resettlement notifications have been the subject matter of authoritative judgments of the Courts. The latest of such authoritative pronouncements have been made in connection with the Manimuthar Project where the reclassification of irrigation sources was challenged. In effect, the settlement and resettlement notifications have now been given a status almost equivalent to a Statute and so long as Government take action under cover of these notifications they will stand judicial challenge and scrutiny."

ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்ல வேண்டுமென்பதற்காக இதனைக் குறிப்பிட்டேன். அந்த ரிப்போர்ட்டையே கூடப் படித்துக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக, தண்டத் தீர்வை பற்றிச் சொன்னார்கள். 20 மடங்கு என்று திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இரண்டையும் சொல்வார்கள். பவானியிலிருக்கும் டெய்ல் எண்ட் பற்றியும் சொல்வார்கள். தண்டத் தீர்வையைப்பற்றியும் சொல்வார்கள். இவ்வாறு இரண்டையும் கூறுவதனால் முரணாகச் சொல்கிறார்கள் என்று சொல்லவில்லை. கடைமடையில் தண்ணீர் வர முடியாமலும் போய்விடும். அந்த நிலையில் முதலில் அப்படிச் செய்வது இல்லை. முதலில் 2 மடங்கு, 4 மடங்கு என்றுதான் உள்ளது. முடியாத சில இடங்களில், பவானி போன்ற இடங்களில் ஆயக்கட்டு உபயோகத்தில் உள்ளன. அதேமாதிரி வைகையில் கம்பம் திட்டம் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இப்படியே மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிறது. பொதுவாக அவைகளை யெல்லாம் சீராக அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக, நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர் திரு. சுப்பையா அவர்களும் மற்ற நண்பர்களும் தரிசு நிலங்களைப்பற்றிச் சொன்னார்கள். இதைப் பொறுத்த வரையில் மந்தமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இந்த அரசாங்கம் பதவி ஏற்றுக் கொண்ட பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதைத் தெளிவாக அறிவிக்கும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய திரு. சுப்பையா முதலியாரவர்கள் சொன்னார்கள் "அன்னஸெஸ்டு வேஸ்டு" என்று. அவைகள் பஞ்சாயத்து பொறுப்புகளிலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தலையிட அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : சர்க்கார்ப் பொறுப்பிலிருக்கும் அஸெஸ்டு வேஸ்டைப் பற்றித்தான் சொன்னேன். அதுமாதிரி நிறைய இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பஞ்சாயத்துக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. அதை எடுக்க யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : கிளாசிபிகேஷன்படி அஸெஸ்டு வேஸ்டு பஞ்சாயத்துக்குப் போகாமல் சர்க்கார்ப் பொறுப்பிலேயே இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியிருந்தால் எப்படிக் கொடுக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்யலாம். எனக்குக் கிடைத்த தகவலின்படி இவைகளில் சில விதிமுறைகளை மாற்ற வேண்டியிருக்கிறது. புறம்போக்கிலே பாதைப் புறம்போக்கு, குளத்துமேட்டுப் புறம்போக்கு, சுடுகாடுப் தோப்பு இவைகளெல்லாம் இருக்கின்றன. மத்திய அரசாங்கத்தின் உதவியோடு 10,000 உழவர்களுக்கு நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்கிற பெரும் திட்டம் உடனடியாக நம்முடைய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. மத்திய சர்க்காரின் உதவி $1\frac{1}{2}$ கோடி ரூபாய். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து 2,000, 3,000 பேர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டாகிவிட்டது. அதுவுமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தரிசு நிலங்களை எடுத்து அஸைன்மெண்டுக்கான தாமதங்கள், அதிகாரிகள் இடைஞ்சல்கள் ஆகியவைகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து அதற்குப்பிறகு ஒரு நல்ல செயல் முறையை, திட்டத்தை அரசாங்கம் தீட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மனைக்கட்டுகள் பற்றி திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள், அவ்வாறிருக்கிற மனைக்கட்டுகளிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாதென்று. அப்புறப்படுத்தக்கூடாதென்ற சட்டம் அடுத்த மாதத்திலிருந்து காலாவதி ஆகிறது. அந்த மனைக்கட்டுகளில் குடி இருப்பவர்கள் வெளியேற வேண்டியதில்லை. விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக "காம்ப்ரிஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன்"-ஐ அடிப்படையாகக் கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு அமல்படுத்தி அதனைச் செயலாக்குவது பற்றி இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன்.

பிற்பகல கூட்டுப் பட்டா, தனிப் பட்டாவைப் பொறுத்தவரையில் திருநெல்வேலி, திருச்சி, செங்கற்பட்டு மாவட்டங்களில் நிலங்கள் கூட்டுப்பட்டாவில் இருக்கின்றன. அவைகளைத் தனிப் பட்டாவாக மாற்ற சில முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களுக்கு இதன் நடைமுறையைப் பார்த்து அதை மீண்டும் அமல் படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதையும் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்தத் திட்டத்தில் பல இடங்களில் இருக்கும் சிரமங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளெல்லாம் அமல்படுத்தப்படும் என்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

கோவில் நிலங்களைப்பற்றித் தஞ்சை மாவட்ட உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கோவில் நிலங்களுக்குரிய குத்தகையைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதற்குச் சட்டமுறைப்படி நமக்கு ஒன்றும் வாய்ப்பு இல்லை. அதைத் தவிர்க்க முடியாத நிலைதான் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முத்திரைத் தாள் சம்பந்தமாகக் குறிப்பாகத் திருத்துறைப்பூண்டி உறுப்பினர் திரு. தருமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். முத்திரைத்தாள் விவகாரத்தைப் பொறுத்த வரையில், முழுக்க முழுக்க இந்த மாநில அரசுக்கு அதில் கொஞ்சங்கூடப் பொறுப்பே இல்லை; முத்திரைத்தாள் பஞ்சத்திற்கும் பற்றுக்குறைக்கும் நாம் பொறுப்பில்லை. நாசிக்கில் இருக்கும், ரூபாய் நோட்டு அச்சடிக்கும் நிலையத்தில்தான் இந்த முத்திரைத் தாள்களும் தயாரிக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. இதுபற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள முத்திரைத் தாள்களும், ஸ்டாம்ப்களும் வேண்டியிருக்கின்றன. அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய அந்தத் தாள்கள் இன்னும் இறக்குமதி செய்யப்படவில்லை

என்பது. அதற்கு அன்னியச் செலாவணி கொடுக்கப்படவில்லை. அதிலே கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள், வெளிநாட்டிலிருந்து முத்திரைத்தாள்களுக்கான காகிதங்களை வாங்குங்கள் என்று இந்த அரசாங்கம் மீண்டும் மீண்டும் எழுதிவிட்டது. சுதேசித் தாள்களிலாவது அச்சிட்டுக் கொடுங்கள் என்று கூடச் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது காஷ்மீருக்கும் பஞ்சாபுக்கும் முத்திரைத் தாள்கள் சுதேசித் தாள்களில் தான் வழங்கப்படுகின்றன. அதையாவது கொஞ்சம் செய்யுங்கள், அல்லது வெளியிலிருந்தாவது இறக்குமதி செய்யுங்கள் என்று நமது முதலமைச்சர் அவர்கள் எழுதிய பிறகும், நாசிக்கிலே இருக்கும் அந்த நிலையம் கொஞ்சம் அசிரத்தையாக இருந்த காரணத்தால் தமிழகத்திலே இந்த நெருக்கடி ஏற்பட்டது. நமது முதலமைச்சர் அவர்கள் இதிலே முயற்சி எடுத்ததற்குப் பிறகு, இன்றைக்கு இந்த நிலைமை அபிவிருத்தி அடைந்து, ஏழு கோடி ரூபாய்க்கு அட்ஹீஸிவ் ஸ்டாம்ப் வந்திருக்கிறது. இந்த அளவிற்கு நிலைமையிலே மாறுதல் வந்திருக்கிறது. அதிலும் சில குறிப்பிட்ட மாறுதலை இந்த முத்திரைத்தாள் துறையிலே செய்திருக்கிறோம். அதைக் குறித்தும் கனம் உறுப்பினர்களில் சிலர் மகிழ்ச்சியாக எடுத்துச் சொன்னார்கள். முதல் தேதியிலிருந்து சப்-ரிஜிஸ்ட்ரார் ரசீது கொடுத்துவிட்டு, பணத்தை நேரடியாக வாங்கிக் கொள்ளலாம் என்ற முறை வருகிறது. அதே மாதிரி எல்லா ட்ரெஷரி ஆபீசர்களும் முத்திரைத் தாள்கள் விற்கலாம் என்று அவர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெறும் காகிதத்தில் பத்திரத்தை எழுதி அட்ஹிஸிவ் ஸ்டாம்ப் ஒட்டிக் கொள்ளலாம் என்ற முறை வந்திருக்கிறது. ஏழு கோடி ரூபாய்க்கு ஸ்டாம்ப் இருப்பதால் இதில் சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். இந்த முறையின் மூலமாக நிலைமையில் மாறுதல் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ளுவதோடு, ஏற்பட்டிருக்கும் முத்திரைத்தாள் நெருக்கடிக்கு இந்த அரசாங்கம் கொஞ்சங்கூடப் பொறுப்பில்லை, மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் நோட்டடிக்கும் நிர்வாகத்தில் இருக்கும் சிலபல கோளாறுகள்தான் இதற்குக் காரணம் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன்.

பஞ்சத்தைப்பற்றியும் உறுப்பினர்கள் சிலர் இங்கே குறிப்பிட்டார்கள். மதுராந்தகம் உறுப்பினர் திரு. கோதண்டம் அவர்கள் மதுராந்தகம் பகுதியில் இருக்கும் நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்கும் நாங்கள் சார்ந்திருக்கிற கட்சியும் இந்தக் காரியங்களில் எவ்வளவு ஈடுபாடு கொண்டு, இந்தப் பஞ்ச நிவாரண வேலைகளில் ஈடுபட்டது என்பதை இந்த நாடு முழுமையும் அறியும். கனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் திண்டிவனம் பகுதி எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் திண்டிவனம் பகுதியும் மிக முக்கியமான பகுதியாகும். திண்டிவனம் பகுதி, மதுராந்தகம் பகுதி சென்னை நகரம் இவையெல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டன. இதற்காக ரூ. 96,46,728 இதுவரையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் திரு. கோதண்டம் அவர்கள் சொன்னதுபோல, எந்த எந்த இடத்திற்கு நிவாரணம் சரியாகக் கிடைக்கவில்லை, இடைஞ்சல்கள் இருக்கின்றன என்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அவைகளைத் தீர்த்து வைக்கும் காரியங்களில் இந்த அரசாங்கம் ஈடுபடும், மேலும் செம்மையாகச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த அரசாங்கம் ரூ. 96,46,728 வரையில் செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களுக்கும், சென்னை மாநகரத்திற்கும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அளித்திருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுமட்டுமல்லாமல், நீர்ப்பாசனம், கண்மாய்கள், ரோடுகள், இப்படிப்பட்டவைகளின் மராமத்து வேலைக்காகவும், மீனவர்களுக்கான கடன்கள் இவற்றிற்காகவும், ஒரு கோடியே 72 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியமாக இரண்டு கோடியே 77 லட்சம் ரூபாயும், கடனாக நான்கு கோடியே 67

லட்சம் ரூபாயும் கேட்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையில் இதுவரையிலும் 36 லட்சம் ரூபாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. 2 கோடி 77 லட்சம் ரூபாய் மானியமாகவும், 4 கோடி 67 லட்சம் ரூபாய் கடனாகவும் இந்தப் பஞ்ச நிவாரணத்திற்காகக் கேட்கப்பட்டதில், இதுவரையில் 36 லட்சம் ரூபாய் தான் கிடைத்திருக்கிறது. ஆனால், இன்னும் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரண்டு கோடி ரூபாய்க்கு வழி வகை காண்பதற்கு நமக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாய் இதற்குச் செலவிடப்படும் என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள், பஞ்சப் பிரதேசம், பற்றாக்குறைப் பிரதேசம் என்று குறிப்பிட்டுச் சொன்ன கருத்துக்களையும் இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, நிரந்தரமாகப் பஞ்சப் பிரதேசமாக இருக்கும் பகுதியைப் பொறுத்த வரையில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்.

சாத்தாங்குளம் தொகுதி உறுப்பினர் அவர்கள் சாத்தான்குளம் பகுதியிலும், உடன்குடிப் பகுதியிலும் உள்ள நிலைமையைக் குறிப்பிட்டார்கள். எங்களுக்கு ஒன்றும் கோபம் இல்லை. எந்தப் பகுதியைப் பொறுத்தும் எந்தவிதமான பாரபட்சமும் கிடையாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களின் பகுதி என்ற காரணத்திற்காக, அவர்களுக்கு ஒரு கருணையோ, அல்லது மற்றவர்களுக்காக ஒரு கெடுதலோ செய்யாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். கருணை ஏதாவது காட்டினோம் என்றால், அது சற்று எதிர்க்கட்சியின் பக்கம் ஆதரவாகச் சாய்ந்தாலும் சாயும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். சாத்தாங்குளம் உறுப்பினர் தெரிவித்த கோரிக்கை எந்த அளவிற்குச் சாத்தியமானது, எந்த அளவிற்கு நியாயமானதாக இருக்கிறது என்பதைக் கருதி, அந்த அளவிற்குச் சாத்தாங்குளம் பகுதி, உடன்குடிப் பகுதியில் இருக்கும் நிலைமை ஆராயப்படும் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவைகளை நான் சொல்லும் நேரத்தில், இன்னும் மற்றவைகளையெல்லாம் சொல்லாததற்குக் காரணம், அவைகளெல்லாம் இந்த அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கும் என்பதுதான்.

இந்த மானியம் மிக முக்கியமான மானியமாகும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மானியமாக இருக்கிறது. புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்த நாட்டை விவசாயத் துறையில் முன்னேற்றும் வகையில் பணியாற்றிக் கொண்டு வருவது தெரிந்ததே. விவசாயப் பெருமக்கள், உழவர் பெருமக்கள் இவர்களுடைய கட்டளையைப் பெற்று இந்த அரசாங்கம் பொறுப்பிற்கு வந்திருக்கும் காரணத்தால்; இந்த நாட்டில் இருக்கும் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, இந்த நாட்டில் மிகப் பெரிய அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தமிழ்நாட்டிலே இருக்கும் மூன்றரை கோடி மக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பின்னாலும், இந்த அரசாங்கத்தின் பின்னாலும் திரண்டிருக்கிறார்கள். நாங்கள், உழவர்களோடு சம்பந்தப்பட்டவர்கள், விவசாயிகளோடு சம்பந்தப்பட்டவர்கள், நிலத்திலே விவசாயம் செய்கிறோம் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்ளுகிற நேரத்தில், எதிர்க் கட்சித் தலைவர் இதை விளக்குவதாகக் கருதிக்கொண்டு, "என்னுடைய குழந்தையை விவசாயத்திற்கு அனுப்பமாட்டேன்" என்று சொன்னது, உண்மைக்குப் புறம்பான நிலையைக் கருத்தில் கொண்டு சொன்னதாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு, இந்த மாமன்றத்தின் முன்னால், நான் உடனடியாக உணவு உற்பத்தித் திட்டத்திற்கான வழிவகை காண்பதற்காக ஒரு தனி அதிகாரியை ரெவின்யூ போர்டின் மூன்றாவது மெம்பரை விளக்கமான ஒரு அறிக்கை அளிக்க வேண்டும் என்று சொன்னது கனம் உறுப்பினர்களின் கவனத்தில் இருக்கலாம். அதன்படி அவர்கள் ஓராண்டில் 25 கோடி ரூபாய் அதிகம் செலவிட்டு, 14 லட்சம் டன் உபரியாக

உற்பத்தி செய்யலாம் என்ற திட்டத்தை அளித்ததும் இந்த மாமன்றத்திற்குத் தெரியும். அதைச் செயல்படுத்துவதற்காகவும் இந்த அரசாங்கம் இங்கே சொன்ன பல்வேறு நிலைமைகள், இவைகளையெல்லாம் இன்னும் துரிதப்படுத்துவதற்காகவும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், ரெவின்யூ இலாக்கா, விவசாய இலாக்கா, உணவு இலாக்கா, மின்சார இலாக்கா, கூட்டுறவு இலாக்கா, பொதுப்பணித்துறை இலாக்கா இவைகளை ஒருங்கிணைத்து, அதை உணவுக் கமிஷனரின் கீழ் கொண்டுவந்து செயல்படுத்தவேண்டும் என்று அவர்கள் கொடுத்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு, துரிதமாக வேலை செய்ய அவர்களை நியமித்திருக்கிறது. அதற்காக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், வருகிற ஓராண்டில் பெரும் அபிவிருத்தியை நம்முடைய உணவுத் துறையில் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறி, எல்லோருமே எல்லா வெட்டுப் பிரேரணைகளையும், நான் கூறிய இந்தப் பதிலை அடிப்படையாகக் கொண்டு, வற்புறுத்தாமல், மானியக் கோரிக்கையை இந்த அவை வழங்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. க. ர. நல்லசிவம் : நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், இப்பொழுதிருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக வேண்டும் என்று விரும்பினோமோ, அதற்குப் பயன்படாத சட்டமாக இருக்கிறது என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா? இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் சரியான சட்டம் என்று கருதுகிறதா ? அல்லது, அதை மாற்ற வேண்டும் என்று இந்த அரசாங்கம் விரும்புகிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள், நிலத்திற்கான உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றி, அதைக் கொண்டுவருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகப் பேசியதாலேயே பல கெடுதல்கள் வந்தன என்று இந்த சர்க்கார் அந்தக் கெடுதல்களை ஏற்படுத்த விரும்பவில்லை.

திரு. கே. விநாயகம் : இந்த மானியத்திற்கு வெட்டுப் பிரேரணை கொண்டுவந்தவன் நான். அப்போழுது நான் பேசவில்லை. நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு மேலும் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறோம். கெய்வார் ரிப்போர்ட்டை எங்களுக்கு முன்னதாகவே கொடுத்திருந்தால், இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்காது. எங்களுக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், நஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கிவிடலாம் என்று சிபார்சு அதில் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். அதன்படிதான் இந்த வெட்டுப் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன். அதில் ஏதாவது அந்த வாக்கியம் இருந்தால், தயவு செய்து படித்துச் சொல்லுங்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் அதைத் தரப் போகிறார்கள் என்று சொல்லுவதால், அதுவரையில் இந்த மானியத்தை ஒத்தி வைக்கலாமா ? இன்க்ரீஸ் ஆப் ஃபுட் ப்ரொடக்‌ஷனைக் குறித்து ஓர் அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும்போது, அதை உடனடியாக அங்கத்தினர்களுக்கும் கொடுத்திருந்தால் சிக்கல் ஏற்படாது, விளக்கத்தைத் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் வெட்டுப் பிரேரணையைக் கொடுத்திருப்போம். மேலும், அசெம்பிளி ஸப்-கமிட்டி போடுவதாக இருந்தால், இந்த செஷனுக்குள்ளேயே அதைப் போட்டு, அடுத்த செஷனுக்குள்ளேயே சட்டம் கொண்டுவருவதாக உறுதி கொடுத்தால், என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் வாபஸ் பெற்றுக் கொள்ளலாமா என்பதைப்பற்றி யோசிக்க முடியும்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : நம்முடைய நண்பர் அவர்கள் தம்முடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுவதற்காக, சில நிபந்தனைகளோடுதான் வாபஸ் வாங்கிக்கொண்டேன் என்று திருப்திபடுவதிலே எனக்கு ஒன்றும் மனக்குறை இல்லை. ஏனென்றால், இது ஏற்கெனவே ஒத்துக்கொண்டது. நிபந்தனை என்று கூட எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. கெய்வார் அறிக்கை இங்கே முதலிலேயே கொடுக்கப்பட்டிருந்தால் இப்பொழுதும் கனம் உறுப்பினர்கள் சொன்ன சுவை

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூலை 3

யான எண்ணங்கள் எங்களுக்குத் தெரியாமல் போயிருக்கும். இதைப் பற்றிக் கனம் உறுப்பினர்கள் என்னதான் கருதுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக இதைப்பற்றி அப்பொழுது எடுக்கவில்லை. இப்பொழுது அச்சாகித் தயாராக இருக்கிறது. நாளை அல்லது மறுநாள் செய்வார் அறிக்கை தரப்படும்.

பொறுக்குக் கமிட்டி போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். அதை விரை வாக அமைக்க வேண்டும், வேலையும் விரைவாக முடிய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அந்த இரண்டும் நடத்தப்படும். அறிக்கை கொடுக்கப்படும். பொறுக்குக் கமிட்டி போடு வதும் விரைவான முறையில் நடத்தப்படும்.

இந்த மானியக் கோரிக்கையை நிறுத்திவைக்கலாமா என்று உறுப் பினர் அவர்கள் கேட்டார்கள். (திரு. கே. விநாயகம் : வேடிக்கை யாகச் சொன்னேன்) அது கோர்ட் வழக்கம் (சிரிப்பு) எந்த வழக்குக்குப் போனாலும், 7-ம் தேதி வைத்துக் கொள்ளலாம், 10-ம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கேட்டு இருக்கும் பழக்கத்தைச் சொன்னார் கள். அவர் தம்முடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்த மாட்டார் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு துணை பேரவைத் தலைவர் : தற்போது மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். முதலில் நிலவரித் துறை ஏற்கனவே 6 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலில், திரு. கே. விநாயகம் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர் மானத்தை வற்புறுத்துகிறார்களா அல்லது திரும்பப் பெற்றுக் கொள் கிறார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

திரு. கே. விநாயகம் : நான் வற்புறுத்துகிறேன்.

கோரிக்கை I-க்கு திரு. கே. விநாயகம் அவர்களின் வெட்டுத் தீர் மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

ஏனைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு துணை பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி.—" கோரிக்கை எண் 1-நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,31,91,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் IV-க்கு மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு துணை பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி.—" கோரிக்கை எண். IV—முத்திரைத் தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ், ரூ. 24,47,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXI-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர் மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி.—" கோரிக்கை எண். XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ், ரூ. 1,36,15,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்க வேண்டும்."

1967 ஜூலை 3]

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXVII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர் மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி.—" கோரிக்கை எண். XXXVII—ஜமீந்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ், ரூ. 11,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. **பிற் பகல் 1-46**

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*219. Notification issued with G.O. Ms. No. 1244, Industries, Labour and Housing (Industries), dated the 6th April 1967, regarding relaxation of the Madras Molasses Control and Regulation Rules, 1958 for continuance of the permission in favour of the A.V.R. and Company, Madras. [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937.)]

220. Notification issued with Roc. No. 198990/66-F1, Director of Rural Development, dated the 16th January 1967 regarding exclusion of Pirakudi village and inclusion within the jurisdiction of the Viraganur Panchayat of Thirupparankundram Panchayat Union, Madurai district. (*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958.)]

221. Notification issued with letter No. K19-91322/G/65, dated the 23rd July 1966, regarding division of Ayakudi Town Panchayat in Madurai and determination of number of members to be returned by each ward. (*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

222. Notification issued with G.O. Ms. No. 4200, Home, dated the 9th December 1966, regarding the exemption of payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to the vehicle belonging to the United States Agency for International

Development Mission to India with effect on the 22nd September 1966. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicle Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).

*223. The Annual Financial Statement for 1967–68 and Supplementary Finance Statement for 1966–67 of the Madras State Electricity Board. [*Laid on the Table of the Houseunder sub-section* (3) *of section* (61) *of the Electricity (Supply) Act,* 1948 (*Central Act* 54 1948.]

B. Reports, Notifications and other papers.

‡ 57. Note on Demand XIII—Education (English and Tamil).

V211,31 N67

N67.3.5

64971

---

* Laid on the Table of the House on 1st July 1967.

‡ Despatched to Members on 30th June 1967.

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE, LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & CO., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & CO., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & CO., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & CO., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram. South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDEIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arco tdistrict.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29.
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

(1)	(2)	(1)	(2)